பக்கங்கள்: இருபத்தாறு

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 6 சனிக்கிழமை (23-10-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:21

## ஜனாதிபதித் தேர்தல் டிசெம்பர் 15க்கு முன்!

கொழும்பு, ஒக்.23

ஜனாதிபதித் தேர்தல் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரத்தின தெரிவித்தார்.

அதற்கு ஏற்ற விதத்தில் நியமனத் திகதி ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

இந்தத் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்காவே வெற்றிபெறுவார் என்றும்-

அவர் மீண்டும் ஜனாதிபதியாக வருவதை எவராலும் தடுக்க முடியாது என்றும் - அவர் மேலும் சொன்னார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதி குறித்து இன்னமும் இறுதி முடிவுசெய்யப்படவில்லை என்றும் -

டிசெம்பர் மாதத்தில் ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சை, முஸ்லிம்களின் ஹஜ் யாத்திரை, பருவமழை ஆகிய விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியுள்ளன என்று பிரதித்தேர்தல் ஆணையாளர் எஸ்.அருந்தவச்செல்வம் 'சஞ்சீவி'க்குத் தெரிவித்தார். (இ-3)

## மேலும் நகர்வுகளை ஆரம்பிக்க வன்னியில் படையினர் முஸ்தீபு?

கொழும்பு,ஒக்.23

வன்னியில் புதிய இராணுவ நடவடிக்கை எந்த வேளையிலும் ஆரம்பிக்கப்படலாம் என்று வன்னிப் படைத் தலைமையகவட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திவட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

கடந்த வாரம் அம்பகாமம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது இடம்பெற்ற கடும் மோதல்களை அடுத்து விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணிகள் சிதறுண்டிருப்பதாலும் -

கடந்தசில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வந்த கடும்மழை தணிந்திருப்பதை அடுத்தும் -

புதிய நகர்வுகளை மேற்கொள்ள படையினர் தயாராகிவருவதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் அணிகள் மீண்டும் அணிதிரள்வதற்குள் அடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்கு நெருக்கமாகச் சென்று சிறு சிறு நடவடிக்கைகளில் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பகுதியில் துருப்புகளும் இராணுவத் தளபாடங்களும் குவிக்கப்படுவதாக வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-3)

# 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்தி பொது வேட்பாளர்!

## சிவசிதம்பரத்தை நிறுத்த முயற்சி?

கொழும்பு, ஒக்ரோபர்·23

**இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தின் அவசியத்தை இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வலியுறுத்தும் நோக்கில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்த கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்களும் தமிழ்ப் பிரமுகர்களும் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.**

இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் ஒன்றின் அவசியத்தை இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வலியுறுத்தும் வகையில் தமிழ் மக்களின் விருப்பத்தை வெளிக்காட்ட ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவும் -

தாயகக்கோட்பாடு, தமிழ் மக்களின் அபிலாஷைகள் ஆகியவற்றை ஒட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லங்காமுடித்த பயணிகள் கப்பல் சேவை

திருகோணமலை, ஒக்.23

இம்மாத இறுதியில் காங்கேசன்துறை புறப்படும் 'லங்காமுடித்த' கப்பலில் பயணம் செய்வோரைப் பதிவு செய்யும் பணி திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரிவு பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பமானது.

இந்தப் பணி இன்றும் தொடர்ந்து இடம்பெறும். (இ-3-150)

## அரியாலையில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,ஒக்.23

அரியாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கிரனேட் வீச்சுச்சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

அரியாலை இராணுவ முகாமைச் சேர்ந்த எச்.ஏ.நந்தகுமார (வயது 28) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் தெரியவந்த போதிலும் அந்தத் தகவலை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (ஐ-15-139-3)

## பாசையூர் சுற்றி வளைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

பாசையூர், ஈச்சமோட்டை ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த ஏனையோர் இந்தப் பகுதிகளில் இருந்து வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

அதேசமயம்பாசையூர்,அரியாலைப் பகுதிகளை அண்டிய கடற்கரைப் பக்கமாக நேற்று முன்தினம் இரவு கடும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. (ஐ-15-3)

## வன்னியில் இன்று போலியோ மருந்து

வவுனியா,ஒக்.23

பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் 2ஆம் சுற்றுப் பணி வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதிலும் கடந்த 16ஆம் திகதி இந்தப் பணி இடம்பெற்ற போதும் -

மருந்து அங்கு எடுத்துச்செல்லப்படாத காரணத்தால் அன்று இடம்பெறவில்லை என்பது தெரிந்ததே. (ஐ-3)

## பெருமாளும் போட்டி?

கொழும்பு, ஒக்.23

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் சந்திரிகா குமாரதுங்கவும் -

ஐ.தே.க. சார்பில் ரணில் விக்கிரமசிங்கவும் - போட்டியிடுவது உறுதியாகிவிட்டது.

இவர்களைவிட அ.வரதராஜப்பெருமாள், முன்னாள் ஆளுநர் காமினி பொன்சேகா, மக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர் தினேஸ்குணவர்த்தன, சமசமாஜக்கட்சிப் பிரமுகர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் போட்டியிடலாம் என அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

தமிழ்க் கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியன இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாகஆராய நாளைகூடுகின்றன. (இ-3)

### சமய வைபவங்களைத் தொடர்ந்து

## சந்திரிகாவின் தேர்தல் பிரசாரம் அநுராதபுரத்தில் இன்று ஆரம்பம்

கொழும்பு,ஒக்.23

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் சந்திரிகா குமாரதுங்க தமது தேர்தல் பிரசாரத்தை சமய வைபவங்களுடன் இன்று அநுராதபுரத்தில் ஆரம்பிக்கின்றார்.

அநுராதபுரம் மகாபோதியில் வெள்ளை அரசு மரத்தடியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட சமய வைபவங்களில் அவர் பங்குபற்றுவார்.

அதைத் தொடர்ந்து அங்கு இடம்பெறும் பகிரங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்.

சுமார் 15லட்சம் ரூபா செலவில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசாரத்தை இம்மாதம் 31 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளார். (ஐ-3)

## நிபந்தனை எதுவுமின்றி சந்திரிகாவுக்கு ஆதரவு!

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.23

ஜனாதிபதித் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவைவழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்க ஐந்து நிபந்தனைகளை முஸ்லிம் காங்கிரஸ் முன்னர் விதித்திருந்தது தெரிந்ததே.

நேற்று முன்தினம் இரவு கூடிய முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழு நீண்டநேரம் ஆராய்ந்தபின்னர் நிபந்தனைகள் எதுவும் இன்றி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு வழங்குவதென முடிவுசெய்துள்ளது.

அதேநேரம - அரசில் அங்கம் வகிக்கும் சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவும் சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்க இருப்பதாக அறிவித்துள்ளன. (இ-3)

## பொ.ஐ.மு.கட்சிகளுடன் ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, ஒக்.23

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி நேற்று மாலை கலந்தாலோசனை நடத்தினார்.

அலரிமாளிகையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. உட்பட தமிழ்க் கட்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் நடத்தும் சூழ்நிலை வடக்கு – கிழக்கில் உண்டா?

### அனைத்துக் கட்சிகள் குழுவை அங்கு அனுப்புமாறு ஐ.தே.க. கோருகின்றது

கொழும்பு,ஒக்.23

வடக்கு - கிழக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை உள்ளதா? என்பதை நேரில் அறிய சகல கட்சிகளும் பிரதிநிதித்துவம் வகிக்கும் குழு ஒன்றை அங்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று அரசாங்கத்திடம் ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.தே.க.பொதுச்செயலாளா காமினி அத்துக்கொறள மற்றும் றொனி டிமெல், கருணசேன கொடித்துவக்கு ஆகியோர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டதகவல் வெளியிடப்பட்டது.

வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை உள்ளதா என்பதை முதலில் உறுதிசெய்ய வேண்டும் என்றும் -

கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழுவை இதற்காக அங்கு அனுப்ப வேண்டும் என்றும் -

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கேரதீவில் கரை ஒதுங்கியவை பொதுமக்களின் சடலங்களா?

யாழ்ப்பாணம்,ஒக்.23

கேரதீவு அறுகுவெளிக் கடற்கரைப் பகுதியில் கடந்த 16ஆம், 19ஆம் திகதிகளில் கரைஒதுங்கிய ஏழு சடலங்களும் பொதுமக்களுடையவையாக இருக்கலாம் எனத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 15ஆம் திகதி நள்ளிரவு கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இளம் பெண் ஒருவர் உட்பட நான்கு பேரின் சடலங்களை சாவகச்சேரிப் பொலீஸார் மறுநாள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்ததும் -

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

இதோ!

தீபாவளியை முன்னிட்டு
மாபெரும்
மலிவு விற்பனை

## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

சாறிகள், ஸ்கேட் & பிளவுஸ், பஞ்சாபி, ரீசேட்
மற்றும்
சூட்டிங், சேட்டிங் இன்னும் பலவகையான
துணிவகைகளை மலிவு விலையில்
தீபாவளி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**4 சாறி - 950 ரூபா மட்டுமே**

அதிரடி மலிவு விற்பனை கையிருப்பு
உள்ள வரை மட்டுமே.

## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P ~ 2139

பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு:
கிளை - சோதி ரெக்ஸ்ரைல்ஸ்
17, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

(C/9475)



யாழ் நகரில்....

## கணனிகள் இறக்குமதி



யாழ் மக்களுக்காக இன்றே கொழும்பில் இருந்து அதி நவீன (Pendium II 400 MHZ ,Pendium III) கணனிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. உங்கள் பதிவுகளை உறுதி செய்த நாளில் இருந்து பத்து நாள்களுக்குள் கணனிகள் உங்கள் கரங்களில் ஒப்படைக்கப்படும்.

பதிவுகளுக்கும் மேலதிக விவரங்களுக்கும்

VISA TRANSPORTS,
27, TEMPLE ROAD,
KOKKUVIL EAST, JAFFNA.
T.P 021 - 3123, FAX 021 - 3123

"எங்கள் சேவை உங்களுக்காக" (70253)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

### கடைகள் திறப்பது சம்பந்தமானதும், கடைகள் பதிவது சம்பந்தமானதுமான அறிவித்தல்கள்

யாழ். சிவில் நிர்வாக அதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைய யாழ். மாவட்டத்தில் ஒடியோ, வீடியோ கசற் விற்பனையாளர்களும், வாடகைக்கு விடுபவர்களும், கசற் நாடா பதிவு செய்யும் நிலையங்களும் உடனடியாக எமது அலுவலகத்தில் தங்களை 31.10. 99க்கு முன் பதிவுசெய்து அவர்கள் பற்றிய முழு விவரங்களையும் தந்து உதவும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தீபாவளியை முன்னிட்டு 23.10.99 தொடக்கம் 07.11.99 வரை சகல வர்த்தகஸ்தாபனங்களும் சனி, ஞாயிறு, வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வேலை செய்யும் வர்த்தக ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் என்று சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:-**

திறக்கும் வர்த்தக ஸ்தாபனங்களின் ஊழியர்களின் நலன் பேணப்பட்டதை வர்த்தக உரிமையாளர்கள் 07.11.99க்குப் பின் 12.11.99 வெள்ளிக்கிழமைக்கு முன் எமது காரியாலயத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்,
இல 27, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

C/9477)

## வீடு வாடகைக்கு தேவை

சகல வசதிகளுடன் மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடு ஒன்று யாழ். பெரிய கடைப் பகுதியில் வாடகைக்கு தேவை.

வீடு அமைவு, தளபாட வசதிகளும், மின்சார வசதி, நவீன கழிவறை வசதி, குழாய் நீர் வசதி ஆகியவற்றைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

நவம்பர் முதலாம் திகதி வீட்டைக் கையளிக்கத் தயாராக இருப்பது அவசியம்.

எதிர்பார்க்கும் வாடகை, மற்றும் பூரண விவரங்களுடன் விளம்பரதாரர், த.பெட்டி இல - 1932, கொழும்பு என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C/9474)


# புதுக்கடை திறப்பு விழா

வாடிக்கையாளரின் நன்மை கருதி தமது சேவையினை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

## ரட்ணாஸ்

ஸ்தாபனத்தாரின் இணை நிறுவனமாக
சிறி ரட்ணாஸ் மோட்டோஸ் & வைண்டிங்
நிறுவனமானது ஞாயிற்றுக்கிழமை (24~10~99)

K.K.S வீதி, சுன்னாகம்.

என்னும் முகவரியில் மிகவும் கோலாகலமாக ஆரம்பிக்கபடவுள்ளது என்பதனை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ரட்ணாஸ்
வெலிங்டன் சந்தி, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(70241)


ஓர் இடைவெளிக்குப் பிறகு.....

மருத்துவ மாணவர்கள்
வழங்கும்

குழந்தை
ம.சண்முகலிங்கத்தின்

**வேள்வித் தீ**

ஒக்ரோபர் 31
கைலாசபதி அரங்கு

(C/9480)

## யாழ். பல்கலைக்கழகம்

வெள்ளி விழாக் கண்காட்சி

மேற்படி கண்காட்சி 23, 24 ஆம் திகதிகள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அனைவரும் வருக.
(சி-9481) பதிவாளர்.


## நாகம்ஸ்

(சுன்னாகம்)
மம்முட்டி - தேவயாணி
நடித்த
**மறுமலர்ச்சி**
காட்சிகள்
11.00, 2.30, 5.15
(புதிய நேரம்)
(70252)



## ராஜா

(யாழ்ப்பாணம்)
கார்த்திக் - நக்மா
மற்றும் பலர் நடித்த
**மேட்டுக்குடி**
10.30, 2.00, 5.00
(C/9345)



## லிபேட்டி தியேட்டர்

(அச்சுவேலி)
விஜயகாந்த்
(இருவேடம்)
நடித்த
**ராஜதுரை**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P.No: 070~21 2223
(70166)



## தபால் மூலம் ஆங்கிலம்

தொழில்புரிவோர், மாணவர்கள் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது.

சுயவிலாசமிட்ட நீள உறையுடன் எழுதவும்.

English Div.
79, Shoe Road,
Colombo - 13..

(70175)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### சின்னத்துரை கிருஷ்ணர்

(தலைமை அலுவலக கூட்டுறவுப்பரிசோதகர், கூட்டுறவுத் திணைக்களம், யாழ். மாவட்டம்)

21.10.99 அன்று அமரரான தலைமை அலுவலக கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சின்னத்துரை கிருஷ்ணர் (வதிரி, கரவெட்டி) அவர்களின் மறைவையிட்டு துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயர்வுற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(C/9478)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தனலட்சுமி இராமு

கோண்டாவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி இராமு 21-10-1999 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் இராமு அவர்களின் அன்பு மனைவியும் ஜெயந்தி, ஜெயதாஸ் (கணக்கியல் ஆசிரியர்), ஜெயக்குமார் (ஜேர்மனி), சுபாதினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயசிறி, சிவநாதன் (ஜேர்மனி), மேனகா (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமியாரும், வினேசன், ஜெனேசன், அனோஜன், கம்சிகா, சிந்து (ஜேர்மனி), திவ்ஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-10-99) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முனியப்பர் கோவிலடி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:-
இ.ஜெயதாஸ்
(மகன்)

### வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்

(உரிமையாளர், சேகரம் அன் சன்ஸ்)

தொண்டமனாற்றைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை இராசசேகரம் (உரிமையாளர், சேகரம் அன் சன்ஸ்) கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற அரசரத்தினம்மாவின் அன்புக்கணவரும் வடிவேற்கரசன், சங்கநிதி, ஸ்ரீபத்மநாபன், கனகேஸ்வரி, பயோதரிஅம்பாள், வத்சலாராணி, தொண்டமநாபன், கேமந்தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் நடேசன், விவேகானந்தன், சிவகுருநாதன், தியாகலிங்கம், பத்மினி, தங்கா, ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்புமாமனாரும் இரத்தினலிங்கத்தின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
இ.ஸ்ரீபத்மநாபன்,

9, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லியடியில் வைத்திய ஆலோசனை
(CONSULTATION)

சத்திரசிகிச்சை நிபுணரின் வைத்திய ஆலோசனை ஒவ்வொரு புதன்கிழமை மாலை 3 மணிக்கு சாயிராம் பார்மசியில் நடைபெறும். ஆலோசனை பெறவிரும்புபவர்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளலாம்.


**சாயிராம் பார்மசி**
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
(நெல்லியடி பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில்)
(70235)

## எமது புதிய ஓடியோ CD வெளியீடுகள்

1. எங்கிருந்தோ அழைக்கும் என் ஜீவன்
2. கண்ணுபடப் போகுதையா
3. கண்ணாலே பேசவா
4. கண்மணி உனக்காக
5. பூங்காற்றே
6. தாஜ்மஹால்
7. டைம்
8. டிக்
9. காதலே வா
10. TAITANIK NON STOP BAILA COMPETITION

**ஓடியன் மியூசிக் சென்ரர்**
கன்னாதிட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம். (70229)

## யூரோமைன்ட்
அக்ரிவ் மல்ரி டிரைக்ஷனல்
அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும் ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

**LANKA NIPPON**
No. 18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction,
Colombo 4. Tel: 589992

உ
சிவமயம்



எழுதுமட்டுவாழ்
## பெரியகேணிச் சிவஞானப் பிள்ளையார்கோவில்
புனராவர்த்தனப் பிரதிஷ்டா
## மகா கும்பாபிஷேகப் பெருவிழா
**20.10.99 முதல் 24.10.99 வரை**

20.10.99 கர்மாரம்பம்:- புதன் மாலை 5 மணிமுதல்
21.10.99 வியாழன் காலை 8 மணி முதல் நூதன மூர்த்தி கிராமப் பிரதஷண ஊர்வலம்
23.10.99 சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை எண்ணெய்க் காப்பு
24.10.99 மகா கும்பாபிஷேகம் ஞாயிறு காலை 9 மண

பிரதமகுரு
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

கோவில் குருக்கள்
க.நாகேஸ்வரக்குருக்கள், எழுதுமட்டுவாழ்

ஆசியுரை:- அருட்கவி சீ.வினாசித்தம்பிப் புலவர், அளவெட்டி
ஆன்மீக உரை:- திரு.கா.கமலநாதன் (B.A) சைவப்புலவர், வரணி.
விசேட மங்கள இசை:- K.M. பஞ்சாபிகேஷன் குழுவினர்.

விளம்பர அன்பளிப்பு
**கஜமுகன் தொலைத் தொடர்பு நிலையம்**
தொலைபேசி இலக்கம் :- உள்நாடு - 070 - 212481
வெளிநாடு - 0094 - 70212481
நாகர் கோவில் வீதி, எழுதுமட்டுவாழ். (70093)

## மங்களகரமான ஆரம்பம் (23-10-99)
**தேவி தொலைத்தொடர்பு சேவை**
உள்ளூர் வெளியூர் தொலைத்தொடர்புகள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்
உள்நாடு இலக்கம் 021 - 3318
வெளிநாடு இலக்கம் 0094 21 - 3318
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
42, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.
(70232)

## கணக்கீடு
D.SAM
20 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி
இன்று 23.10.99 (சனி)
A/L 2000
**பங்குடைமை குறை மாதக் க/கு**
பிரிவு I 10.00 - 11.00 (ப.நே.)
பிரிவு II 1.00 - 2.00 (ப.நே.)
A/L 2001
**சொத்து முடிவு செய்தல்**
11.00 - 12.00 (ப.நே.)
D.M.I
யாழ். நகர்
(C/9452)




## ஒளிமயமான வெண்மைக்கு நவீன தாய்மாரின் புதிய தெரிவு

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**S.V.M**
No. 154, HOSPITAL ROAD.
JAFFNA.
T.P NO:- 021 - 2202
021 - 2991
021 - 2911

**CITY AGENCY**
NO. 158, STANLEY ROAD,
JAFFNA.
T.P NO:- 021 - 2055
021 - 2100

அன்புக்கு அம்மா வெண்மைக்கு நீள்மா
(C/9049)

### பரிசளிப்பு விழா
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் முத்துக்குமாரு அரங்கில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி இராசலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை பரிசில்களை வழங்குவார். (இ-3-51)

### பரீட்சை முடிவு
யாழ். இந்து மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவில் 98ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெறுபேறுகள் வெளியாகி உள்ளன என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

அவற்றை பாடசாலை நேரத்தில் கல்லூரியில் பார்வையிடலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-6)

### கலந்துரையாடல்
சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் ஏற்பாடு செய்துள்ள 'கிரிக்கெட்டும் அதன் பரிமாணங்களும்' என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும்.

இதில் தொடக்க உரையை ஐ.சாந்தன் நிகழ்த்துவார். (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. தினமும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மிகக்குறைந்த விலையில் கிடைக்கும். காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு லக்கி பாம், மத்வடி ஒழுங்கை, திருநெல்வேலி. (70089)

BROILER மற்றும் இறைச்சிக் கோழிகள் தட்டுப்பாடின்றி தினமும் காலை 7மணி தொடக்கம் (பாதிக் கோழி உட்பட)சுகாதாரமுறைப்படி சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை,நுட்பமான நிறுவை சுறுசுறுப்பானசேவை அத்துடன் அடை முட்டையும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர், வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (70103)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (70137)

இறைச்சிக்கோழி புறொயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்ய இலவசம். தொடர்பு:- இல, 31. மான் பாடசாலை வீதி, (கண்ணாவீடியோ சென்ரர் வளவு) உடுவில், சுன்னாகம், விதானைவளவு, பொன்னாலைவீதி, மானிப்பாய். (70151)

## விற்பனைக்குண்டு

LONDON PIANO (சிறு திருத்தங்களுடன்) MODEL No. 112841, OCTOPAD SEVEN DRUMS WITH PEDAL MODEL No. D.D. 50 YAMAHA விற்பனைக்குண்டு. தொடர்பு A.B.ASBURY CHURCH LANE, ARALY NORTH. (70149)

## யாழ்ப்பாணம்

பத்து சிறுகதைகளும் ஒரு கட்டுரையும் இலங்கையின் அண்மைக் கால வரலாற்றைக் கூறுபவை. ஒரு நாவலை வாசித்த உணர்வு ஏற்படும். 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். (70154)

## விற்பனைக்கு

பாக்கர் கிறசர் 14" X 7" லிஸ்ரர் என்ஜின் J.K மொடல் எயர் கொண்டிசனர் FREDRICH IKVA தொடர்பு 312, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P 3090. (70162)

கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட Brand new Hero Honda CD 100 SS (MAROON Colour) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உள்ளன. 73, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (நரசிம்ம ஞானவைரவர் கோயில் அருகில்) (70164)

எனது சொந்தப் பாவனையிலுள்ள Bajaj Scooter விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு M.Vimalanathan, 16/12, Vithanayar Lane, Chundikuli, Jaffna. (70165)

## சித்திவிநாயகா சோதிடம்

சாதகம் எழுத, தீர்க்கமான பலன் அறிய, விவாக தாமதம் கிரகதோசத்திற்கு சரியான பரிகாரம் காண சகல விதமான யந்திரங்களுக்கும் நாடுங்கள். கொழும்பில் 22 வருட அனுபவம் வாய்ந்த சோதிடர் விஸ்வபிரம்மஸ்ரீ மா. தங்கவேல் 9, டச்சுவீதி, சாவகச்சேரி. (70183)

## விண்ணப்பப்படிவம்

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை அங்கீகரிக்கப்பட்ட வேறு சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப்பதியுநர் சேவை, தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் சேவையின் தரம் IIற்கான வினைத்திறமைக்கான தடைப் பரீட்சைக்குரிய படிவம் விற்பனையாகின்றது. தபாலில் பெறுவதாயின் ரூபா 15/= அனுப்பவும் A4 தாளில் தயார் செய்யப்பட்டது. நாயகபாலன் மானிப்பாய். (70124)

## கைத்தொழில் ஆரம்பவிழா

தென்மராட்சி,ஒக்.23

மாகாண கைத்தொழில் அபிவிருத்திச் சபையினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் நான்கு கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க உள்ளனர். இவற்றின் ஆரம்பவிழாவும் பயிற்சி வகுப்பும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறஉள்ளன. (ஐ-117)

---

உ

சிவமயம்

# திருமண அறிவிப்பு

| மணமகன் | மணமகள் |
|---|---|
| செல்வன் கண்ணன் (கனடா) | செல்வி சுகர்ணா (கனடா) |

### திருமண வைபவ இடம்

ELLAS BANGUET HALL
35, DANFORTH ROAD,
TORONTO, ONT
(WARDEN DANFORTH)

காலம்:- 24/10/99 ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் - 12.00 - 1.00 மணி வரை

திரு.திருமதி எஸ்.துரைராஜா,
பாடசாலை வீதி,
கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை.

திரு.திருமதி.செ.தில்லைநாதன்,
(இளைப்பாறிய அதிபர்)
'துவாரகை'
உடுவில் தெற்கு, சுன்னாகம்.

(70121)

---

# இடமாற்றம்

சிவன் கோயில் வடக்கு வீதி S.R.S இல் இயங்கி வந்த சிவன் நகைத்தொழிலகம் எதிர்வரும் 25.10.99 முதல் காங்கேசன்துறை வீதி மல்லாகத்தில் புதுப் பொலிவுடன் ஆரம்பமாகவிருக்கிறது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நா. சிவராசா (ராசன்)
உரிமையாளர்.

(C/9445)

---

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

# பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

அன்புடையீர்!

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம்
24.10.1999 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30 மணிக்கு (S.L.T)
பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.
தவறாது சமுகந்தரவும்.

நன்றி.

திருமதி L.N.ஜோசப்
உபதலைவர்

திருமதி க.தேவராஜா
செயலாளர்

(C/9419)

---

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 11 - 1949



உதிர்வு 17 - 11 - 1994

## அமரர் சிவகுரு - நவரத்தினம்

(உரிமையாளர், கனகா பத்திரிகை அகம், திருநெல்வேலி)
திதி - 23.10.1999

நீங்கள் பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஆனாலும் தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துன்புறும்
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.

சொந்த முகவரி - கனக இல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

தற்போதைய முகவரி - இல. 60, [illegible] வீதி,
திருநெல்வேலி. (C/9425)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.பாலசிங்கம் சுப்பிரமணியம் J.P.U.M
(சட்டத்தரணி)

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்தவரும், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமாகிய திரு.பாலசிங்கம் சுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்கள் 11.10.1999ம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகவும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானாகவும் (J.P.U.M) சத்தியப்பிரமாணம் செய்துள்ளதையிட்டு அவரது சேவை மேன்மேலும் வளரவேண்டுமெனப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்,
நமிலாஸ் தொலைத் தொடர்பகமும்,
கதிரை வாடகைச் சேவையும்,
நெல்லண்டை, பருத்தித்துறை.
Tele/Fax 070 - 212247(Local)
Tele/Fax 0094 - 70 - 212247 (I.D.D)

(70120)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 22 - 06 - 1976



வதையின் பிடியில் 26 - 10 - 1997

வதையில் வாடிய வண்ணமலர்
## அமரர் செல்வன் செ.வரப்பிரகாஷ்


பகிடிவதை எதிர்ப்பு அணியினர்,
Anti Raggers.

(70200)

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 1924 - 09 - 06



விண்ணில் 1999 - 09 - 24

அமரர்
## கந்தசாமி - முருகுப்பிள்ளை
(செல் கொம்பனி)

24.09.1999 அன்று இறைவனடி எய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் 24.10.1999 ஞாயிறு (நாளை) நடைபெற இருக்கும் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

'விமல பவனம்',
K.V.லேன், வேம்படி,
வல்வெட்டித்துறை,

பிரிவால் துயருறும்,
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(69896)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் உயிர் அமைதி வழிபாட்டு அழைப்பும்



தோற்றம் 04 - 08 - 1965

மறைவு 24 - 09 - 1999

அமரர்

## திருமதி மணிவண்ணன் இந்திரகுமாரி

எம் குடும்பத்தின் குல விளக்கே!
ஈன்றொன்று தருவாய் என்றிருக்க,
இறுதியாத்திரை சென்றுவிட்ட தாயே!
அன்புக்கும் பண்பிற்கும் அறிவிற்கும் ஊற்றிடமே!
எம்மை மறந்து சென்றுவிட்ட இந்திராவே!
உன் உயிர் அமைதிபெற
இறைஞ்சுகிறோம் இறைவனை.

அன்னாரின் திடீர் மறைவை அறிந்து எமது துயரில் பங்கு கொண்டு அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்க்கும், மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி, அஞ்சலி செலுத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்க்கும், ஏனையவர்க்கும் நன்றி கூறுவதுடன் 24.10.1999 ஞாயிற்றுக்கிழமை (நாளை) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உயிர் அமைதி வழிபாட்டிலும் மதிய உணவிலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.


நன்றி.

கணவன், பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

'முருகன் அகம்'
சில்லாலை மேற்கு
பண்டத்தரிப்பு.

(70127)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 04 - 09 - 1947

மறைவு 23 - 09 - 1999

## சின்னத்தம்பி கந்தசாமி

எங்கள் அன்பின் ஆருயிர் ஐயாவே!
நீங்கள் எங்களை ஆளாக்கிவிட்டு விட்டு
பாதி வழியிலே சென்ற விடயமென்னவோ?
காலனவன் அழைப்பினை ஏற்றதனாலோ
எங்களைப் பரிதவிக்க விட்டுச் சென்றீர்
கோடியாண்டுகள் சென்றாலும்
உங்கள் அழகு உருவம் எம்மைவிட்டு
அகலமாட்டாது!


அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

1999-09-23 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்பின் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பரம்பொருளை வேண்டிக்கொள்கிறோம்.

G.S. லேன்,
எருவன்,
கொடிகாமம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

(70159)


உடுவில் வடக்கு சுன்னாகம்

## அருள்மிகு ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தானம்

நூதனப்பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

### 22.10.99 முதல் 24.10.99 வரை

22.10.99 : வெள்ளி காலை 9 மணிக்கு கர்மாரம்பம்
23.10.99 : சனி காலை 7 மணிமுதல் 5 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல்
24.10.99 : ஞாயிறு காலை 6.09 மணிமுதல் 7.20 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேக பிரதம குரு
சிவப்பிரம்மஸ்ரீ சாமி ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள் (கோண்டாவில்)

சொற்பொழிவுகள் - ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர் பண்பாட்டலுவல்கள் இணைப்பாளர், யாழ். பிரதேசம்)
திரு. ஆறு. திருமுருகன்

அருளுரை - மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் M.A.


சிறப்புரை - செ.றொ.யேசுபாலன்
(கிராம சேவையாளர், உடுவில்)

குறிப்பு :- நேரம் யாவும் பழைய நேரப்படி கொள்க. தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்.

இங்ஙனம்
தேவஸ்தானம்.

(சி-9377)

# பி.ஜெ.பர்னான்டோ!



கண்பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்!
மிதப்புப் பற்களுக்கான கிளிப் பொருத்துபவர்!
பல்கட்டுபவர்!



முக்கிய குறிப்பு:~

வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவ மாணவியர், ஆதரவற்ற முதியோருக்கான சலுகை அடிப்படையிலான மூக்குக் கண்ணாடி வழங்குதல்

வசதி குறைந்த மாணவ மாணவியருக்கான சலுகை அடிப்படையிலான பல் கட்டுதல், கிளிப் அமைத்தல் போன்ற பணிகளை ஆரம்பித்துள்ளோம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
லயன். A. ஜெயக்குமாரன்,
பி.ஜெ.பர்னான்டோ,
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:- மோகன்ஸ்,
பிரதான வீதி,
நெல்லியடி.

(C/9416)

# GRAND CHEAP SALE!

## மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை!

## சீமாட்டி (புடைவைக் கடல்)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள், வேட்டி சால்வைகள், ஒறிஜினல் கிப்ஸ் சாரங்கள், பெனியன்கள், ஸ்கேட் & பிளவுஸ், சேட், ரீ சேட், பேபிசூட், கோறா கோறா, பாபறா, இன்ரகூலர், டயானா பிறின்ட், பட்டர் சில்க், சேட்டிங் சூட்டிங் துணிவகைகள் இன்னும் பலப்பல புத்தம் புதிய தரம் மிக்க வர்ண வர்ண ஜவுளித்தினுசுகள்

என்றும் எங்கும் கிடைக்காத
விசேட கழிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!
தரமான 4 அஞ்சலி நைலெக்ஸ் சாறிகள் ரூபா. 1000/= மட்டுமே.
உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்!

மொத்தமாக கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு அதி விசேட கழிவுண்டு!

சீமாட்டி புடைவைக் கடல்,
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இதே மலிவு விற்பனை எமது கிளை நிறுவனமான 'மங்கை சில்க்' கிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

'மங்கை சில்க்'
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சுப முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
**சீமாட்டி**

மங்கை சில்க், 15, நவீன சந்தையிலும்.

C/9433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNOPS

இதழ் : 3

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியூடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## வலிவடக்கு தெல்லிப்பளையில் கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்



மிதிவெடியினால் இரு கால்களும் பாதிக்கப்பட்ட செல்வி பு. பூவதனி தனது துர்ப்பாக்கிய அனுபவத்தையும், ஆலோசனையையும் மாணவர்களுடன் பகிரும் போது. . . . . . . . .

வலிவடக்கு தெல்லிப்பளை மீளக்குடியமர்வு நடைபெறும் பிரதேசம். அங்குள்ள பல பாடசாலைகள் மிதிவெடிகள், ஏவப்பட்டு வெடிக்காமல் இருக்கின்ற வெடிக்கத்தக்க பொருட்கள் என்பவற்றின் அச்சுறுத்தல் மத்தியில் இயங்குகின்றன. எனவே, வலிவடக்கில் மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வின் அவசியத்தை உணர்ந்து, அங்கு இரு பாடசாலைகளில் மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்வினை UNOPS/JRRP ஒக்டோபர் மாதம் முதலாம் வாரம் ஆரம்பித்தது.

இதன், முதற்கட்ட நடவடிக்கையாக ஒக்டோபர் 7ம் திகதி அருணோதயா கல்லூரியிலும், 8ம் திகதி மகாஜனா கல்லூரியிலும் கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கேள்வி பதில்கள் மூலம் கண்ணிவெடி சம்பந்தமான அடிப்படை தகவல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது துர்ப்பாக்கிய அனுபவத்தையும், சில ஆலோசனைகளையும் மாணவர்களுடன் நேரடியாக பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர் நிகழ்ச்சியானது வாரத்தில் ஒரு தடவை, நவம்பர் இறுதிவரை மேற்கூறிய இரு பாடசாலைகளிலும் நடைபெற உள்ளது.

## கிராமிய சுகாதார புனரமைப்புத்திட்டம்



கிராமிய சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு UNOPS/JRRP இன் பங்கேற்பு கிராமிய மதிப்பீட்டு குழுவினால் நடத்தப்பட்ட பட்டறைகளில் இருந்து தற்போது தெல்லிப்பளை சுகாதார சேவைகள் பணிமனை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை வாழ் மக்கள் காட்டிய ஆர்வத்தினாலும், பங்களிப்பினாலும் மீளக்குடியமர்வு தொடர்ந்து நடைபெற்று வருவதன் காரணத்தினாலும் இப்பிரிவு தெரிவு செய்யப்பட்டது.

தற்போது தெல்லிப்பளையிலுள்ள சகல கிராமிய மட்ட மருத்துவ நிலையங்களுக்கும், UNOPS/JRRP இன் ஐவர் அடங்கிய பங்கேற்பு கிராமிய மதிப்பீட்டுக்குழு விஜயம் செய்து சகல மருத்துவ அதிகாரிகளையும், அப்பிரதேச மக்களையும் சந்தித்து அவர்களது சுகாதார, மருத்துவ தேவைகளை ஆழமாக கண்டறிந்து திட்டங்களை தீட்டியுள்ளது. இத்திட்டங்களை, மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் Dr. K.T.சிவபாதம் மற்றும் தெல்லிப்பளை, உடுவில் பிரதேச செயலர்கள், பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார மருத்துவமாது, வெளிக்கள உத்தியோகத்தர்கள், அடங்கிய கூட்டத்தில் அவர்களின் தீர்மானத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் அரசாங்கத்தினால் நிறைவேற்றக்கூடிய திட்டங்களும், UNOPS/JRRP இன் உதவி தேவைப்படும் திட்டங்களும் அடையாளம் காணப்பட்டன. இதன் அடிப்படையில் UNOPS/JRRP தொடர் நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள உள்ளது.

## சான்றிதழ் வழங்கல்





UNOPS/JRRP இனால் இளம் பெண்களுக்கு பாபறாமல்வாணி கணனிப்பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டுவரும் கணனிப்பயிற்சி நெறியின் Microsoft Office, Windows ஆகிய பாடங்களில் பயிற்சியை பூர்த்திசெய்து கொண்ட 99 மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் செப்டம்பர் 28 ஆம் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக UNOPS/JRRP திட்ட முகாமையாளர் திரு ஹரி கெல்சத்தும் (Mr.Gary Helseth) மற்றும் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு வைத்திலிங்கம், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்






UNOPS/JRRP இன் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கொக்குவிலில், ஆறு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பெண்களுக்கான தையற் பயிற்சி நிறைவடைந்தது.

இப்பயிற்சிக்காலத்தின் போது தயாரிக்கப்பட்ட ஆடைகள், மற்றும் கைப்பணிப் பொருட்கள் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில், ஒக்டோபர் 9ம் திகதி அன்று கண்காட்சியில் வைக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டன. இவ் வைபவத்தில் பயிற்சியை முடித்துக் கொண்ட 28 பெண்களுக்கு UNOPS/JRRP அணித் தலைவர் ரிச்சாட் கான்றா சான்றிதழ்களை வழங்கினார்.

## கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரங்கள் விநியோகம்



கோழிவளர்ப்புப் பண்ணையாளர்களின் உற்பத்தியையும் வருவாயையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்களின் ஊடாக யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், வேலணை, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பிரதேசத்தை சேர்ந்த 99 கோழிவளர்ப்புப் பண்ணையாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு பற்றறி மூலம் இயங்கும் அடைப்பொரி இயந்திரங்களை கடந்த ஆண்டு பிற்பகுதியில் UNOPS/JRRP வழங்கியுள்ளது.

கடந்த ஆறு மாத காலமாக மேற்பார்வை செய்யப்பட்டு வருவதன் மூலம் 50 வீதமான பயனாளிகள் இவ்வியந்திரங்களை சிறப்பாக பயன்படுத்தி பலன் பெறுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

செய்திக்கொத்து அறிக்கை தொடர்பான உங்கள் சந்தேகங்கள், கேள்விகளுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

*Programme Manager*
*Public Information Team*
*UNOPS/JRRP*
*125, Temple Road*
*Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Catch it...

## IBMS வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்

## Massive Scholarship Scheme..........................

In a bit to identify students and help them, finance their computer education, **IBMS** is conducting a scholarship Aptitude/General Knowledge test for deserving students

- The top rankers in the scholarship test will be awarded scholarship in the form of 100% discount on total fees for Diploma course.
- Participants scoring 75% and above are entitled to a 50% discount on total fees for Diploma courses.
- Participants scoring 60% and above are entitled to a 30% discount on total fees for Diploma courses.

**Registration Slip**

Name:

Age: Sex: Male Female

NIC No:

Res. Address:.....................................................................................

.....................................................................................

.....................................................................................

முற்றாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ரூபா 100 க்குரிய காசோலையும் இணைத்து அனுப்பவும். காசோலைகள் யாவும் The Director, IBMS என முகவரி இடப்பட்டு யாழ் பிரதான தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பவும.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம் closing date 30-11-1999

**Do you want a high profile computer education at low cost?**

If the answer is "yes" Select **IBMS**

Why **IBMS** ... ......

1. The syllabus confirms the Sri Lankan & global standard.
2. Panel of lecturers either University qualified or member of the Sri Lankan Computer Society.
3. Panel of advisers consisting academics, leading personalities from public & private sector
4. Library equipped with fine collections of CD ROMs & Books

**அத்துடன்**

5. **Unlimited practical hours.**

***TO BE THE BEST JOIN THE BEST OF BEST***

Contact:
**IBMS**
No.701 K.K.S. Road,
Jaffna (near Jaffna Hindu College).

IBMS
CENTER FOR COMPUTER TRAINING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

## கரவெட்டி

## வருடாந்த பரிசளிப்பு விழா ~ 1999

இடம்:- பாடசாலை திறந்தவெளி அரங்கு

காலம்:- 23.10.1999 சனிக்கிழமை (இன்று பி.ப 2.00 மணி)

தலைவர்:- திரு.சி.சிற்றம்பலம் (அதிபர்)

பிரதம விருந்தினர்:- திரு.செ.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், கரவெட்டி)

பரிசில் வழங்குபவர்:- திருமதி.ச.ஸ்ரீநிவாசன்.

க.பொ.த.(உ/த) -1997 பரீட்சைக்கு எமது பாடசாலையிலிருந்து தோற்றி, பல்கலைக் கழகத்துக்கு பின்வரும் கற்கைநெறிகளுக்கு முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு பின்வருவோர் நினைவாக புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

| கற்கைநெறிகள் | நினைவுக்குரியவர் பெயர் | வழங்குபவர் பெயர் | பரிசில்பெறுபவர் |
|---|---|---|---|
| (பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக வழங்குபவை) | | | |
| மருத்துவம் | திருமதி.பரஞ்சோதி பாஸ்கரன் | திரு.ந.பாஸ்கரன் (கொழும்பு) | செல்வன் இ.சுரேஸ்குமார் |
| (பழையமாணவர் சங்கம் சார்பாக வழங்கப்படுபவை) | | | |
| 1. பொறியியல் | திருமதி.பாக்கியம் ஐயாத்துரை | திரு.இ.ஐயாத்துரை (அரசாங்க அதிபர், கிளிநொச்சி) | செல்வி சி.மணிமேகலை |
| 2. கலை | திரு.இராமநாதன் பஞ்சாட்சரம் | திரு.ப.தயாபரன் (சிவசக்தி இரும்பகம்) | செல்வன் ஆ.ரூபகாந்தன் |
| 3. வர்த்தகம் | திருமதி.செல்வரட்ணம் ஐயாத்துரை | திரு.ஐ.சிவநாதன் (மருதம் இரும்பகம்) | செல்வன் சி.முகுந்தன் |
| 4. பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்படுவோர் | திரு.சிதம்பரப்பிள்ளை இரத்தினசிங்கம் | இ.செல்வராஜன் (தொழிலதிபர், கொழும்பு) | 18 பேர் |

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(C/9468) **-பழைய மாணவர் சங்கம்.**

---

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன்

## சாவகச்சேரி அரிமா கழகம் வழங்கும்

ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டிய

## முழுநிலாக் கருத்தரங்கு

We Serve

காலம்:- 24.10.1999 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணி

இடம்:- சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தலைப்பு:- ஐக்கியநாடுகள் தாபனத்தின் தற்போதைய பங்கும் பணியும்

வழங்குபவர்:- பேராசிரியர் செ.பாலச்சந்திரன் (கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

பிரதமவிருந்தினர்:- திரு.பு.சுந்தரம்பிள்ளை - (பிரதேச செயலர், தென்மராட்சி.)

## இசை நிகழ்ச்சி

இடம்:- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

காலம்:- பி.ப. 3.45 - 4.15 வரை

பாட்டு:- சங்கீதவித்துவான் க.இராமநாதன் (விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைப்பீடம்)

வயலின்:- செல்வன் திவாகரன்

மிருதங்கம்:- திரு.எஸ்.துரைராசா.

---

சாவகச்சேரியில் சிறந்த உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு சேவையினை வழங்குபவர்கள்

## வேல்ட் லிங் கொமினிக்கேசன்

## WORLD LINK COMMUNICATION.

| இடம்: | உள்ளூர் தொலைபேசி இலக்கம் | வெளியூர் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 1. 52, டச்சு வீதி, சாவகச்சேரி. | 070 - 21 2263 | 0094 702 12263 |
| | 070 - 21 2403 | 0094 702 12403 |
| | FAX - 070 - 21 2263 | FAX 0094 702 12263 |
| 2. நுணாவில் சந்தி, சாவகச்சேரி. | 070 - 21 2[illegible] | [illegible] 2244 |

(C/9470)

---

## 'போயா' கருத்தரங்கு

பொருள்:- 'முதியோர் எம் குடும்பத்தின் சொத்துக்கள்'

கருத்துரை வழங்குபவர்:-
'சமூகஜோதி' திரு.கா.கணேசதாசன் ஜே.பி
(ஓய்வு பெற்ற அதிபர்)

காலம்:- 24.10.1999 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- பி.ப 3.30 மணி (புதிய நேரம்)

இடம்:- 'அகவொளி'
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

முதுமை என்பதோர் அழகினைப் பற்றி அறிய உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(70230) - இயக்குநர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



உதிர்வு 23 - 09 - 1999

மலர்வு 02 - 11 - 1922

## திருமதி அமராவதி கனகசுந்தரம்

(நேசம்)

**ஆருயிர் அம்மா!**

ஓராயிரம் மைல்கள் கடந்து ஓடிவந்தேன் காண உங்களைப், பாராமலே தடங்கி நின்றேன் பரிதவிப்புடன் தலைநகரின் படிக்கட்டில்,சீராட்டிப் பாராட்டிச் செம்மையாய் எமைவளர்த்த ஆசை அன்னையே,போராடியும் உயிருடன் காணமுடியாத பாவி மகளாகக் கலங்கி நிற்கின்றேன்.எத்தனை பிறவிகள் நாமெடுத்தாலும் உங்களுக்கே நாங்கள் பிள்ளைகளாகிட,அத்தனையும் செய்திடும் ஆண்டவனிடம் அருளிடவேண்டுமென அழுகின்றோம். மெழுகாக உருகிநின்று ஒளிகாட்டி மறைந்தாலும் உங்களை வானில்நின்று,அழகாக வரவேற்பார்கள் இளையமகளும்; மருமகனும் ஆசையுடனே என்பதுதான் ஆறுதல்...

எங்கள் துயரில் துணைநின்ற அனைவருக்கும் அன்பு கலந்த நன்றி. இன்று (23.10.1999) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை இத்தால் அன்புடன் அழைக்கின்றோம்.

'மிதிலை'
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.


பிரிவால் துயருறும்
கணவர்,பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

தகவல்:- திருமதி சாவித்திரி நடேசன் (மகள்).

(C/9431)

---

## காணவில்லை



கடந்த 26-09-99 ஆம் திகதி நண்பகல் வல்லிபுரக் கோவிலுக்கு புறப்பட்டுச் சென்ற புலோலி தெற்கைச் சேர்ந்த **கணபதிப் பிள்ளை மகேந்திரராசா** (வயது 82) என்பவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டவர்கள், இவர் பற்றிய தகவல்களை கிராமக் கோட்டுச் சந்தியிலுள்ள கங்கை கொமினிகேசன் 070-21 2289, 021-2258, 021-3245 இலக்கங்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு வழங்கவும்.

தகவல்:
ம. தேவராஜா,
புலோலி தெற்கு,புலோலி.

(70157)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிகள் கடந்த மூன்று வாரங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. பட்டமளிப்பு, நினைவுப்பேருரைகள், கலைவிழா, கட்டடத் திறப்புவிழா, கண்காட்சி, இறந்தவர்களை நினைவு கூருதல் என்று நிகழ்ச்சிகள் அனுமார் வால் போன்று நீண்டு கொண்டே செல்கின்றன.

இந்த விழாக்களிப்பில் பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேரும் மாணவர்கள் மீதான பகிடிவதை 'ராகிங்' கொடுமை மறைக்கப்பட்டுவிட்டதாகச் சுட்டிக்காட்டப் படுகிறது. குறிப்பிட்ட ஒரு பீடத்தைச் சேர்ந்த மூத்த மாணவர்கள் புதியவர்களை விரசமான முறையிலும் இம்சைப்படுத்தியும் பகிடிவதை செய்வதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

'ரும் ராகிங்' எனப்படும் அறைக்கு அழைத்துச் செய்யப்படும் பகிடிவதையின்போது ஆடைகளை முற்றாகக் களையுமாறும், 'ரிப்ஸ்' அடிக்குமாறும், மது பானம் அருந்துமாறும், சிகரெட் புகைக்குமாறும் புதியவர்களைப் பலாத்காரம் செய்கிறார்களாம் மூத்தவர்கள். தூஷண வார்த்தைகளைப் பேசும் அவர்கள், புதியவர்களையும் அவ்வார்த்தைகளைத் திருப்பிக் கூறுமாறு பணிக்கிறார்கள். நிலைமை அபாயகரமான கட்டத்தை எட்டிவருகிறது. பாரதூரமான நிலைமை வராது பாதுகாக்க உதவுங்கள் என்று புதியவர்கள் விசனத்துடனும் விரக்தியுடனும் கெஞ்சுகிறார்கள்.

'ரும் ராகிங்' செய்வதற்காக புதிய மாணவர்களை வீதிகளில் அல்லது வேறு இடங்களில் மட்டும் வைத்துக் கூட்டிச் செல்வதில்லை. அவர்களின் வீடு தேடிச் சென்றும் கூட்டிப்போகிறார்கள். பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக அனுமதிபெற்ற ஒரு மாணவனைத் தேடி மூத்த மாணவர் ஒருவர் தமது நண்பருடன் உடுப்பிட்டியில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார். இரவு ஏழு மணியளவில் வீட்டு வாசலில் நின்று சைக்கிள் மணியை அடித்தபோது, புதிய மாணவனின் தாயார் வந்து விசாரித்தார். வந்தவர் மகனைச் சந்திக்க வேண்டும் என்று கூறினார். தாயாரும் விபரம் இன்னதெனத் தெரியாது மகனிடம் தெரிவித்தார். மகன் தனியாகச் சென்றபோது, வீட்டுவாசலில் வைத்தே பகிடிவதை செய்ய மூத்த மாணவர் முயன்றார். அதற்குப் புதிய மாணவர் மறுத்தபோது, பலமாகத் தாக்கினார், முகத்தில் ஓங்கி அறைந்தார். விடயம் தெரிந்து வீட்டார் வெளியே வந்ததும், 'அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்' என்று சண்டித்தனம் பேசியவாறு தமது நண்பருடன் இடத்தை விட்டுச் சென்றார். புதிய மாணவனின் பெற்றோர்கள் மகனுக்கு, எப்போது என்ன செய்வார்களோ என்ற அச்சத்துடன் நாட்களைக் கழிக்க வேண்டிய நிலை உள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற வரப்பிரகாஷ் பகிடிவதையினால் இறந்த இரண்டாவது ஆண்டு இம்மாதம் 26ஆம் திகதி பூர்த்தியாகிறது. இரண்டு, மூன்று தமிழ் மாணவர்களின் அந்த வன்முறை மனப்போக்கினால் தமிழ் மாணவர் சமுதாயம் முழுவதுமே வெட்கித் தலைகுனிய வேண்டியநிலை உருவாகியுள்ளது!

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் நடத்திய வாணி விழாவின்போது கலந்து கொண்டு பேசிய சிங்களப் பேராசிரியர் ஒருவர், தமிழ் மாணவர்களின் திறமையையும், கூட்டு முயற்சியையும் பெரிதும் சிலாகித்துப் பேசிவிட்டு வரப்பிரகாஷ் மரணம் சம்பந்தமாக குறிப்பிட்டபோது அங்கு கூடியிருந்த எல்லோர் முகங்களும் கறுத்துப்போய்விட்டன. குறிப்பிட்ட விழாவில் கலந்துகொண்ட அன்பர் ஒருவர் இதனை மிகவும் கவலையுடன் கூறினார்.

தமிழ் மாணவர்களின் வன்முறை மனப்போக்கு அவர்களுக்கு மட்டுமன்றி முழுத் தமிழ்ச் சமுதாயத்துக்குமே அவமானத்தை ஏற்படுத்தித் தந்துள்ளது. இதன் பின்னரும் தமிழ் மாணவர்கள் தங்களைத் திருத்தாவிடில் எதிர்காலத் தமிழ்ச் சமுதாயம் சூன்யம் நிறைந்ததாகவே வாழப்போகிறது.

இவர்கள் திருந்துவது எப்போது? படித்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று சொல்லிக் கொள்ள இவர்களுக்கு வெட்கமில்லையா?

* * *

யாழ்ப்பாணத்தில் இப்போது பொருள்களின் விலையோ எக்கச்சக்கம், ஆனால் பதவிகள், பட்டங்கள் மட்டும் மலிவு விலையில் கிடைக்கின்றன. இந்தப் பதவிகளில் இப்போது மிக மலிந்து போயுள்ளது 'சமாதான நீதிவான்' பட்டமாகும். முன்னரெல்லாம், கிராம மக்களின் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய, நற்பழக்க வழக்கமுள்ள, தொண்டு செய்யும் பெரியோரே சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டனர்.

ஆனால் இப்போது வீதிக்குவீதி சமாதான நீதிவான்கள் முளைக்கிறார்கள். சமூக மதிப்புப் பெறாதவர்கள், சேவை செய்யாதவர்கள், ஏனைய தகுதிகள் இல்லாதவர்கள் என்று பலரும் சமாதான நீதிவான் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்கள்.

கொழும்பில் - நீதி அமைச்சில் - சமாதான நீதிவான் பட்டம் கிலோக்கணக்கில் விற்பனை செய்யப்படுகின்றதா என பொதுமக்கள் கிண்டலாகப் பேசிக்கொள்ளும் அளவுக்கு, அளவுகோல் இன்றி சமாதான நீதிவான்கள் நியமிக்கப்படுகிறார்கள். பல சங்கங்களில் பதவி வகித்துச் சுரண்டுபவருக்கு சமாதான நீதிவான் பட்டமா என்று ஒரு வாசகரும், லஞ்சம் வாங்கும் பேர்வழிக்குமா சமாதான நீதிவான் பட்டம் என்று இன்னொரு வாசகரும் எழுதியிருப்பது இரு சோறு பதம்.

உரிய தகுதியும், குணமும் இல்லாதவர்களுக்கும் இந்த நியமனம் வழங்கப்படுவதால் தகுதியுடன் அவற்றைப் பெற்றவர்களுக்கும் மதிப்பில்லாதுபோகிறது.

பெருமைக்கு உரிய இந்தப் பட்டம் தகுதியுள்ளவர்களுடன் சேர்த்து தகுதி இல்லாதவர்களுக்கு வழங்கப்படுவது ஒரு புறமிருக்க -

அர்ப்பனுக்கு அதிர்ஷ்டம் வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான் என்பது போலத் தகுதி, தராதரம் இல்லாதவர்கள் தங்களுக்குத் தாங்களே பாராட்டுத் தெரிவிக்கும் பரிதாபம் வேறு.

ஊரில் உள்ள சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் செய்யப் பின்னின்றாலும், அவற்றுக்குத் தேவையான செலவைத்தாமே பொறுத்துக்கொண்டு பாராட்டு விழாக்கள் நடத்துவோரும் உள்ளனர். சிலர் தாமே தமது சொந்தப் பணத்தில் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள் வெளியிடுகின்றனர்.

சமாதான நீதிவான்கள் மட்டுமன்றி ஏனைய பலரும் தங்களைப் பிரமுகர்களாக ஆக்கிக் கொள்வதற்காக தமது செலவில் பாராட்டுக்களும் பட்டங்களும் தேடிக் கொள்ளும் புதிய ஒரு சமூகநோய் யாழ்ப்பாணத்தில் வேகமாகப் பரவி வருகின்றது. இதனால் தகுதி உள்ளவர்கள் யார்? தகுதி இல்லாதவர்கள் யார்? பாராட்டுப் பெறவேண்டியவர்கள் யார்? பட்டம் பெறவேண்டியவர்கள் யார்? என்ற விவஸ்தையே இல்லாமல் சமூகம் சீரழிந்து போகின்றது.

புகழ் விரும்பிகளாலும், அவர்களுக்கு முட்டுக் கொடுப்பவர்களாலும், முதுகு சொறிபவர்களாலும் சமூகத்தின் அமைப்பும் அந்தஸ்தும் தலைகீழாகும் ஆபத்து உருவாகிவருகிறது. அதற்கு அரசியல்வாதிகளும் அரசாங்கமும் துணைபோவது பெருங்கேடாகும்!

* * *

யாழ்ப்பாண நகரப் பகுதியின் பலஇடங்களிலும் தண்ணீர் உவராக மாறிவருகின்றது. இதன் காரணமாக குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டிய பணி முன்னரைவிட இப்போது அதிகரித்துள்ளது. யாழ். நகர மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம் ஒன்று இப்போது செயற்படுத்தப்படுகின்றது. ஜேர்மனியைச் சேர்ந்த 'ஜி.ரி.இசற்' நிறுவனம் இப்பணியை ஆர்வமாகவும் துரிதமாகவும் செய்துவருகின்றது. இது எல்லோருக்குமே திருப்திதரும் செய்தி.

ஆனால் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்ட வேலைகள் யாழ்.நகரில் போக்குவரத்துக்கு குந்தகம் விளைவிப்பது குறித்து பாதசாரிகளும், வாகன ஓட்டுநர்களும் மிகுந்த அதிருப்தி அடைந்துள்ளனர். அந்த அதிருப்திக்குக் காரணம் இதுதான்;

தண்ணீர்க் குழாய்களை நிலத்துக்குக் கீழே கொண்டு செல்வதற்காக வீதிகள் குறுக்கே வெட்டப்படுகின்றன. இவ்வாறு குறுக்காக வெட்டப்பட்ட இடங்களில் பெரும் பள்ளங்கள், கிடங்குகளாக மாறியுள்ளன. சைக்கிளில் செல்வோரும், நடந்து செல்வோரும், ஏனைய வாகனங்களில் செல்வோரும் இந்தக் கிடங்குகளில் விழுந்து எழும்பிச் செல்கிறார்கள். ஒரு சிலருக்குக் காயங்களும் ஏற்படடுள்ளன.

மழைகாலம் தொடங்கிவிட்டதால் கிடங்குகள் மேலும் பெரிதாகும் சாத்தியம் உண்டு. பெருமழைபெய்து வெள்ளம் போட்டால் கிடங்குகள் இருக்கும் இடம் தெரியாமல் பலரும் அவற்றுக்குள் விழுந்து காயத்துக்கு உள்ளாக நேரிடும்..

இந்த ஆபத்தான நிலையைத் தவிர்ப்பது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பு. வீதிகளுக்குக் குறுக்கே வெட்டப்பட்ட கிடங்குகளை மூடிவிடவேண்டும். உடனடியாகச் செய்வார்களா?

* * *

பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் உண்டாக்குவதற்கு பாடசாலை நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்கும் உதவும் பொருட்டே மாணவர் தலைவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

ஒருவர் தனது பள்ளிக் காலத்தில் மாணவர் முதல்வராக இருந்தார் என்று கூறியதும், அவர் ஒழுக்கம், கட்டுப்பாடு உடையவர் என்று எல்லோரும் எண்ணுவதுண்டு; மதிப்பிடுவதுண்டு. ஆனால் மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவர் தலைவர் ஒருவர் தனக்குக் கிடைத்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தாமே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் மீறியுள்ளார். வேலியேபயிரை மேய்ந்த இந்த நிலையால் ஏனைய பாடசாலை மாணவர் தலைவர்கள் முகத்திலும் கரிபூசப்பட்டுள்ளது!

குறிப்பிட்ட பாடசாலையில் அன்று சரஸ்வதி பூசை. 5ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்கள் இருவர் மண்டபத்தின் ஒரு புறத்தில் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை அழைத்து முறைப்படி எச்சரித்து பூசையில் கலந்து கொள்ளச் செய்யவேண்டிய மாணவ முதல்வர், அந்த இரு மாணவர்களையும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியுள்ளார். ஒரு மாணவனை இரு கன்னங்களையும் பொத்தி அறைந்தார். அது மட்டுமன்றி அவனது காதை முறுக்கினார். பாவம், சிறுவனின் காதில் இருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

அந்த மாணவனை வெகு ரகசியமாக அறை ஒன்றுக்குக் கூட்டிச் சென்று நடந்ததை எவருக்கும் சொல்லக் கூடாது என்று எச்சரித்தார். சரஸ்வதி பூசை நடந்து முடிந்த பின்னபே மாணவன் வீடு செல்ல அனுமதிக்கப் பட்டான். அந்தப் பிஞ்சுச் சிறுவன் இப்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான். மாணவனைத் தாக்கியவர் சாரணர் தலைவர் என்றும் கூறப்படுகின்றது.

தமிழ் மாணவர் சமூகத்தின் ஒழுக்கமும் கட்டுப்பாடும் எங்கே போய் நிற்கப்போகின்றது?

—மின்னல்

# மன்னாரிலும் பரீட்சை நிலையம்

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினால் நடத்தப்படும் பட்டப் பரீட்சைகளுக்கான பரீட்சை நிலையம் ஒன்று மன்னார் மாவட்டத்திலும் நிறுவப்படவுள்ளதாக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகக் கற்கைநெறியைத் தொடருவதற்கென மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் தம்மைப் பதிவு செய்ததை அடுத்தே மன்னாரில் பரீட்சை நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் -

இதன்படி பொதுக்கலைமாணி மற்றும் வணிகமாணிப் பட்டங்களுக்கான பகுதி II பரீட்சைகள் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் -

முதற்கலைத்தேர்வு, [illegible] முதல் தேர்வு என்பன யாழ்ப்பாணம் [illegible] வவுனியா ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் மட்டும்-நடைபெறும் எனவும் மன்னார் மாவட்டத்தில் அமைக் கப்பட்டுள்ள பரீட்சைநிலையத்துக்கான முழு ஒத்துழைப்பை மன்னார் கல்வித்திணைக்களம் வழங்கியுள்ளதாகவும் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு உதவிப் பதிவாளர் தெரிவித்தார்.


(ஐ-7)



யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவைத்தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையை கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் சந்திரசேகரம் நிகழ்த்தியபோது எடுக்கப்பட்டபடத்தை முதலிலும் -

பேராசிரியர் வ.ஆறுமுகம் சேர்.பொன் இராமநாதன் நினைவுப் பேருரை யாற்றுவதை இரண்டாவதாகவும் -

லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (ஐ)



கடந்த 11ஆம் திகதி திறந்துவைக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் கம்பீரமான முகப்புத்தோற்றம் இது.




'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நல்லூரில் உள்ள கழக மைதானத்தில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பதையும் -

வெற்றியீட்டிய அணியினருக்கான கிண்ணத்தை திருமதி பாலசுந்தரம் பிள்ளை வழங்குவதையும் படத்தில் காணலாம்.

*படங்கள்: வலி கிழக்கு செய்தியாளர் பொ.இராஜேஸ்வரன்.*


## தரம் 6 அனுமதி - 2000

**1999 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அனுமதிக்காக 1999.11.08 ஆந் திகதி பி.ப 2 மணிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.**

அதிபர்,
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அதிபர்,
வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

(C/9474)



## அரியதோர் சந்தர்ப்பம்!

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

## இன்று முதல் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சாறி வகைகள், பஞ்சாபி, சூட் வகைகள் மற்றும் பல வகை புடைவைத் தினுசுகளும் சிறப்புத் தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன. எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அனைவர்க்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ராகமல்ஸ் பட்டுச் சோலை,
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

கோலம் சில்க் ஹவுஸ்,
166, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(C/9482)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறைக் கைதிகள் குறித்து ஆராய 10 பேர் கொண்ட குழு

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக்கைதிகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்த பத்துப்பேர் கொண்ட குழு ஒன்றை சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் நேற்று நியமித்துள்ளார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்தவும் -

விசாரணை முடிந்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களின் வழக்குகளை விரைவுபடுத்தவும் -

இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் - அங்கு ஆறுமாதத்துக்குமேல் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விவரங்களை சேகரித்துள்ள சிறைச்சாலை ஆணையாளர் அவற்றை சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளார். (இ-3)

# இ.தொ.கா. ஆதரவு யாருக்கு? 29ஆம் திகதி தெரியவரும்

கொழும்பு, ஒக்.23

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இ.தொ.கா ஆதரவு வழங்குமா? இல்லையா? என்பது குறித்து எதிர்வரும் 29ஆம் திகதியே தெரியவரும் என்று இ.தொ.கா பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து இ.தொ.கா ஆதரவு வழங்கி வருவதாகவும் -

ஜனாதிபதித் தேர்தலில் மலையக மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாக எதிர்வரும் 29ஆம் திகதி கூடும் இந்திய வம்சாவழித் தமிழ் பேரவை முடிவு செய்யும் என்றும் - மேலும் தெரிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இடம்பெறும் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி நேற்று நடத்திய கலந்துரையாடலில் அமைச்சர் எஸ்.தொண்டமான் கலந்து கொண்டார் என்றும் -

அங்கு அவர் கருத்து எதையும் கூறவில்லை என்றும் - அவர் சொன்னார். (இ-3-150)

## இன்று நடப்பவை

கொக்குவில்,ஒக்.23

யாழ். பல்கலைக்கழக 'நுண் கலைமாணி சித்திரமும் வடிவமைப்பும்' கற்கைநெறிக்கான அனுமதித் தேர்வு இன்று சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும். (ஐ-69)

* * *

கைதடி,ஒக்.23

கைதடி நியூட்டன் கல்வி நிலையத்தின் 21ஆவது ஆண்டுவிழா இன்று காலை 9.30 மணிக்கு கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் நிலைய இயக்குநர் செ.சிவபாதசக்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

மகாவித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-74)

* * *

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.23

சாரணர் தலைவர்களுக்கும், குருளைச் சாரணர் தலைவர்களுக்குமான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உயர்தரு சின்னப் பயிற்சி பெற்றவர்கள் அவத்தை ஐந்து பயிற்சி பெறுவது பற்றியும் இரண்டாயிரமாம் ஆண்டு நடத்தப்படவுள்ள பயிற்சிகள் பற்றியும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படவுள்ளது. (க-133)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.23

தேவரையாளி இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க)

## பாகிஸ்தான் வெற்றி

சார்ஜா,ஒக்.23

சார்ஜாவில் மூன்று நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற 'கொக்கா கோலா' கிண்ணத்திற்கான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நேற்று பாகிஸ்தான் அணி இலங்கை அணியை 88 ஓட்டங்களால் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இன்ஸமாம், அன்வர் ஆகியோர் அரைச் சதம் அடித்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 36 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்ளை மட்டுமே பெற்றது. பந்து வீச்சில் பாகிஸ்தான் அணிசார்பாக அஸார் முஹமட் சிறப்பாக பந்து வீசி 5 விக்கெட்டுக்களை கைப்பற்றி ஆட்டநாயகனாகவும், ஆட்டத்தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்டத் தொடர்நாயகனாக இன்ஸமாம் உல் ஹக்கும், சிறந்த பந்து தடுப்பாளராக மொய்ன் கானும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-8)

## கலந்துரையாடல்

கைது செய்யப்பட்டோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் நடத்தவிருக்கும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு நல்லூர் கந்த சுவாமி கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-5)

## படைமுகாம் அருகே நடமாடியவர் கைது

கொழும்பு,ஒக்.23

திருகோணமலையில் உள்ள 22 ஆவது படையணியின் தலைமை அலுவலகத்துக்கு அருகில் நடமாடினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய நேற்றுக் காலை அந்தத் தலைமையகத்துக்குச் செல்ல இருந்தவேளை அந்த நபர் அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த நபரை விசாரணை செய்த போது அவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகியவர் என்பது தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-7)

## சிப்பாய் பலி

வவுனியா,ஒக்.23

ஒட்டுசுட்டான் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினமிரவு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; ஏழு படையினர் காயமடைந்தனர். இ-3-21)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

15 வயதுக்கு உட்பட்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி வீரர்களுக்கு இன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத் தலைவர் கே.இராஜதுரை தெரிவித்தார். (இ-8)

## இன்று

கொக்குவில்,ஒக்.23

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இரண்டாயிரமாம் ஆண்டில் தரம் 7-க்கு சுகாதாரம், உடற்கல்வி ஆகிய பாடங்களை கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான பயிலமர்வு யாழ். கல்வி வலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-69)

## 3 ஆம் தரப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தமாக ஒரே குரலில் தெரிவிக்கும் வகையில் அந்த வேட்பாளர் மூலம் பிரசாரம் செய்யவும் - முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக தமிழ்க் கட்சிகள் மற்றும் பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் பேசிவருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரத்தை பொது வேட்பாளராகச் சிலர் பிரேரித்துள்ளதாகவும் தெரியவந்தது. (இ-3)

## பொ.ஐ.மு கட்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் தலைவர்களும் பங்குபற்றினர்.

நேற்றுப்பிற்பகலில் ஆரம்பமான இந்தக் கலந்துரையாடல் இரவும் தொடர்ந்து இடம்பெற்றது என்றும் -

அங்கு என்ன விடயங்கள் ஆராயப்பட்டன என்ற விவரம் வெளிவரவில்லை என்றும் - கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-150)

## கேரதீவில் கரை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் கடந்த செவ்வாயன்று மிகவும் அழுகிய நிலையில் மூன்று இளைஞர்களின் சடலங்கள் கேரதீவு அறுகுவெளிக் கடற்கரையோரப் பகுதியில் கரை ஒதுங்கியமையும் தெரிந்தவையே.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் அனைவரும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மட்டுவில், மீசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் -

வன்னியில் உள்ள உறவினர்களிடம் பூநகரி ஊடாகச் செல்வதற்காக அறுகுவெளிக் கடற்கரைக்கு வந்த சமயம் இவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகவும் - கூறப்படுகிறது. (ஐ-7-117)

## தேர்தல் நடத்தும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமினி அத்துக்கொறள தெரிவித்தார்.

தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் அழைக்கப்பட வேண்டும் என்றும் -

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வேறுமாவட்டங்களில் வசித்துவருபவர்களின் வாக்குகளில் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என் றும் -

அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில் பேசிய றொனி டிமெல், வடமேல் மாகாண சபைத் தேர்தலில் இடம்பெற்றது போன்ற வன் செயல்கள் ஜனாதிபதித் தேர்தலிலும் இடம்பெற்றால் வீதியில் இறங்கிப் போராடுவோம் என்றார். (இ-3)


## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### முழு நிலா நாள் கருத்தரங்கு

இடம் :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம் :- நாளை (24.10.1999) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)

தலைமை :- பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

கருத்துரை :- பாகிஸ்தான் இராணுவப்புரட்சியும் அதன் பின் விளைவுகளும்

வழங்குபவர் :- அ.குமாரவேல் (விரிவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி.)

அனைவரும் வருக!

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

ஆதரவு :-

தருவயின்

(அலுவலக உபகரணங்கள், பாடசாலைப் பொருள்கள் விற்பனையாளர்கள்)

G11,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C/94[illegible])



சிற்றியின்

## அதிரடி மலிவு விற்பனை

குதூகலமான உங்கள் தீபாவளியின் செலவை மீதப்படுத்த

விற்றுத்தீர்த்தல்

இன்றே முந்துங்கள்
இன்னும் சில தினங்கள் மட்டுமே!

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

73, பெரியகடை, யாழ்ப்பாணம். (C/9409)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வரட்ணம் நடராசா

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி செல்வரட்ணம் நடராசா நேற்று வெள்ளிக்கிழமை (22.10.99) காலமானார். அன்னார் திரு.கந்தன் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி கண்மணி - வள்ளிமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரியும், சிறீகாந்தன் (கனடா), கருணாவதி, பிறேமாவதி, லீலாவதி (சுவிஸ்), ஜெயகாந்தன் (கனடா), புஸ்பவதி (கனடா), மாலாவதி, சந்திரகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவீந்திரநாதன் (பாதுகாப்புப் பரிசோதகர், யாழ். பல்கலைக் கழகம்), இரத்தினராசா, துரைசிங்கம் (சுவிஸ்), குணசந்திரதாஸ் (கனடா), செல்வானந்தன் (ஆசிரியர், நாவற்குழி ம.வி.), சிறிபொன்அரியம் (கனடா), நித்தியகலா (கனடா), வதனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், இராமலிங்கம் (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரியும், ஜெகன், யெகர், ஜெயந்தன், வைஷ்ணவி, மீரா, பவித்திரா, அபிரா, சுகந்தன், சுபாசினி, குவேந்தினி, தீபா, சோபா, துயாநந்த், நிளான், லவன், சுரேஸ், ஆர்த்தி, இராஜானந்தன், ஞானானந்தன், பாலரூபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (23.10.99) பகல் 11 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல்:-
க.நடராசா.

(C/9484)

## துரையப்பா சீவரத்தினம் மான்

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த துரையப்பா சீவரத்தினம் மான் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன மேற்பார்வையாளர்) நேற்று வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் மகிமையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் (இந்தியா), தேவமலர், திருமதி பா.தேவராணி (இந்தியா), செல்வி எலிசா பாக்கியதேவி (U.K), காலஞ்சென்ற திருமதி எலிசபெத் செல்வமணி (U.K), மோசஸ் மான் (U.K),காலஞ்சென்ற சொலமன் மான், திருமதி திரேசா (U.K), திருமதி பிலோமினா (U.K), திருமதி விக்ரோறியா (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், புஸ்பராணி - பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், ஜெனற், ஞானகுணசீலன், ஜெனீந்திரன், திருஞானசந்தன் ஆகியோரின் மாமனாரும், திருமதி இ.மனோன்மணி, சி.எஸ்.மான் (கொழும்பு) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

கெருடாவில்,
சாவகச்சேரி.

தகவல்:-
தேவமலர்
(மகள்)

(70264)

## செல்வி வஜிதா துரைராசா

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை மடத்தைச் சேர்ந்த வஜிதா நேற்று (22.10.99) காலமாகிவிட்டார். இவர் துரைராசா (சைவம்) - நாகரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், சுஜிதா, ரஜனிகாந்தா, வஜிசன், தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். இறுதிக்கிரியைகள் இன்று (23.10.99) நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
T.துரைராசா
(தந்தை)

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(70260)

## சங்கரப்பிள்ளை பொன்னம்பலம்

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பொன்னம்பலம் சிங்கப்பூரில் 21.10.99இல் காலமானார். அன்னார் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், பூவனாம்பிகை, கமலாம்பிகை, சண்முகலிங்கம் ஆகியோரின் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கந்தையாபாக்கியம், சுப்பிரமணியம் பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (22.10.99) சிங்கப்பூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சு.அரியரத்தினம்
(பெறாமகன்)

பயிரிக்கூடல்,
காரைநகர். (70259)

## கணபதிப்பிள்ளை பூபாலசிங்கம்

(Retd. Chief Inspector Of Police)

சாவகச்சேரி வடக்கு மடத்தடி வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பூபாலசிங்கம் 22.10.99 அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் ஆச்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும் சத்தியபாமா(லண்டன் -முன்னாள் உத்தியோகத்தர் - மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) சத்திய சீலன்(லண்டன்), சத்தியதேவி(கனடா) சத்தியானந்தன்(பொறியியலாளர்- லண்டன்) சத்தியேந்திரன்(வைத்தியகலாநிதி, அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதரன் (லண்டன்), ஞானசபேசன்(கனடா), ரமணா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி றோட்,
சாவகச்சேரி.

தகவல்:-
தி.செந்தூரன் (கண்ணன்)
(பேரன்)

(70255)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-10-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களைச் சரியான முறையில் பரிசோதித்து விழிகளில் ஒளிகள் ததும்பிட உடனுக்குடன் கண்ணாடிகளை வழங்கும்



ஒரே இடம்.

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பிரதேச செயலகம் முன்பாக கண்டிவீதி, சாவகச்சேரி.

(C/9284)


## கருத்துக் கலசம் மயூரா

### வெற்றிப் பாதை

நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படி எம்மை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது.

- சுவாமி விவேகானந்தர் -

வாழ்க்கையில் வெற்றி காண வேண்டும். இந்த விருப்பம் இல்லாத எவரும் இருக்கமுடியாது. ஆனால் எல்லோரும் தாம் நினைத்ததை அடைந்து வெற்றிபெறுவதில்லை. மிகக்குறைந்த மனிதர்களே தமது வாழ்க்கையில் உண்மையான வெற்றி காண்கிறார்கள்.

தோல்வி இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை. நினைத்ததை அடையமுடியாமல் ஏமாற்றம் உண்டாவது வழமை. அவ்வாறாயின் தோல்வியைத் தவிர்ப்பது எவ்வாறு? வெற்றி கண்டவர்கள் தோல்வியைச் சந்தித்தது இல்லையா? பல தோல்விகளுக்குப்பின்னர்தான் அவர்களுக்கும் வெற்றிக்கனி கிடைத்தது.

தோல்விகளே வெற்றியின் ஏணிப்படிகள் என்பர். தோல்வியைக் கண்டு துவளாது, முயற்சி செய்தே அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள். அது மட்டுமன்று, வெற்றிப்படிகளில் ஏறியவர்கள் தமக்கு உண்டான தோல்விகளை பெரிதாக வெளியில் சொல்வதில்லை. தமக்கு ஏற்பட்ட தோல்விகள் குறித்து அலசி ஆராய்கிறார்கள். தோல்விதந்த சம்பவங்களை பகுத்துப் பார்க்கிறார்கள். அவற்றில் இருக்கும் வெற்றியின் அம்சங்களைப் பிரித்து நோக்குகிறார்கள்.

அந்த அம்சங்களை தமக்கான அனுபவமாக, ஏன் படிப்பினையாகக் கூடக் கொள்கிறார்கள். தோல்விகளைச் சவால்களாகக் கருதி மேலும் உழைக்கிறார்கள்; கடும் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். இறுதியில் அவர்களுக்கு அவர்களது நெஞ்சங்களுக்கு வெற்றி கிடைத்துவிடுகிறது.

வெற்றிப்படிகளுக்கு உயர்ந்தவர்கள், என்னால் இவ்வளவுதான் முடியும்; இதற்குமேல் இயலாது என்று நினைப்பதில்லை; சொல்வதும் இல்லை. எனது அதிர்ஷ்டம் இவ்வளவுதான், இதற்கு மேல் நான் என்ன செய்யலாம், என்று நாலுபேருக்கு முன் சலித்துக்கொள்வதும் இல்லை.

ஒருவன் அவ்வாறு கூறினால், செயலிழந்தால் அவன் தனது ஆற்றலைத் தானே குறைத்து மதிப்பிடுகிறான் என்பதாகும். உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளரவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் புத்திமதி கூறியிருப்பதை மனதிற்கொள்வது நல்லது.

தமக்குரிய கடமைகளை ஒழுங்காகவும் தவறாமலும் செய்பவர்களும், தம்மால் இயன்றவரை முயற்சி செய்து உழைப்பவர்களும் வெற்றி கண்டே ஆவார்கள்.

வாழ்க்கையில் பெருவெற்றி கண்டவர்கள், சாதனை படைத்தவர்கள் என்னென்ன குணாம்சங்களைத் தமதாக்கி அவ்வாறு உயர்ந்தார்கள் என்பதனைத் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து கொள்வதற்கான ஆர்வமும், ஆசையும் அவசியம். அந்தக் குணங்களை நமக்கு ஏற்ற முறையில் சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று சிந்தித்துச் செயற்படின் வெற்றி நிச்சயமாகும்.

அவரவர் தமக்குள்ளே இதற்கான விழிப்புணர்வை உண்டாக்கினால் எதிலும் வெற்றி; எங்கும் வெற்றியே!

# கவிச்சக்கரவர்த்தி பாடலில் கனி மொழியார்கள் நீராடல்!

மகளிர் நீராடலைச் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் காணலாம். சங்க இலக்கியத்துக்குப் பின் வந்த இலக்கியங்களிலும் பெரும்பாலானவற்றில் நீராடல் சிறப்பாக இடம்பெற்றிருப்பதைக் காணலாம். நீராடற் பாடல்கள் கற்பனை வளமும் அணி நலமும் கொண்டுவிளங்கும் அதேநேரத்தில் ஆட்சிச் சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

பெண்கள் பாதுகாப்பாகவும் அதேநேரத்தில் ஆடிப்பாடி மகிழ்ச்சியாகவும் வாழ்வது அந்த நாட்டிற்குப் பெருமை சேர்க்கும். பெண்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லாமல் ஏக்கத்துடன் வாழும் ஆட்சியில் தர்மம் இருக்கிறது என்று சொல்வது பொருந்தாது.

மகளிர் நீராடல் இலக்கியத்தில் இடம்பெறுவது ஒரு நாட்டின் மழை வளத்தையும் மக்களின் மன மகிழ்வையும் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும். எனவே மகளிர் நீராடற் பாடல்கள் கற்பவர்க்கு இனிமை சேர்ப்பவையாகவும் அந்த நாட்டின் ஆட்சிக்குப் பெருமையை சேர்ப்பவையாகவும் அமையும்.

பாண்டியன் தலையாளங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனது ஆட்சியில் பெண்கள் உண்டு உடுத்து உறங்கிப் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்ததை மாங்குடிகிழார் என்னும் புலவர் ஒரு பாடலிற் காட்டுகிறார்.

பாண்டியனது ஆட்சியில் வாழும் மகளிர் பெரிய பனையின் நுங்கையும் பொலிந்த கரும்பின் சாற்றையும் தென்னையின் இளநீரையும் கலந்து குடிக்கிறார்களாம். இந்த முந்நீரையும் குடித்து விட்டு முந்நீர் என்று சொல்லப்படுகின்ற கடலிற் குதித்து நீராடி மகிழ்கிறார்களாம்.

**'முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்**
**இரும்பனையின் குரும்பை நீரும்**
**பூங்கரும்பின் தீஞ்சாறும்**
**ஓங்கு மணல்குவவுத்தாழைத்**
**தீநீரோடு உடன் விரா அய்**
**முந்நீர் உண்டு முந்நீர்ப்பாயும்**
**தாங்கா உறையுள் நல்லூர்'**

என்று சிறப்பித்துப்பாடுகிறார்.

சங்க இலக்கியத்தில் நீராடலைப் பார்த்த நாம் சங்க இலக்கியத்துக்குப் பின்னர் காப்பிய காலத்தில் கவிச் சக்கரவர்த்தி கம்பரின் பாடலில் நீராடலைப் பார்ப்போம்.

எத்தனையோ தமிழ்க் கவிஞர்கள் வாழ்ந்த போதும் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புக் கம்பருக்கே உரியதாகிவிட்டது. கம்பரிடத்துக் கவி ஒருவருக்கு வேண்டிய சிறப்புக்களாகிய கற்பனை, உணர்ச்சி, அணி நலன், எளிமை, கருத்தாழம் அனைத்தும் இயல்பாக அமைந்திருந்தன. கவிதைக்கு ஓசை பிரதானம் என்பதைக் கம்பரின் பாடல்களில் சிறப்பாகத் தெரிந்துகொள்ளலாம்.

ஓவியக் கலைஞர்கள் தூரிகையால் ஓவியந் தீட்டுவது போலக் கம்பரும் சொல்லால் ஓவியந் தீட்டி இருக்கிறார். கம்பரின் பாடல்கள் அனைத்தும் சொல்லோவியங்களே. பாடலை ஒரு முறை படிக்கும் போதே பாடலுக்குரிய காட்சி மனத்திரையில் தோன்றும்.

### தேவதை போன்றாளின் சிந்தை தடுமாற்றம்!

கம்பர் சொல்லினால் தீட்டிய சில ஓவியங்களைப் பார்ப்போம்.

அந்தப் பெண் சாதாரண அழகி அல்ல. அவள் போன்ற அழகியை மக்களிடையே காணமுடியாது. தேவ உலகத்தில்தான் காணமுடியும். அவள் ஒரு தேவதைபோல விளங்கினாள். அவள் குளக்கரையில் நின்று குளத்தைப் பார்த்தாள். அவளது நிழல் குளத்தில் தெரிந்தது. தனது தோற்றத்தை நிழலிற் கண்டு வேறொரு பெண் என்று அவள் நினைத்தாள். வேறொரு பெண் என்று இவள் சிரித்தாள். நிழற் பெண்ணும் சிரித்தாள். ஒரு முறை இரு முறை அல்லப் பலமுறையும் இவள் சிரிக்கும் போதெல்லாம் அவளும் சிரித்தாள். எனவே இவள் அந்த நிழற் பெண்ணைச் சிரிக்கின்ற காரணத்தால் தன் தோழி என்று நினைத்தாள். தோழிக்கு ஏதாவது பரிசு கொடுக்கவேண்டாமா? தனது முத்து மாலையை கழற்றிக் கொடுத்தாள்.


**'தேன் நகு நறவமாலைச்**
**செறி குழல் தெய்வம் அன்னாள்**
**தானுடைக் கோல மேனி**
**தடத்திடைத் தோன்ற நோக்கி**
**நான் நக நகுகின்றாள் இந்**
**நன்னுதல் தோழி ஆம்' என்று**
**ஊனம்இல் விலையின் ஆரம்**
**உளம் குளிர்ந்து உதவு வாரும்.**

### அன்னத்தை ஆட அழைக்கும் அரிவையர்

விருந்தினரின் உள்ளம் எப்படிப்பட்டது என்பதைக் கூறும் திருவள்ளுவர் அனிச்சம் பூவினும் மென்மையானது என்கிறார்.

பெண்ணின் மேனி எவ்வளவு மென்மையானது என்பதைக் கூற வந்த கம்பர் அதற்கும் பூவின் உதவியைத்தான் நாடுகிறார்.

நீராடும் பெண்களின் மேனி மிக மென்மையான



தாம். எப்படிப்பட்ட மென்மையானது? பெண்கள் நீராடும்போது பூ அவர்களின் தனங்களில் முட்டுகின்றதாம். பூ தனங்களில் முட்டியதையே அவர்களால் தாங்க முடியவில்லையாம். பூ முட்டித்தனங்கள் நொந்தமையால் அவர்கள் வருந்துகிறார்களாம்.

## புலவர் ம.பார்வதிநாதசிவம்

இன்னும் சிலர் நீராடும் போது குளத்தில் அன்னப் பறவைகளைக் கண்டார்களாம். அன்னப் பறவைகள் நடையில் இவர்களுக்குத் தோல்வி அடையாமல் நடந்தனவாம். அன்ன நடையும் இவர்களின் நடையும் ஒன்றை ஒன்று வெல்லா திருப்பது கண்ட பெண்கள் ஓர் உண்மையை அறிந்து கொண்டார்களாம். அதுதான் அன்னங்களுக்கு ஆடற்கலையில் தம்மோடு போட்டியிடத் தெரியாது என்பது. எனவே அன்னங்களைத் தங்களோடு போட்டிஇடுவதற்கு அழைக்கிறார்களாம். அழைப்பவர்கள் சாதாரண அழகிகளா? தேவதைகள் போன்றவர்கள் அல்லவா? அவர்களுடைய இடை மின்னலைப் போன்றதாம். தோள்கள் மூங்கிலைப் போன்றவையாம். அவர்கள் நீரில்மூழ்கி எழும்போது அவர்களது கூந்தல் அவர்களது முக அழகை மறைக்கிறதாம். அவர் மறைக்கும் கூந்தலைக் கையால் அகற்றுகிறார்களாம்.

**மின் ஒத்த இடையினாரும்**
**வேய்ஒத்த தோளினாரும்**
**சின்னத்தின் அகைபந்தி**
**திருமுகம் மறைப் பநீக்கி**
**அன்னத்தை 'வருதி என்னோடு**
**ஆட' என்று அழைக்கின்றோரும்**
**பொன்ஒத்த முலையின் வந்து**
**பூ ஒற்ற உளைக்கின்றாரும்**
**தாமரை மலருக்கும் காதலி முகத்துக்கும்**
**வேறுபாடு அறியாதவன்!**

காதலனும் காதலியும் நீராட வந்தார்கள். இருந்தாற்போல் அவர்களுக்குள் ஊடல் (சிறு கோபம்) ஏற்பட்டது. கோபத்தால் அவளுடைய கண்கள் சிவந்தன. திடீரென்று குளத்தில் இறங்கினாள். அவளது முகம் மட்டும் வெளியே தெரிய நீரில் மூழ்கினாள். முகம் தெரிந்தும் அவளது காதலனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனென்றால் அது தாமரைக்குளம். தாமரை மலர்களிடையே அவளது முகம் ஒரு மலராகக் கலந்துவிட்டது. எது தாமரை எது முகம் என்ற சந்தேகத்துடன் பார்க்கிறான்.

**அங்கு இடை உற்ற குற்றம்**
**யாவது என்று அறிதல் தேற்றாம்**
**செங்கயல் அனைய நாட்டம்**
**சிவப்புறச் சீறிப் போன**
**மங்கை ஓர் கமலச் சூழல்**
**மறைந்தனள் மறைய மைந்தன்**
**'பங்கயம்', 'முகம்' என்று ஓராது**
**ஐயுற்றுப் பார்க்கின்றானும்.**

### கரும்பன்ன இனிய மாதர்

காதலனுக்கு இனிமை தருவதால் அழகிகளை கரும்பின் அன்னார் என் கிறார் கம்பர். கரும்புத் துண்டைக் கையில் எடுத்துச் சுவைத்தால் கரும்புத் துண்டின் முழுப் பகுதியுமே இனிமை செய்யும். காதலியும் காதலனுக்கு அதேபோல இனிமை செய்வதால் கரும்பின் அன்னார் என்றார் கம்பர். இனிமையில் கரும்பை ஒத்த அவர்கள் தோற்றத்தில் பவளத்தையும் கொவ்வைக் கனியையும் தாமரை பூத்தது போல இருக்கிறார்களாம். அவர்கள் சாதாரணமாகப் பேசினாலே அது சங்கீதம் போல இருக்குமாம். பண் உளர் வண்ண வாய் என்கிறார். இப்படிப்பட்ட கண்ணுக்கும் செவிக்கும் மெய்க்கும் இனிய பெண்கள் குளத்தைப் பாாத்தார்களாம். அங்கே கயல் மீனைப் பார்த்தார்களாம். பார்த்துவிட்டு இதென்ன குளத்தின் கண்கள் ஓடித் திரிகின்றன என்று காதலனைக் கேட்டனராம்.

**பண்ஊர் பவளத்தொண்டை**
**பங்கயம் பூத்தது அன்ன**
**வண்ணவாய் குவளைவாள், கண்**
**மருங்கிலாக் கரும்பின் அன்னார்**
**உள்நிறை கயலை நோக்கி**
**'ஓடு நீர்த் தடாங்கட்கெல்லாம்**
**கண் உள ஆம் சொல்?' என்று**
**கணவரை வினவுவாரும்.**

### மனம் எரிந்த ஆடவர்கள்

நீர் விளையாட்டின்போது மகளிர் மார்பிற் பூசிய சந்தனம் அழிந்து விடுகிறது. சந்தனம் அழிந்தமையால் தனங்களில் நகக் குறிகள் தெரிகின்றன. தனங்கள் பொற்குடங்கள் போன்றிருக்கின்றன. நகக் குறிகள் வேள்விக்குரிய பொற்குடங்களில் சிவப்பு நூல் சுற்றி இருப்பது போல் இருக்கின்றன. இக்காட்சியைக் கண்ட ஆடவர்களின் மனம் எரிந்ததாம்.

**எரிந்த சிந்தையர் எத்தனை என்கெனோ?**
**அரிந்த கூர் உசிரால் அழி சாந்து போய்**
**தெரிந்த கொங்கைகள் செவ்விய நூல் புடை**
**வரிந்த பொற்கலசங்களை மானவே?**

இதே போலக் கம்பரின் நீராடற் பாடல்கள அனைத்தும் கற்பனை வளமும் சற்சுவையும் பொருட்சுவையும் அணிநலனும் கொண்டு கற்போர்க்குப் பேரின்பம் நல்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்தளவுக்கு உதவப் போகிறது?

யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்க்கைச் செலவு நாட்டின் ஏனைய மாவட்டங்களை விட மிகவும் அதிகமானது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

போர் நடைபெறும் வன்னிப் பிரதேசத்தின் வாழ்க்கைச் செலவை ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்வது பொருத்தமற்றது என்பதனை எவரும்



"இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆதரவு தாருங்கள்" - ஜனாதிபதி

ஏற்றுக்கொள்வர். வன்னிக்கு உணவு, மருந்து மற்றும் பாவனைப்பொருள்கள் தாராளமாகவும், ஒழுங்காகவும் எடுத்துச்செல்லப்படுவதில்லை. அதனால் பொருள்களுக்குத் தட்டுப்பாடும், விலை உயர்வும் நிரந்தரமாகிவிட்டன. வன்னியையும் அங்கு வாழும் மக்களையும் அரசாங்கம் வேறு கண்ணோடு பார்க்கிறது. அதனால் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைச் செலவு என்றும் உச்சத்திலேயே நிற்கும் என்று எதிர் பார்க்கலாம்.

ஆனால் அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ், சிவில் நிர்வாகம் நடைபெறும் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்க்கைச்செலவும் விலைவாசிகளும் மக்களின் கைகளுக்கு எட்டாதவகையில் உயர்ந்து நிற்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஆகக்குறைந்தது கொழும்பு விலைகளிலாவது குடாநாட்டு மக்களுக்குப் பாவனைப் பொருள்கள் கிடைக்க வழிசெய்வது அரசாங்கத்தின் - அதன் அதிகாரிகளின் - கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஆனால் அரசாங்கத்துக்கும் சரி, கொழும்பில் உள்ள உயர் அரசஅதிகாரிகளுக்கும் சரி, இங்கு பணிபுரியும் அரசாங்க அதிகாரிகளுக்கும் சரி இது குறித்து வேண்டிய அக்கறை இருப்பதாக இல்லை. வலிகாமம் மக்கள் மீளக் குடியமர்ந்த கையோடு குடாநாடு முழுவதிலும் அரசாங்க சிவில் நிர்வாகம் இயங்கத் தொடங்கியது. இன்றோடு சரியாக மூன்றரை வருடங்கள் - 40 மாதங்கள் - குடாநாட்டில் - முழுஅளவில் சிவில் நிர்வாகம் நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களின் வளங்களும் அரச அதிகாரிகளுக்குரிய வசதிகளும் சலுகைகளும் பழைய

## உள்ளும் புறமும்

குறுமுனி

நிலைக்கு வந்துவிட்டன. முன்னர் சம்பளப் பணத்துக்கான கட்டுநிதி இல்லாத அல்லது வந்து சேராத நிலையில் முணுமுணுத்த அதிகாரிகள், இப்போது தாராளமாகப் பணத்தில் புரளுகிறார்கள். முன்னர் சைக்கிளில் பயணம் செய்தவர்கள் இப்போது சொகுசு வாகனங்களில் சவாரி செய்கிறார்கள். மொத்தத்தில் தங்களது வசதி வாய்ப்புக்களையும் "பிழைப்பையும்" பெருக்கிக் கொள்வதில் உள்ள அக்கறையும் கவனமும் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் அவர்களுக்கு இல்லை. இதனை அவர்கள் மறுக்க முனைவார்கள். ஆனால் உண்மை இதுதான்!

யாழ்ப்பாணத்துக்குத் தரைவழிப்பாதை இல்லை என்ற காரணத்தைக் காட்டி, கப்பல் மூலமே பொருள்களைக் கொண்டுவரமுடியும் என்ற நிலையைப் பயன்படுத்தி, உயர் அரச அதிகாரிகள் தங்களது வளங்களைப் பல வழிகளாலும் பெருக்கிக் கொள்வதாகப் பொதுவாகப் பேசப்படுகிறது. இது வெறும் வதந்தி என்று சொல்லிவிடவும் முடியாது. நெருப்பில்லாமல் ஒரு போதும் புகையாது அல்லவா!

நாற்பது மாதங்கள் கடந்தும் மக்களின் வாழ்க்கைச்செலவை, விலைவாசிகளைக் குறைக்க உருப்படியான, ஆக்கபூர்வமான, சீரான, ஒழுங்குமுறையான, நெறிமுறைப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. காரியங்கள் 'தெந்தட்டில்' நடைபெறுகின்றன.

மூன்றரை வருடங்கள் முடிந்தும் மக்களுக்கு வசதியான பிரயாணிகள் கப்பற்சேவை ஒன்றை அரசாங்கத்தினால் நடத்த முடியவில்லை என்பது பெரும் வெட்கக்கேடான ஒன்று. அது ஒருபுறமிருக்க, பொருள்களைக் கொண்டு வருவதிலும் இன்னும் நேர்சீரான ஏற்பாடுகள் இல்லை. அவ்வாறு நேர்ப்படுத்தப்பட்டிருந்தால் உணவுப் பொருள்களுக்கு அடிக்கடி தட்டுப்பாடு உண்டாவதும் விலைகள் உயர்வதும் ஏன்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து மக்களுக்கு நேர்மையான முறையில் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டவர்கள்.

குடாநாட்டுக்கு பொருள்களைக் கொண்டு வருவதில், அதற்கான கப்பல் போக்குவரத்தில் பெரும் தில்லுமுல்லுகள் நடைபெறுவதாக அறியப்படுகிறது. ஆனால் அந்த மோசடிகளும் தில்லுமுல்லுகளும் இலகுவில் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு வெகுசாதுரியமாகவும் நுட்பமாகவும் நடத்தப்படுவதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் சொல்லிக் கொள்கின்றன.

குடாநாட்டுக்கான பொருள்களைக் கொண்டு வரும் சேவையில் அனேகமாக அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு கப்பல் மட்டுமே ஈடுபடுகிறது. ஏனையவை தனியார் கப்பல் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானவை. இது விடயத்தில் அந்த நிறுவனமே ஏகபோகம் அனுபவிக்கிறது. மேலும் கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டுவரும் வேலை, செல்வாக்கும் பண பலமுமிக்க ஒரு குறுகியவட்ட வர்த்தகப் பெருச்சாளிகளின் கையிலேயே உள்ளது.

கப்பல் கட்டணம் மிக அதிகம் என்ற காரணம் காட்டி, அனேகமாக எல்லா பொருள்களின் விலைகளையும் வர்த்தகர்கள் அளவுக்கு அதிகமாக உயர்த்தி விற்கின்றனர். இதனால் யாழ்ப்பாண மக்கள் தாம் வாங்கும் பொருள்களுக்கு கொழும்பு விலைகளைவிட இரண்டு மடங்கு பணத்தைச் செலுத்தவேண்டியுள்ளது -

கப்பற் கட்டணம் அதிகமாக இருப்பதே யாழ்ப்பாணத்தில் வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதற்கு பிரதானகாரணம் - என்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் தனது செப்ரெம்பர் மாத அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

பிந்திக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட தனியார் கப்பல் நிறுவனத்தின் பணி நிறுத்தப்பட்டு விட்டதாக அறியப்படுகிறது. எனினும் மாற்று ஏற்பாடுகள் குறித்த

## அதிக விலைகளைச் சுமக்கும் யாழ்.மக்கள் மீது தரங்குறைந்த பொருள்களும் கட்டியடிக்கப்படுகின்றன!

விவரங்கள் கிடைக்கவில்லை. புதிய ஒழுங்குகள் முந்தியதை விட மோசமானவையாக இல்லாதுவிடின் சரிதான்!

### புதிய விவகாரம்

குடாநாட்டு மக்கள் தாம் வாங்கும் பொருள்களுக்கு அதிக விலைகளைக் கொடுத்து "அழுகிறார்கள்" என்பது பழைய சங்கதி. உச்ச விலை கொடுக்கும் பாவனையாளர்கள் மீது தரம் குறைந்த பொருள்களும் கட்டி அடிக்கப்படுகின்றன என்பது புதிய விவகாரம்!

"பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்" என்பது பழமொழி. குடாநாட்டு மக்களை அப்படி ஒரு நிலைக்கு ஆளாக்கி பணம் சம்பதிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள் சிலர்! கொழும்பில் தரமற்றதாகக் கழித்துவிடப்படும் பொருள்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து பணம் சம்பாதிக்கின்றது ஒரு கும்பல்.

யாழ்ப்பாணத்தில் இப்போது கட்டட வேலைகள் மும்முரமாகவும் வேகமாகவும் நடைபெற்று வருகின்றன. போரினால் சேதமடைந்த கட்டடங்களைத் திருத்துதல், அழிக்கப்பட்ட கட்டடங்களுக்குப் பதிலாக புதியனவற்றை நிர்மாணித்தல், புதியவற்றைக் கட்டுதல் என்று கட்டட வேலைகள் பெருகியுள்ளன. வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் எங்கும் கட்டடவேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதனால் குடாநாட்டில் இப்போது சிமெந்துக்குக் கிராக்கியும் மவுசும் அதிகம். இதனைப் பயன்படுத்தி மக்களிடம் பகற்கொள்ளை அடிக்கும் அநியாயத்தில் ஒரு கூட்டம் ஈடுபட்டுவருகிறது.

அரசாங்கத் துறையினரும், தனியார் துறையினரும் இப்போது சிமெந்தைக் கொழும்பில் இருந்து தருவிக்கிறார்கள். காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைகள் இரண்டிலும் உற்பத்தியான தரம் மிகுந்த "போட்லண்ட்" சிமெந்து லொறி லொறியாகத் தெற்கே எடுத்துச் செல்லப்பட்ட காட்சி இப்போதும் இங்குள்ள மக்களின் மனங்களில் நிழலாடுகிறது.

இங்குள்ள காணி பூமியை விற்று கொழும்பில் வீடுகள் கட்டிய தமிழர்கள் பலர், அவர்கள் தங்கள் சொந்த மண் கொண்டு தயாரிக்கப்படும் சிமெந்துதான் பனைமரம் போல உறுதியானது என்பதனை அறிந்து, யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாகத் தாமே எடுத்துச் சென்று வீடுகளைக் கட்டினார்கள்.

அவற்றில் பலவும் 1983 இனக் கலவரத்தின் போது உடைத்து நொறுக்கப்பட்டது இந்நாட்டின் கேவலமான அரசியல் வரலாற்றில் ஒரு சிறிய புள்ளி!

இந்தளவும் நடந்தபின்னரும் தமிழர்கள் பலர் - யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட பல வர்த்தகப் புள்ளிகள் மட்டுமன்றி உயர் அதிகாரிகளும் - கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கோடி கோடியாகப் பணத்தைக் கொடுத்து வீடுகளை வாங்குகிறார்கள்.

இதனைக் கண்டு"வீரவிதான" இயக்கம் பொறாமைப்படுகிறது.சிங்களவர்களிடம உழைத்த பணத்திலேயே தமிழர்களும் முஸ்லிம்களும் சொத்து உடைமைகளை வாங்குகிறார்கள். அதனால், அவர்களின் வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவுசெய்ய வேண்டாம் என்ற இயக்கத்தை நடத்திவருகிறது. ஆனால் யாழ்ப்பாணத்து மக்களிடம் உழைத்த பணத்திலும் பலர் கொழும்பில் வீடுகள் வாங்குவதாகக் காற்றோடு காற்றாகக் கதைகள் வந்து காதில் விழுகின்றன! அது நிற்க.

கலப்படம் செய்யப்பட்ட அல்லது தரம் குறைந்த சீமெந்து வகைகள் பெருமளவில் குடாநாட்டில் விற்பனையாவதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன. எந்தப் பொருளும் தரப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அங்கீகார முத்திரை பொறிக்கப்படவேண்டும். முன்னர் காங்கேசன் சீமெந்தும் "பைக்கெற்"றில் BSS என்ற முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். பிரிட்டிஷ் தரநிர்ணயத்திற்கு ஏற்ப அந்தச் சீமெந்து உற்பத்தி செய்யப்பட்டது என்பதற்கான முத்திரை அது. இப்போது சீமெந்துப் பைகெற்றில் SLS (Sri Lanka Standard Specification) என்ற முத்திரை பொறிக்கப்படுகிறது. ஸ்ரீலங்காவின் தரநிர்ணயத்துக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது என்பது அதன் அர்த்தம்.

யாழ்ப்பாணத்தில் விற்பனையாகும் சீமெந்து வகைகளில் பலவற்றில் அந்தமுத்திரை இல்லை. தரப்பரிசோதனை உறுதிசெய்யப்படாத சீமெந்து பைக்கெற் கொழும்பில் 250 ரூபாவுக்கு விற்பனையாகிறது. இவை அங்கு சிலசில வேலைகளுக்கே பயன்படுத்தபடுகிறது. ஆனால் இங்கு யாழ்ப்பாணத்தில் 500 ரூபாவுக்கு விற்கப்படும் சீமெந்தை விடயம் தெரியாது எல்லாத் தேவைகளுக்கும் கட்டடவேலைக்காரர்கள் பயன்படுத்துகிறார்கள்.

விற்கப்படும் சீமெந்தின் தரத்தைப் பரிசோதனைசெய்து பார்ப்பதற்கு யாழ்ப்பாணத்தில் எந்த வசதியும் இல்லை. (கொழும்பில் அந்த வசதி உண்டு) அந்த 'வசதியின்மை'யைப் பயன்படுத்தி அரசாங்க நிறுவனம் ஒன்றும் தரமில்லாத சீமெந்தைத் தருவித்து விற்பனைசெய்கிறது.

தரநிர்ணய முத்திரை பொறிக்கப்பட்ட சீமெந்தைப் பார்த்து வாங்குமாறு மக்கள் அறிவுறுத்தப்படவேண்டும் என்று கட்டடவிடயங்கள் தெரிந்த பொறியியலாளர் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

சீமெந்தைப் போலவே தரங்குறைந்த கட்டட கம்பிகள் இங்கு கொண்டுவரப்பட்டு கூடிய விலைகளுக்கு விற்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தரங்குறைந்த சீமெந்து, கம்பிவகைகள் விற்கப்படுவது குறித்து அரசாங்க அதிபருக்கும், படை உயர் அதிகாரிகளுக்கும் கட்டடத்துறை சார்ந்தோர் எடுத்துக் கூறியுள்ளனர். தரப்பரிசோதனை செய்யும் வசதி அளிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். ஆனால் இன்னும் இவை தொடர்பாக நடவடிக்கை எதுவும் இல்லை. அதிகாரிகளின் நடவடிக்கையை முந்திக்கொண்டு தரம் குறைந்த கட்டடப்பொருள்கள் விற்பனை பெருமளவில் செய்யப்படுகின்றன என்பது கசப்பான உண்மை.

இதே வேளை, கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் தருவிக்கும் "அஸ்பெஸ்டஸ்" கூரைத் தகடுகளைக் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பம் செய்து பலநாள்கள் காத்திருக்கவேண்டி உள்ளதாகவும் அலைய நேரிடுவதாகவும் மக்கள் குறைபடுகிறார்கள். ஆனால் தனியார் கம்பனிகளில் உடனுக்குடன் அதிக விலை கொடுத்து வாங்கமுடிகிறதாம். இத்தனைக்கும் ஓடுகள், கூரைத்தகடுகளைக் கப்பலில் கொண்டு வருவதற்கான அனுமதி கூட்டுத்தாபனத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது என்கின்றது ஒரு தகவல்.


யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களின் பணம் கேட்பார் எவருமின்றிப் பல வழிகளாலும் மறைமுகமாகச் சூறையாடப்படுகிறது. இப்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி பணம் "வறுகுவதற்கு" என்றே ஒரு கூட்டம் உண்டு. அதில் பல தரப்பாரும் பங்காளிகள் என்று ஸ்ரீமான் பொதுசனம் தலையில் கைவைக்கிறார்!

### ஜனாதிபதித் தேர்தல்

எதிர்பார்க்கப்பட்டது போல, ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடத்தில் நடைபெறப்போகிறது. இத்தேர்தலை நடத்துவதற்கான பிரகடனத்தை ஜனாதிபதி கடந்த புதன்கிழமை வெளியிட்டார். ஜனாதிபதித் தேர்தல் விதிமுறைகளின் பிரகாரம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் கடைசி வாரத்தில் தேர்தல் நடைபெறும் என நம்பப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இப்போதைய பதவிககாலம் அடுத்தவருடம் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முடிவடைகிறது. சுமார் ஒரு வருட காலம் முந்தியே அவர் தேர்தல் நடத்துவதற்கான பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார்.

தமக்கு மேலும் ஒரு பதவிக்காலத்துக்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்று தேர்தல் மூலம் மக்களின் ஆணையைக் கோரியே ஜனாதிபதி புதன்கிழமை அதற்கான பிரகடனத்தை அரசமைப்புச் சட்டத்தின் 31ஆவது சரத்தின்



"தேர்தலுக்கு நானும் தயார்; நானே வெல்வேன்" - ரணில்

கீழ் வெளியிட்டார்.

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அரசியல் தீர்வுக்காக மக்கள் தமக்கு வாக்களிக்க வேண்டும் என்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் நோக்கம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டு போரை நிறுத்துவதுதான் என்றும் ஜனாதிபதி தமது உரையில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க மக்களின் பூரண ஆதரவு தேவை. அதற்காகவே ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்தத் தீர்மானித்தேன். மக்களின் பூரணஆரதவு கிடைக்குமாயின் தேர்தல் முடிவடைந்து சில மாதங்களில் போரை முடித்து நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவோன் - என்பது அவரது வாக்குறுதியாக அமைந்திருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கென அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனையை முன்னெடுப்பதில், நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்கும் நோக்கத்துடனேயே ஜனாதிபதி தேர்தல் பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார் என்பது அரசியல் அவதானிகள் சிலரின் கருத்து.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று சிங்கள மக்களில் பெரும்பாலானோர் விரும்புகின்றனர். இதனை அரசாங்கம் கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் கண்டறிந்துள்ளது. ஆனால் நாடாளுமன்றத்தில் போதிய - மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற அரசுக்கு வாக்குப்பலம் போதாது. இத்தகைய நிலையில் தனக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்பதைக்காட்டி, தேர்தலில் வென்று தீர்வை நிறைவேற்றும் நோக்குடனேயே இப்போது தேர்தல் பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார் என்பது இன்னும் சில அவதானிகளின் கருத்து. பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க முடியாத சூழ்நிலை காரணமாகவே ஜனதிபதி முன்கூட்டியே தேர்தலை நடத்த உத்தரவிட்டிருக்கிறார். அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் ஜனாதிபதி இந்த முடிவுக்கு வந்துள்ளார் என்பது எதிரணியினரின் கருத்து.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத்தானும் தயார் என்று அறிவித்திருக்கிறார். தமது கட்சி தேர்தலுக்குத்தயாராகவே உள்ளது என்றும் தேர்தலில் வெற்றிபெறுவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, சமாதானத்தை நிலைநாட்டுவதற்குத் தமக்கு ஆதரவளிக்குமாறு மக்களைக் கேட்டுள்ள போதிலும், தமிழ் மக்கள் அதனை நம்பும் நிலையில் இல்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்ற சலிப்படைந்த நிலையில் உள்ளனர்

( XV ஆம் பக்கம் பார்க்க).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மறுபக்கம்

## வார விமர்சனம்

நல்லூர் தாஸ்

# திடீர்ப் பாய்ச்சலால் ஸ்தம்பித்த நகர்வு

'போர்க்கோஷம்V' நடவடிக்கையில் படையினர் மோசமான இழப்பைச் சந்தித்த பின்னர் கிட்டத்தட்ட ஒருமாதகாலம் வன்னிப் போர்முனையில் அமைதி நிலவியது. கடும்மழையைத் தொடர்ந்து படையினரதும் புலிகளினதும் நடவடிக்கைகளில் ஒருவித மந்தநிலை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்தவாரம் திடீரென வன்னிப் பெருநிலப்பரப்பின் கிழக்கு நிலப்பரப்பில் (கண்டிவீதிக்கு கிழக்கே) மோதல்கள் வெடித்தன.

மந்தநிலை பற்றிய எதிர்பார்ப்பின் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட படைநடவடிக்கை ஒன்றை புலிகள் எதிர்பாராத தருணத்தில் ஆரம்பிக்க படையினர் திட்டமிட்டனர். கிழக்கு நிலப்பரப்பில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் முனையாகப் புலிகளின் பிரதேசத்திற்குள் நீண்டிருப்பது அம்பகாமம். 'வெற்றி உறுதி' (ஜெயசிக்குறு) நடவடிக்கையின்போது இந்தப்பகுதி படையினரின் வசம் வந்தது. கிழக்கு நிலப்பரப்பில் புலிகளின் பகுதிக்குள் படையினர் முன்னேறிய ஆகக்கூடிய தூரமாக இந்த முனையே குறிக்கப்படுகிறது. (படத்தில் கவனிக்க)

இந்தமுனையிலிருந்து ஒரு நகர்வுக்கு படையினர் திட்டமிட்டனர். இதற்கான ஏற்பாடுகள் பின்புலமாகவுள்ள ஒலுமடுவிலும் கரிப்பட்டமுறிப்புப் பகுதியிலும் செய்யப்பட்டன.

கடந்த 10 மாதத்திற்கும் கூடிய காலப்பகுதியில் வன்னியில் மேற்கு நிலப்பிரப்பினூடே நகர்வுகள் இடம்பெற்றுவந்தன. 'போர்க்கோஷம்' என்ற நீண்ட படைநடவடிக்கை அந்தப் பிரதேசத்திற்குள்ளே முன்னெடுக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையின் இலக்கு புலிகளை கிழக்கு நிலப்பரப்புக்குள் முடக்குவதும், பூநகரி - மன்னார் நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதுமே என்பது தெளிவான நிலையில் ஆரம்பத்தில் எதிர்ப்பின்றி படையினரை நகரவிட்ட புலிகள் பின்னர் எதிர்ச்சமர்களை தீவிரமாக்கத் தொடங்கினர். புலிகளின் கவனம் இந்தப்பகுதி மீதே (பெரியமடு, பள்ளமடு) அதிகம் திரும்பி இருந்ததால் மழை மந்தாரத்துக்கு மத்தியில் கிழக்கே ஒரு நகர்வுக்கு வன்னிப் படைத்தலைமை திட்டமிட்டது.

ஆனால் வன்னிக் களத்தில் சமர் அரங்கை படையினர் நீட்டி வியாபித்துவருவதால் நீண்டு செல்லும் முன்னரங்க நிலைகளுக்கு அப்பால் பெரும் நகர்வுக்காகப் படையினரையும் தளபாடங்களையும் ஒன்றுகுவிக்கும்போது எவ்வளவுதான் முன்னெச்சரிக்கையுடன் இருந்தாலும் அது வேவுப்புலிகளின் கண்களில் சிக்கிவிடவே செய்கின்றது. ஒலுமடுவில் வழமைக்கு மாறாக படைப்பலம் செறிவாகுவதைக் கண்டுகொண்ட புலிகள் முந்திக் கொண்டனர். ஓர் அதிரடித் தாக்குதலுக்குத் திட்டமிட்டனர். சிறுவர்களுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காக இரு தினங்கள் மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்க இருதரப்புமே இணங்கியிருந்தன. ஆனால் மோதல் தவிர்ப்பை தமது படைநகர்விற்கான வாய்ப்பாக்குவது படையினரின் தந்திரோபாயமாக இருந்தது.

பலத்த மழைபெய்துகொண்டிருந்ததால் படைநடவடிக்கை ஒன்றைப் புலிகள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் என இராணுவத்தரப்பு கணக்குப் போட்டது, ஆனால் புலிகள் முந்திக்கொண்டனர். வியாழக்கிழமை (14ஆம் திகதி) முற்பகல் 11 மணிக்கு இராணுவத்தின் 55ஆவது, 56ஆவது டிவிஷன்களைச் சேர்ந்த படையினர் நகர்வை ஆரம்பிப்பதற்கு அரை மணிநேரம் முன்பதாக புலிகளின் அணிகள் களம் இறங்கின. நகரத் தயாராய் நின்ற படையினர் புலிகளின் ஷெல் மழையைச் சந்திக்க நேர்ந்தது. சுமார் அரைமணி நேர ஷெல் மழையை அடுத்து சுமார் 150 புலிகளைக் கொண்ட அணி ஒன்று ஒலுமடு முன்னணி அரண்களைத் தகர்த்துக்கொண்டு முன்னேறியதும் இரு தரப்பிற்கும் இடையே கடும் மோதல் மூண்டது. மாங்குளம் பகுதியில் பயணிகள் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ளதால் புலிகள் ஒட்டிசுட்டான் பகுதியைப் பின்தளமாகக் கொண்டே சண்டைக்குத் திட்டமிட்டிருந்தனர். இதனால் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஊடுருவிய போராளிகள் கடும்தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

நகர்வு ஒன்றுக்குத் தயாராக இருந்த படையினர் அந்த முயற்சியைக் கைவிட்டு பதில்தாக்குதலை தீவிரப்படுத்தினர். வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் மோதல்கள் தீவிரமாகத் தொடர்ந்தன.

இந்த இருநாள் சமரின்போதும் மொத்தம் 45 பேர் தமது தரப்பில் வீரச்சாவடைந்ததாகப் புலிகள் தரப்புச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டபோதும் அவர்களில் ஒருசிலரைத் தவிர ஏனையோரின் பெயர் விவரங்களை - இப்பத்தியை எழுதும் வரை - புலிகள் வெளியிடவில்லை.

படைத்தரப்பில் சுமார் 100பேர் வரை பலியானதாகவும் அந்த எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கினர் காயமடைந்ததாகவும் சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன. ஆனால் படைத்தரப்பின் உத்தியோகபூர்வ தகவலின்படி 40 படையினர் உயிரிழந்தமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

சண்டை ஆரம்பித்த நாளன்று மட்டும் 29 படையினர் பலியானதாகவும், 55ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த 3 அதிகாரிகள் உட்பட 141 பேரும், 55ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இரு அதிகாரிகள் உட்பட 73 படையினரும் காயங்களுக்கு இலக்கானதாகப் பாதுகாப்பு வட்டாரத் தகவல் ஒன்றில் அறியவந்தது.

மொத்தம் 355 படையினர் இந்தச் சண்டையில் காயங்களுக்கு உள்ளானதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. விடுதலைப்புலிகள் தரப்பிலும் 100க்கும் சற்றுக் குறைவான போராளிகள் காயமடைந்துள்ளனர். கைப்பற்றப்பட்ட புலிகளின் சடலங்கள் எனத் தெரிவித்து 32 உடல்களைப் படையினர் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் புலிகளிடம் ஒப்படைத்தனர். உடல் முற்றாகச் சிதைந்த அல்லது சிதைக்கப்பட்டு, சீருடையின்றி ஒப்படைக்கப்படும் சடலங்களை அடையாளம் காண்பதில் புலிகளுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சண்டையில் புலிகள் தமது தரப்பில் இழப்புக்களைச் சந்தித்த போதும் திட்டமிடப்பட்ட படைநடவடிக்கை ஒன்றை குழப்பியடித்ததன் மூலம் படைத்தரப்புக்கு அதிர்ச்சியான ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளனர்.

கடைசியாக 'போர்க்கோஷம்' நடவடிக்கையில் ஏற்பட்ட பெரும் உயிரிழப்புக்களுக்கு பொறுப்பேற்ற வன்னிப் படைகளின் புதிய தளபதி மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவின் தலைமையின் கீழேயே இந்தப் புதிய படைநகர்வும் திட்டமிடப்பட்டது.

இந்தப் படைநடவடிக்கைக்கு 'வோட்டர்ஷெற்' (WaterShed) எனப் பெயர் வைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் புலிகளின் எதிர்பாராத அதிரடியால் அது ஸ்தம்பித்ததை அடுத்து பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தனது அறிக்கைகளில் அப்பெயரை வெளியிடுவதைத் தவிர்த்துக்கொண்டது.

பாகிஸ்தானில் இடம்பெற்ற இராணுவப்புரட்சி தொடர்பான செய்திகளை அடுத்து தேர்தல் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் இடம்பிடிக்கத் தொடங்கியுள்ளன. இன்னும் இரண்டு அல்லது மூன்று மாத காலத்தினுள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆனால் இராணுவ வெற்றிகளைக் காட்டியே அவர் தேர்தலை எதிர்கொள்ள முடிவு செய்துள்ளார் என்பது கடந்த இரு வாரகாலத்தில் அவர் வெளியிட்ட முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள் மூலம் தெளிவாகிறது.

இந்தியாவின் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் 'புலிகளுடன் பேசுவதற்கான முயற்சியைக் கூடக் கைவிட்டுவிட்டோம்' என்று கூறிய சந்திரிகா கொழும்பில் இந்து மதகுருமாரைச் சந்தித்தவேளை பிரபாகரனுடன் நேரடியாகப் பேசுவதற்குக் கூட முயற்சிகள் நடைபெறுகின்றன என்ற சாரப்பட கருத்துக் கூறியுள்ளார். இவ்வாறு உள்நாட்டில் ஒரு கருத்தையும் வெளிநாடுகளில் அதற்கு நேர்எதிரான கருத்தையும் பரப்பும் ஜனாதிபதியின் முயற்சி தேர்தலை எதிர்கொள்ள அவர் தயாராகிவிட்டார் என்பதை மட்டுமல்ல அதற்காக இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்கும் அதே வேளை உள்நாட்டில் 'பேச்சுப்' பற்றிய பேச்சுக்களை வலுப்படுத்தவும் முடிவுசெய்துள்ளார் என்பதையும் காட்டுகிறது.

அடுத்த மூன்று மாத காலத்திற்குள் ஜனாதிபதித் தேர்தல் நடப்பது உறுதியாகிவிட்டதால் இந்த மழைக்காலம் வன்னியில் மந்தமாகக் கழியப்போவதில்லை என்பது தெளிவு.

*

## புலிகள் பயன்படுத்தியது 'பாகொட்' ஏவுகணையே!

புலிகள்வசம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணையின் ரகத்தை பிரிட்டிஷ் நிபுணர்கள் கண்டறிந்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

ஏ.ரி.4 பாகொட் (A.T. 4 FAGOT) ரக டாங்கி எதிர்ப்பு ஏவுகணையையே புலிகள் பயன்படுத்தி இருப்பது ஆரம்பகட்டப் பரிசோதனைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பிரிட்டிஷ் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

'பாகொட்' ரக ஏவுகணைகள் பல்கேரியா மற்றும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளாலும், றுமேனியா, ஈரான் ஆகிய நாடுகளிலும் உற்பத்தி செய்யப்பட்டவை. 'நேட்டோ' நாடுகளில் இவை 'ஸ்பைகொட்' (SPIGOT) என அழைக்கப்படுகின்றன. கடந்தமாதம் 24ஆம் திகதி பரந்தன் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சீனத் தயாரிப்பான கவசவாகனம் ஒன்றை புலிகள் தாக்குதல் ஒன்றின்மூலம் தகர்த்ததைத் தொடர்ந்தே இந்த டாங்கி எதிர்ப்பு ஏவுகணை குறித்த விவகாரம் சூடு பிடித்தது. புலிகள் வழமையாக டாங்கி எதிர்ப்பு லோஞ்சர்களைப் பயன்படுத்தியுள்ளபோதிலும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணையை அவர்கள் பயன்படுத்தியதாகச் சந்தேகிப்பது இதுவே முதல் முறையாகும். தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட எச்சங்கள் உடனடியாகவே லண்டனுக்கு அனுப்பப்பட்டன.

புலிகள் 'சக்கர்' ரக ஏவுகணையைப் பயன்படுத்தி இருக்கலாம் என்ற சந்தேகம் முதலில் ஏற்பட்டது. படைவட்டாரங்களை மேற்கோள்காட்டி அத்தகவலை கடந்த 2.10.99 சஞ்சீவியில் இப்பத்தியில் வெளியிட்டிருந்தோம்.

இலகுவாகக் கையாளக்கூடிய தன்மை, மலிந்த விலை மற்றும் ஆயுத சந்தைகளில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே வயர் மூலம் வழிநடத்தப்படும் 'சக்கர்' (மல்யுத்கா) ரக ஏவுகணையே புலிகளுக்கு கிடைத்திருக்கலாம் எனப் படைநிபுணர்கள் சந்தேகித்தனர். ஆனால் பிரிட்டிஷ் நிபுணர்களின் பரிசோதனை முடிவுகள் வேறுவிதமாக அமைந்துள்ளன. பெறுமதி கூடியதும், தொழில்நுட்ப வல்லமை மிக்கதுமான 'பாகொட்' ரக ஏவுகணையின் முதல் தலைமுறைக்குரிய ஏவுகணைகளையே புலிகள் பயன்படுத்தி இருப்பது தெரியவந்துள்ளது.

பிரிட்டிஷ் நிபுணர்களின் பரிசோதனையின் முழு விவரங்களும் வெளியிடப்படும்போது மேலும் புதிய தகவல்கள் கிடைக்கலாம்.

டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை சண்டையில் பயன்படுத்துவது குறித்து புலிகள் தரப்பில் இருந்து ஊர்ஜிதமான எந்தத் தகவலும் இல்லை. நவீன கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துகின்ற போதிலும் அவற்றின் விவரங்களைப் புலிகள் ஒருபோதும் வெளியிடுவதில்லை. விமானஎதிர்ப்பு ஏவுகணைகளை முதன்முதலில் பயன்படுத்தியபோது அது குறித்து மௌனம்காத்த புலிகள் 'ஒலிகன்' ரக பீரங்கியின் மூலமே விமானத்தைச் சுட்டதாக அறிவித்தது நினைவிருக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைப்படுத்தப்படும் நிலையில் பாக்.இராணுவ ஆட்சியாளர்கள்!

உலக உலா
என்.பி.சீலன்

பாகிஸ்தானில் இடம்பெற்று வரும் நிகழ்வுகள் மர்ம நாடகத்தையும் மிஞ்சக் கூடியவை. ஒரேநாளில் தலைகீழான மாற்றங்கள். இராணுவத் தளபதி ஜெனரல் முஷாரப்பை பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி நீக்கம் செய்து சிலமணி நேரத்தில் ஷெரீப்பே பிரதமர் பதவியை இழந்தார். இப்பொழுது லாகூருக்குக் கொண்டுசெல்லப்பட்டு இனம் தெரியாத இடத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து பாகிஸ்தானில் எதிர்காலத்தில் ஜனநாயகம் மீள்வதற்கு வாய்ப்பு உண்டா?என்ற கேள்வி




ஏழுந்துள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் ஜனாதிபதி ரபீக்தரார் ஜெனரல் முஷாரப்புடன் ஆலோசனை நடத்தினார். இந்தச் சந்திப்பின்போது பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வற்புறுத்தினார். இந்தச் சந்திப்பு சிறிது நம்பிக்கை அளிப்பதாக இருந்தது.

ஆனால் அடுத்து நடைபெற்ற சங்கிலிக்கோர்வை போன்ற நிகழ்வுகள் அந்த நம்பிக்கைத் தளிரைக் கருக வைத்துவிட்டன. பாகிஸ்தானில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்ததுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார் ஜெனரல் முஷாரப். அனைத்து அதிகாரங்களும் அவரிடம்தான். அவர்தான் நாட்டின் தலைமை நிர்வாகி. அவரது அதிகாரங்களை உச்சநீதிமன்றம் கேள்வி கேட்கமுடியாது. ஆனால் உச்சநீதி மன்றம் ஏனைய விடயங்களில் வழமை போன்று செயற்படும்.

## உலகநாடுகள் அக்கறை கொள்ள அணுஆயுத கையிருப்பே காரணம்

மக்களின் அடிப்படை உரிமைகள் தொடரும். ஆனால் தலைமை நிர்வாகியின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டதாக அவை அமையும். நாட்டின் நாடாளுமன்றம், மாகாண சட்ட மன்றங்கள் செயற்படாமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. பிரதமர், துணைப்பிரதமர் ஆகியோரது பதவிகளுக்குரிய அதிகாரங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாகாண சட்டமன்றங்களின் முதலமைச்சர்களின் நிலையும் இதேதான். ஜனாதிபதியின் நிலைமை அப்படியே நீடிக்கிறது. ஆனால் அவரும் இராணுவத் தலைமை நிர்வாகியின் ஆலோசனைப்படிதான் நடக்கவேண்டும். தற்பொழுது ஷெரீப்புக்கு எதிராகக் கொலை முயற்சிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஷெரீப்பின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்கான பொறுப்பு அமெரிக்காவின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. ஜூலை 4ஆம் திகதி அமெரிக்க அதிபர் கிளின்ரனும் ஷெரீப்பும் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றுக்கு இணங்க ஷெரீப் கார்கில் பிராந்தியத்தில் இருந்து பாக். ஊடுருவல்காரர்களை வாபஸ் பெறச் செய்தார். ஷெரீப்புக்கும் முஷாரப்புக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஆரம்பமாவதற்கும் அவர் பதவி கவிழ்க்கப்படுவதற்கும் இதுவே பிரதான காரணமாக இருந்தது. அதன் பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் பாகிஸ்தானில் இராணுவப் புரட்சிக்கான அறிகுறிகளை வெளிக்காட்டுபவையாக இருந்தன. கார்கில் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்துவதற்கு தனது தனிப்பட்ட தூதுவராக நியாஸ் நாயக் என்பவரை ஷெரீப் இந்தியாவுக்கு அனுப்பி இருந்தார். இவர் செப்ரெம்பர் 13இல் விடுத்த அறிக்கை ஒன்றில் கார்கில் தொடர்பாக முடிவுசெய்ய சிவிலியன் பிரதமருக்குள்ள உரிமைகுறித்து கேள்வி எழுப்பி இருந்தார். இந்த அறிக்கை வெளிவந்து ஒருவார காலத்தின் பின்னர் பாகிஸ்தானில் ஏற்படக்கூடிய 'பிரத்தியேக அரசியல் மாற்றங்கள்' குறித்து அமெரிக்கா எச்சரிக்கை தெரிவித்திருந்தது.

### அமெரிக்காவின் நிலை

பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக நடைமுறைகளைக் கொண்டுவருமாறு ஜென்ரல் முஷாரப்பை அமெரிக்கா கோரிவருகிறது. ஆனால் ஷெரீப்பை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு அமெரிக்காவோ அல்லது வேறு எந்த ஒருநாடோ இதுவரை கோரவில்லை. அணு வெடிப்புப் பரிசோதனை காரணமாக பாகிஸ்தான்மீது அமெரிக்க பொருளாதாரத்தடை ஏற்கனவே இருப்பதால் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா புதிதாக பெரியஅளவில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாத நிலையில் இருந்து வருகிறது. பாகிஸ்தானுக்கான 20லட்சம் டொலர் உதவியை மட்டும் அமெரிக்கா தற்பொழுது நிறுத்தி வைத்துள்ளது.


### பொதுநலவாய அமைப்பிலிருந்து இடை நிறுத்தம்.

54 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்தே தற்பொழுது பாகிஸ்தானுக்கு எதிராக உருப்படியான அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பொதுநலவாய அமைப்பில் இருந்து பாகிஸ்தான் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் தென் ஆபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெற உள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பாகிஸ்தான் கலந்து கொள்ள முடியாது.

ஆனால் பொருளாதாரத்தடை எதனையும் பொதுநலவாய அமைப்பு நாடுகள் பாகிஸ்தான் மீது விதிக்கவில்லை.

இந்தியாவை பரம வைரியாகக் கருதும் பாக்.இராணுவ ஆட்சியாளர்களிடம் அணுஆயுதங்கள் இருப்பது தெற்காசியாவுக்கு மட்டுமல்ல முழு உலகுக்குமே ஆபத்தானது என்று பெரும்பாலான நாடுகள் கருதுகின்றன.

பாகிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடான ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்கள் மட்டும் பாகிஸ்தான் சம்பவங்களை உள்நாட்டு விவகாரம் என்று தெரிவித்துவிட்டு வாளா இருக்கின்றனர். தலிபான் அரசை இதுவரை பாகிஸ்தான், சவூதிஅரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் மட்டுமே அங்கீகரித்துள்ளன. பாகிஸ்தானுக்கான பிரதான உதவி வழங்கும் நாடு ஜப்பான். இந்த நாடும் தற்பொழுது இராணுவ ஆட்சியாளர்களுக்கெதிராக அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது. முஸ்லிம்லீக் தலைவர் பதவியில் இருந்தும் பிரதமர் பதவியில இருந்தும ஷெரீப்பை அகற்றுவது இராணுவப் புரட்சியின் நோக்கம் என்று கருதப்படுகிறது. முஸ்லிம்லீக் கட்சியைச் சேர்ந்த 400 பிராந்தியத் தலைவர்களும் 20 பத்திரிகையாளர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இராணுவ ஆட்சியாளர்கள் தடைவிதித்துள்ளனர்.



நவாஸ் ஷெரீப் ஆட்சியைக் கவிழ்த்த இராணுவத் தளபதி பெர்வேஸ் முஷாரப் ஜனாதிபதி ரபீக் தராருடன் பேச்சு நடத்துகிறார்.

### பெனாஸிர் கோரிக்கை

தற்பொழுது லண்டனில் தங்கியுள்ள முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானில் மூன்று மாதங்களில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். தேர்தலில் பங்குபற்ற பெனாஸிர் விருப்பமும் தெரிவித்துள்ளார்.

1988இல் ஸியா - உல் ஹக் மரணம் அடைந்த பின்னர் பாகிஸ்தானில் இரு தடவைகள் பிரதமராக இருந்தவர் பெனாஸிர். ஆட்சியில் இருந்தபோது பல ஊழல்களைப் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டி பெனாஸிருக்கு எதிராக ஷெரீப் அரசு வழக்குத் தொடர்ந்திருந்தது.

தற்போதைய இராணுவப் புரட்சிக்கு ஷெரீப் அரசே பொறுப்பு என்று பெனாஸிர் குற்றஞ்சாட்டி வருகிறார். ஷெரீப் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்தார் என்றும் - பாகிஸ்தானில் பொலீஸ் ராஜ்யத்தை உருவாக்கி இருந்தார் என்றும் - அவரைத் தடுத்து நிறுத்த ஆள்இல்லாமல் இருந்தது என்றும் - இராணுவப் புரட்சி ஏற்பட ஷெரீப்பே காரணம் என்றும் - பெனாஸிர் குற்றஞ்சாட்டி வருகிறார்.

1997 தேர்தலில் ஷெரீப் வெற்றி பெற்று பிரதமரான பின்பு அப்போதைய ஜனாதிபதி பாரூக் லெஹாரியுடனும் பிரதம நீதியரசர் சஜ்ஜட் அலி ஷாவுடனும் ஷெரீப்புக்கு அதிகாரப் போராட்டம் ஏற்பட்டது. ஜனாதிபதியும் பிரதம நீதியரசரும் ஷெரீப்பை வெளியேற்ற நினைத்தனர். ஆனால் இறுதியில் ஜனாதிபதியும் பிரதம நீதியரசரும் பதவி இழந்தனர். புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி இழந்தார். அதுமட்டுமல்ல பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றமும் ஷெரீப் ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டது. பிரதம நீதியரசர் மயிரிழையில் தப்பினார். ஷெரீப்புக்கு சவால் விட்ட அவர் உச்ச நீதிமன்றத்தினாலேயே பதவி இறக்கப்பட்டார். உச்ச நீதிமன்றத்தைத் தாக்கியவர்களைத் தண்டிக்க முடியாதநிலையில் ஷெரீப் ஆட்சியில் பாகிஸ்தானில் நீதி பரிபாலனம் பலவீனம் அடைந்திருந்தது.

### ஷெரீப்பின் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டதே!

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப்பின் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டதே. எனினும் அது இவ்வளவு விரைவாக நிகழுமென்று எவரும் ஊகித்திருக்க முடியாது. ஷெரீப்பிற்கு எதிராக இராணுவ ஆட்சியாளர்கள் கொலைமுயற்சி வழக்குத் தொடர்ந்திருப்பது அவரது அரசியல் வாழ்வுக்கு ஆப்புவைப்பதாக உள்ளது.

*

## இந்தியாவும் பாகிஸ்தானும்

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே நாளில் விடுதலை பெற்றன. அரசியல் பாதையிலும் நடைபோடத் தொடங்கின. ஆனால் வேறு எங்கும் காணமுடியாத அளவுக்கு இந்த இரு நாடுகளுக்கும் இடையில் வேறுபாடுகள். இந்த வேறுபாடுகளுக்கெல்லாம் மகுடம் வைத்த நிகழ்வுதான் அண்மையில் நடைபெற்றது. ஜனநாயக நடை முறைகள் அனைத்தும் கவனமாக கடைப்பிடிக்கப்பட்டு புதியபிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றார் இந்தியாவில். ஆனால் பாகிஸ்தானிலோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரை தூக்கி எறிந்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது அந்த நாட்டு இராணுவம்.

விடுதலை பெற்று 50 ஆண்டுகள் கழிந்த பின்னரும் அலங்கோலமான அரசியல் சூழ்நிலையே பாகிஸ்தானில் நிலவுகிறது. பஞ்சாபியர், சிந்திகள், பலுந்தியர், எல்லைப்புறப் பகுதியில் உள்ள பத்தானியர் ஆகியோரிடையே இனமோதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஷியா மற்றும் சுனி முஸ்லிம்களிடையே வன்முறைகள் அதிகரித்துவருகின்றன. பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை. காலப்போக்கில் அமெரிக்கா மற்றும் சீனா ஆகியவற்றைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது பாகிஸ்தான்.

இந்த நிலைமை பாகிஸ்தானுக்கு ஏன் ஏற்பட்டது?ஒரு நாடு என்ற வகையில் அடிப்படை நிர்வாக அமைப்புக்கள் அங்கு உருவாக்கப்படவில்லை. ஜனநாயக நடைமுறை வலுப்பெறவில்லை. சமூகத் தீமைகளை, நிலப் பிரபுத்துவத்தை, ஊழலை ஒழிக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. தனது தனித்துவமான அடையாளம் என்ன என்பதையே பாகிஸ்தானால் தீர்மானிக்க முடியவில்லை.

முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் உருவானதுதான் பாகிஸ்தான். அப்பொழுது நிலவிய அரசியல் சூழ்நிலையில் அந்த வாதம் எடுபட்டது என்றாலும் அது ஒரு வெற்று வாதம் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால் பாகிஸ்தானை விட அதிகமான முஸ்லிம்கள் இந்தியாவில்தான் வாழ்கின்றனர். அதே வாதத்துக்கு எதிராகக் கிளர்தெழுந்துதான் கிழக்கு பாகிஸ்தானியர் பிரிந்து சென்று பங்களாதேஷை உருவாக்கினர்.

பாகிஸ்தான் உருவாவதற்குக் காரணமாக இருந்த முஹம்மது அலி ஜின்னா மத உணர்வுகளைத் தூண்டி ஆட்சிசெய்ய நினைக்கவில்லை. அவரது நம்பிக்கைக்குரிய லியாகத் அலி கான் நாட்டின் முதல் பிரதமரானார். ஆனால் அவர் படுகொலைசெய்யப்பட்டார். ஜின்னாவும் காச நோய் காரணமாக மரணமானார். அதன் பின்பு மதத் தீவிரவாதமே அந்த நாட்டின் வழிகாட்டு நெறியாக மாறிவிட்டது.

இராணுவக் கண்ணோட்டமானது பாகிஸ்தானிய அரசுக்கு கொடூரத் தன்மைகளை கொடுத்துவிட்டது. கம்போடியாவில் பொல்பொட்டுக்கு அடுத்தபடியாக ஆப்கானிஸ்தானில் கொடூர ஆட்சி புரிந்துவரும் தலிபானை பாகிஸ்தான் இராணுவம் ஆதரிப்பதையும் இதே கண்ணோட்டத்தில்தான் பார்க்கவேண்டும். எனினும் இத்தகைய போக்கிலிருந்து வேறு பாதைக்கு மாற்ற சுல்பிஹார் அலி பூட்டோ அவரது மகள் பெனாஸிர் அவரை அடுத்து நவாஸ் ஷெரீப் ஆகிய அரசியல் தலைவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் சுயநலம், ஊழல், தவறை உணராத போக்கு ஆகிய காரணங்களால் இவர்கள் அந்த வாய்ப்பை வீணடித்துவிட்டனர்.

ஷெரீப்புக்கு இந்தியா நட்புக்கரம் நீட்டியது. ஆனால் அவரது இராணுவம் வேறு நோக்கத்துடன் இருந்தது. அதன் சவாலை எதிர்கொள்ள ஷெரீப்பால் முடியவில்லை. அதன் நெருக்குதல்களுக்குப் பணிந்தார். அறிவியல் ஆய்வுத்துறையில் வலுவான அடித்தளம், தொழில் வளம், பொருளாதாரப் பலம் எதுவுமே இல்லாமல் ஷெரீப் அணுகுண்டுச் சோதனையை நடத்தினார். இந்தியாவுக்கு சரிசமனாகிவிடவேண்டும் என்ற வெறியோடு பாகிஸ்தானில் இராணுவ சர்வாதிகாரம் செயற்படுகிறது.

இந்தியாவின் பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அரசியல் ஜனநாயக சக்திகள் வலுவுடன் செயலாற்றும் பாகிஸ்தானே சிறந்தது.

எல்லையில் அமைதியை உறுதிப்படுத்தும் பாகிஸ்தான் உருவானால் இரு நாடுகளுமே தமது பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்தமுடியும். தேசிய வளத்தையும் முழுமையாகப் பயன்படுத்தமுடியும். பாகிஸ்தானில் இராணுவம் மேலாதிக்கம் பெற்றிருக்கும் நிலைமை தெற்காசியா முழுவதற்குமே தீங்கு விளைவிக்கக் கூடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் ஒரு கலையா?

**இருபாலை. தி.றிஸ்வி.**
என்னை இரு இளைஞர்கள் துரத்துகின்றார்கள். நான் யாருக்கு முடிவு சொல்வது?
☺**இருவரையும் குலுக்கல் போட்டுப் பாரும்!**

**அராலி. மலர்.**
வித்தையா! நீரும் அடியாளாமே! உண்மையா?
☺**ஆம். - மனைவிக்கு!**

**கந்தர்மடம். வரதன்.**
வித்தூ ஸார்! எனக்கு ஒரு பூதாகரமான பிரச்சினை! இம்மாத இறுதியில் எனக்குக் கட்டாயக் கல்யாணம் கட்டிவைக்க என் பெற்றோர் திட்டமிட்டுள்ளனர். என்ன செய்ய.....?




☺**அந்தளவு பூத சைஸிலா உமக்குப் பெண் பார்த்திருக்கின்றார்கள்?**

**அரியாலை. றஞ்சி.**
காதலனிடம் வாங்கும் போதே திருப்பிக் கொடுக்கக் கூடிய சமாச்சாரங்கள் உண்டா?
☺**ஏன் இல்லை? முத்தம், திருப்தி.... என்று பல உள்ளனவே!**

**வரணி. எஸ்.சீலன்.**
வித்து! பெண்களுடன் அன்பாகப் பழகினால் தப்பு வருமா?
☺**பழகுவது பலவிதம் சீலா! நீ ஒழுக்க சீலனாக இருந்தால் எந்தத் தப்பும் வராது!**

**யாழ். எஸ்.அன்பு.**
வித்துவான் ஐயா! காதலில் பிளவு ஏற்பட்டால் பாதிப்புறுவது ஆண்களா? பெண்களா?
☺**பிளவில் பாதிப்புறுவது பெண்கள் தான்!**


**மிருசுவில். கோபியா.**
நீங்களே கேள்வியையும் கேட்டு, பதிலையும் தருகின்றீர்களாமே! உண்மையா?
☺**இப்போதாவது உங்கள் சந்தேகம் தீர்ந்ததா?**

**உடுப்பிட்டி. உதேஷ்.**
காதலரும் கவிஞரும், காதலியை நிலா என்று வர்ணிக்கின்றார்களே! ஏன்?
☺**மாதத்தில் மூன்று நாள்கள் காணாமல்போய் பின்னர், மூன்றாம் பிறையின் பின்பு தோற்றத் தொடங்குவதாலோ என்னவோ!**

# காமத்துக்கு அழகு எது?

**மட்டுவில் வடக்கு. சிவா.**
உங்கள் சேவைக்கு ஜே.பி. பட்டம் இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்குமே! உங்களுக்கு அதனை வழங்கலாமே!
☺**ஹய்யா...! தெருவுக்குத் தெரு ஜே.பிக்கள் பிறந்துகொண்டிருப்பதைத் தடுக்க இதுதான் ஒரே வழி. நான் ஜே.பி. ஆகிவிட்டால் அதற்குப் பின்னர் ஒருவருக்கும் ஜே.பி ஆசையே வராது. அந்தப் பட்டத்தை எடுத்தவர்களும் அதைத் தூக்கி எறிந்து விடுவார்கள். நல்ல ஐடியா இது....!**

**சங்கானை. சிவம்.**
என் மனைவி கோபம் வந்தால் உதைக்கின்றாளே....!



☺**'கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் உதைக்கு அஞ்சலாமா?' என்ற ஒரு பழமொழி இருப்பது உமக்குத் தெரியாதா?**


**பருத்திநகர். மிக்கி.**
அழகான ஆண்களுக்கு அழகில்லாத பெண்கள் மனைவியாக அமைவது குறித்து உங்கள் கருத்து என்னவோ....?
☺**'அடக்கத்துப் பெண்ணுக்கு அழகு ஏன்?' என்ற பழமொழி உமக்குத் தெரியாதா? அழகு புறத்தில் இல்லை; மனதில் தான் என்பதை உணர்ந்தால் இப்போது நம் கண்ணில் படும் பல அழகிகள் பார்க்கச் சகிக்க முடியாதவர்களாகி விடுவர்.**

**கச்சாய். சிவகுரு.**
பாடசாலையில் ஆசிரியர் ஓய்வு எடுக்கும் அறையின் ஜன்னல்களை கறுப்புக் கண்ணாடியால் மறைப்பதேன்?
☺**உள்சூடு வெளியே பரவாதிருக்கும் நல்லெண்ணமாக இருக்கலாம்.**

**யாழ். பிதா.**
பந்தயம் பிடியுங்கள்! பாதுகாப்பு செலவினம் அதிகரிக்கும் விடயத்தில் அரசுக்கு ஆதரவாகவோ அல்லது அரசுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமலோ தமிழ்க் கட்சிகள் நடந்து கொள்ளும் என்கின்றேன். பார்ப்போமா?
☺**மாரி காலத்தில் மழை பெய்யாது என்று பந்தயம் கட்ட நான் தயாராயில்லை!**

**தொல்புரம். காய்.**
வித்தூ! மொட்டைக் கடிதம் போடுபவர்கள் குறித்து.....!
☺**அந்தத்துறையில் நோபல் பரிசு பெறக் கூடிய திறமையாளர்கள் நம்மத்தியில் இருக்கின்றார்கள். மொட்டைக் கடிதமும் போடுவார்கள்; கொஞ்சம் அசந்தால் மொட்டையும் போட்டு அனுப்பி விடுவார்கள்!**

**நவாலி. க.பிரதீபன்.**
தலைக்கனம் பிடித்தவர்கள் எப்படியிருப்பார்கள்?




☺**தள்ளாடுவார்கள்!**

**சாவகச்சேரி. ஜெகன்.**
வித்தையா! சோதிடர் ஒருவர் எனக்கு நாற்பது வயதில்தான் திருமணம் என்கின்றாரே!
☺**அப்படியானால் உமக்கு சிறைவாழ்வுக்கான கிரகங்கள் எல்லாம் நாற்பது வயதில்தான் ஒன்று கூடுகின்றன என்று அர்த்தம். நாற்பது வருடகால சுதந்திர வாழ்க்கை உறுதி என்று சந்தோசப்படும்.**

**கொடிகாமம். கோமதி.**
18 வயதில் ஓர் ஆணுக்கு என்ன தேவை?
☺**தேவை எதுவோ, அதை நாடாத மன அடக்கம்தான் தேவை.**

**யாழ். மயூ.**
நீர் திருமணத்துக்கு முன்னரே வித்துவானா?
☺**முன்னர் வித்துவான்; திருமண காலத்தில் 'பித்து'வான்; பின்னர் கொஞ்சக் காலம் குத்துவான்; இப்போது தொல்லைகளால் கத்துவான்!**

**கந்தர்மடம். கோபு.**
அந்தக் காலத்துப் பெண்கள் முன் தூங்கி பின் எழுவர். இந்தக் காலத்துப் பெண்கள்.....
☺**முன் தூங்கி, பின் உதைவார்!**

**யாழ். குமாரசாமி.**
கோவணப் போராட்டம் அம்மணப் போராட்டமாக மாறினால்.......
☺**அம்மணி மனம் மட்டும் மாறாது!**

**கல்வியங்காடு. சிவகுமார்.**
ஆசிரியையிடம் ஆ[illegible] கறக்க யோசித்துள்ளேன். சீக்கரம் முன்னேறலாமா?
☺**ஆங்கிலேயர்பாணியில் முன்னேறாவிட்டால் சரி.**

**தும்பளை. வதனி.**
உங்கள் வயதென்ன? தொழிலென்ன?
☺**வயசு - வட்டுக்குள்.**
**தொழில் - (மனைவியின்) கட்டுக்குள் இருந்து புலம்புவது.**

**மானிப்பாய். கே.பிரதி.**
இன்றைய இளைஞர்கள் மீது உங்களுக்குப் பிடிப்புவரக் காரணமான அவர்களின் குணம் என்ன?
☺**தங்களைவிடப் பெரியவர் எவரும் இல்லை என்ற மமதைப் போக்கு. இதனால் பிடிப்ப அல்ல. இது அவர்களின் தடிப்புக் குணம்.**

# வித்துவான் அடியானா?

**கொழும்புத்துறை. அ.ரூபன்.**
கருவிலிருந்து கல்லறைவரைதானே மனித வாழ்க்கை?
☺**இங்கு பலருக்கு அது புதைகுழியில் அல்லவா முடிகின்றது.?**

**கல்வியங்காடு. கஸ்தூரி.**
ஆண்களை நாய்,பேய் என்றெல்லாம் அழைக்கின்றார்களே?
☺**ஆமாம் திருமணத்துக்கு முன் ஜோடி தேடி நாயாய் அலைவார்கள். பின்னர் ஜோடியின் தொல்லையால் பேயாய்த் திரிவார்கள்.**

# வித்துவான் பதில்கள்

**அச்சுவேலி. தர்ஷன்.**
தீப்பெட்டி, தீக்குச்சு இரண்டிலும் மருந்திருந்தும் உரசும்போது ஏன் குச்சு மட்டும் எரிகின்றது?
☺**குச்சியே பற்றுவது வித்தியாசம்தான்!**

**அரியாலை. டி.மெல்.**
அனுபவத்தில்தான் சில பெண்களுக்கு புத்தி வருகின்றதே?
☺**அவர்களில் பலருக்கு முதலில் சத்தி வருகின்றது. அதன் பின்னர்தான் புத்தி தெரிகின்றது.**

**அரியாலை. ரவி.**
பெண்கள் சைக்கிள்தான் யாழ்ப்பாணத்தில் அதிகமாகக் காணப்படுகின்றதே?
☺**ஆண்கள் சிலர் அதில் 'டபிள்' ஏற்றுகின்றார்கள் தெரியுமா?**

**வல்வை. குணா.**
தட்டெறிதல் நிகழ்ச்சியில் பங்குபற்றிய அனுபவம் உண்டா?



☺**வீட்டில் எறிந்த தட்டு பட்டு (காயம்) எரிந்த அனுபவம் அடிக்கடி ஏற்படுவதுண்டு!**

**துறையூர். ஜெ.விஜய்.**
எனது நண்பன் சந்நியாசியாகப் போக ஆசைப்படுகின்றானே....!
☺**திருமண சாகரத்தில் நீச்சல்போட முடியாதவர்களுக்கு அது ஒன்றே வழி!**

**பண்டத்தரிப்பு. பி.மணியம்.**
வித்தூ! காதல் ஒரு கலையா?
☺**சில இளசுகள் காதலுக்காக சைக்கிளில் ஏறி நாய் மாதிரி அலைந்து, கலை, கலை என்று கலைப்பதைப் பார்த்தால் காதலும் ஒரு 'கலை' விளையாட்டுத்தான்.**

**திருநெல்வேலி. மதி.**
வேலையில்லாமல் சந்தியில் நிற்கும் இளம் வாலிபரைக் காதலிக்கலாமா?
☺**அவருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்போகின்றீர் போலும்!**

**நவாலி. ரதீ.**
பூனைபோல் அமைதியாக இருப்பவர்களை நம்பலாமா?
☺ **பூனையா? அது சமயங்களில் ஊரையே கூட்டிவிடுகின்றதே!**

**மானிப்பாய். ரதீப்.**
கலவன் பாடசாலை குறித்து உங்கள் கருத்து?
☺**கலகலப்பானவை.**

**நவாலி. பி.தீபன்.**
காமத்துக்கு அழகு.....?
☺**கட்டு மீறாமை!**

**கைதடி. கந்தஞானம்.**
வித்துவான் ஸார்! நீங்கள் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவியேற்கக் கனவு கண்டேன். பலிக்குமா?
☺**என்னை வெளிநாட்டுக்கு ஓட வைக்கும் புதிய தந்திரம் இது!**

**மாதகல். ந.சத்தியா.**
மனிதனுக்கு 'போதும்' என்ற மனம் எப்போது வரும்?
☺**எப்'போதும்' வராது!**

**கொழும்புத்துறை. ஜயதீஸ்.**
வித்துமாமா! புதுமணத் தம்பதியினரைப் பார்க்கப்போகும் மணவீட்டார் கொழுக்கட்டை கொண்டுபோவதேன்?
☺**மணப்பெண் கொழுக்கப்போகிறாள்: மணமகன் கட்டையாகப் போகிறான். அதன் குறியீடுதான்!**

**வடமராட்சி. து.தவம்.**
வீட்டில் சுமைதாங்கி யார்? ஆணா? பெண்ணா?
☺**இதிலென்ன சந்தேகம்? பெண்தான். சுமப்பதும் சுமைதாங்குவதும் அவள் பொறுப்புத்தானே!**

## இவ்வார ஜோக்

வாலிபன்:-
டெலிபோன் பூத்தில் என் காதலியுடன் கதைத்துக்கொண்டிருந்தேன். திடீரென்று இந்தப் பொலீஸார் வந்து டெலிபோன் பூத்தின் கதவைத்திறந்து என்னை வெளியே இழுத்துப் போட்டார்.
வக்கீல்:-
அநியாயமாக இருக்கின்றதே!
வாலிபன்:-
என்னை இழுத்துப் போட்டது போலவே, தொடர்ந்து என் காதலியையும் வெளியே இழுத்துப் போட்டார்!
வக்கீல்:-......?!!

# காதல் பிளவால் பாதிப்பு ஆணுக்கா? பெண்ணுக்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையுடன் இணைந்துவாழ்!

மயில்கள் ஆடும் அழகில் நான்
　　மதிமயங்கியே விழ வேண்டும்
குயில்கள் கூவும் கீதத்தில்
　　கோடியின்பத்தில் விழ வேண்டும்
துயிலே கொள்ளா அலையைப்போல்
　　துள்ளி யிங்குநான் வீழ்வேனோ?
புயலும் தென்ற லாவதுபோல்
　　புதுமை செய்து வாழ்வேனோ?
இதுதான்....... வாழ்வின் வனப்போ - இந்த
　　இயற்கையில் தானதன் இருப்போ?

மேகம் மீதினில் நானேறி
　　மீண்டும் மழையாய் பொழியேனோ?
தாகம் தீர்க்கும் தண்ணீராய்
　　தண்மை கொண்டுநான் வாழ்வேனோ?
போகம் வேண்டாப் புவியொன்றை
　　படைத்திட நானும் விளைவேனோ?
ஏகம் கொண்ட உலகாக
　　ஒற்றுமை எங்கும் விளையாதோ?
இதுதான்...... வாழ்வின் அழகோ - இது
　　இருப்பது தானிந்த உலகோ?

புரவிகள் பாயும் பொலிவினிலே
　　புதுமைகள் நானும் செய்வேனோ?
விரவி ஓடிடும் வேங்கைபோல்
　　வீறுகொண்டு நான் எழுவேனோ?
உரசும் விருட்ச(த்து) உயர்வைப்போல்
　　உழைப்பில் நானும் உயர்வேனோ?
பரவிப் பாயும் தமிழைப்போல்
　　பாரில் புகழைப் பெறுவேனோ?
இதுதான்...... வாழ்வின் உயர்வோ - இது
　　இருப்பது தானெம் உழைப்போ?

- அனலையூர்ச் சேந்தன் -

# விருந்து வழங்கியும் ஒட்டுண்ணிகளும்

(கவிதைக் காட்டுரு)

| | | | |
|---|---|---|---|
| சிறுமீன் | சினையிலும் | சிறியதோர் | விதையது |
| பெறுபே | றெல்லாம் | பெற்றதோர் | ஆலாய் |
| நிறுவியே | தன்னெழில் | நிழலினைப் | பரப்பி |
| உறுகால் | விழுதுகள் | உரமாய் | நிமிர்த்தி |
| பெட்புறப் | பசுந்தளிர் | பேறாய் | முதிர்த்தி |
| உட்புகும் | வெப்ப | உறுத்தலைத் | தணித்து (ப்) |
| பட்சிகட் | குணவாய் (ப்) | பழங்களை | வழங்கி |
| நட்புடன் | தன்னினம் | நானிலம் | விடுத்து (க்) |
| கோடைக் | கால | வெப்பம் | தணிக்க (ச்) |
| சாடை | யாக | நீர்வாய் | திறந்து; |
| ஆடை | யாகக் | குளிரினை | ஊட்டி |
| வாடை | வீசி | வரவேற் | பளித்து |
| வழிநடை | களைத்தோர் | இளைத்தோர் | யாவரும் |
| களியுற | அன்பொடும் | கனிவொடும் | இருத்தி |
| ஒளியதும் | புழுக்கமும் | புகுந்திடா | வகையில் |
| தெளிவுறத் | தென்புறத் | திருப்தியை | நல்கி |
| இயற்கை | விருந்தினை | இதமாய் | ஓம்பி, |
| அயற்சி | இன்றி | அப்பணி | தொடர; |
| முயற்சி | யாலே | உணவினைத் | தேடிடா |
| உயர்ச்சி | அடையா | ஒட்டு | உண்ணிகள் |
| குருவிச் | சைகளும் | தூத்துமக் | கொத்தரும் |
| பெருமிச் | சையுடன் | பிழைத்திட | வந்தனர். |
| தருபிச் | சைக்காய்த் | தங்கவும்; | ஆலின் |
| உரு | உச்சத்திலே | ஓங்கவும் | எண்ணினர். |
| வந்தோர் | வரவினை | ஏற்றுயர் | விருட்சமும் |
| சந்தோ | ஷம்எனத் | தாங்கி | நின்றது. |
| அந்தோ | அவர்கள் | உட்பகை | கொண்டு |
| உந்துயிர் | வேர்களை | உள்ளே | செலுத்தி, |
| உயர்ந்து | மிளிர்ந்த | விருந்து | வழங்கியை, |
| நயந்தும் | பார்க்கா | நாசம் | விளைத்து |
| பயந்த | விருந்தெலாம் | பயனற் | றழிய, |
| உரியமும் | காழும் | ஊட்டம் | இழந்தன. |
| அரியஅவ் | ஆலும் | அகால | மானது. |
| கரிசனை | விருந்தும் | புறத்ததாய்ப் | போனது |
| பரிசென | வந்தவர் | பாடும் | கெட்டதே! |
| நல்லார் | அறதிற் | குரியநற் | பொருளெலாம் |
| பொல்லார் | கைப்படப் | போயின; | பெருவளம் |
| எல்லாம் | எப்படி | ஏழைகட் | குதவுமோ! |
| உள்ளார் | இல்லார் | எல்லாம் | இழப்பதோ! |
| இடுக்கண் | காழினைக் | கொன்றுமே | வீழ்த்தினும் |
| அடுத்து | ஊன்றிடும் | நல்லாள் | விழுதுகள் |
| கெடுத்த | ஒட்டிடும் | உண்ணிகள் | அகற்றியே |
| எடுக்கும் | உறுதிநல் | ஏற்றம் | தரட்டுமே! |

- நயினைக் கவிஞர்.நா.க.சண்முகநாதபிள்ளை -

# காணி வரம் வேண்டும்

கற்றவர்க்குக் கைப்பொருளே
　　எங்கள் தெய்வம்
கல்வியழ கூட்டுமொரு
　　தெய்வப் பாவை

நற்றவத்து ஞானியர்கள்
　　நாடுந் தேவி
நம்தமிழர் வாழ்வினிலே
　　ஞானத் தீபம்

விற்பனர்க்கு நாவினிலே
　　வாழும் வாணி
விஞ்சுதமிழ்ப் பாவினிலே
　　நாளும் வாநீ

அற்றவர்க்கு ஆலயத்தில்
　　ஆதா ரம்நீ
அன்னவர்க்கு நாயகனே
　　தானித் 'தர்மீ'

கொற்றவர்க்குக் காரியமே
　　குடியைப் பேணி
கொள்கைவழி காப்பதுவே
　　அறிவா யேநீ

அற்பரென எண்ணியுளம்
　　காய்வ தேன்நீ?
அன்னவர்கள் தங்களது
　　உண்மையபி மானி

சற்றெமக்கு ஆதரவுங்
　　காட்டா யோநீ?
சன்னிதியில் எங்கள்குறை
　　செப்புவே னினி

உற்றதுயர் நம்மவர்க்கு
　　இல்லைக் காணி
உம்முடைய கண்திறந்து
　　காணீர் காணீர்

மற்றவர்க்கு செப்புவமோ
　　உள்ளங் கோணி?
மன்னவரே வந்துவிட்டோம்
　　ராஜ தானி

சிற்றரசர் துணையெல்லாம்
　　ஓட்டைப் பேணி - நின்
சித்தமெனத் தோன்றுவதே
　　வற்றாக் கேணி

சிற்றறிவுக் கெட்டியதைச்
　　சொன்னேன் ராணி
சிந்தனையில் நல்லபதில்
　　சாற்ற லாம்நீ

சிந்தைனையில் நல்லபதில்
　　சாற்றல் வேண்டும்
சிந்துதமிழ் வாழவழி
　　காட்டல் வேண்டும்


இந்துகலை சைவநெறிக்
　　கேற்றம் வேண்டும்
இல்லையின பேதமெனும்
　　மாற்றம் வேண்டும்

சொந்ததமிழ் ஈழமெனும்
　　சொர்க்கம் வேண்டும்
சொர்க்கதமிழ்ப் பூமியிலே
　　சேமம் வேண்டும்

சுந்தரத்துச் சோலைகளும்
　　சூழ்தல் வேண்டும்
சுப்ரமணி பாரதியுஞ்
　　சொக்கல் வேண்டும்

கந்தமலர்க் காவினிலே
　　காதல் ஓசை.... என்
கன்னிதமிழ்ச் செல்வியெனக்
　　கேட்டல் வேண்டும்

- த.தர்மேந்திரா -




# நீ வருவாய் என....!

எப்போதோ வந்து போன
　　இதமான அவளது ஞாபகம்
இப்போதுமென் கண்ணின் வழியே
　　இன்ப விம்பமாக தெறிக்கிறது!
தப்பாமல் அவள் பின்னால் - தினம்
　　அலைபாயு மென் மனமும்
இப்போதும் நனைகிறது - அவளுக்காய்
　　ஒவ்வொரு இரவுகளிலும் கரைகிறது!

ஒன்றுமே புரியாத வயதில்
　　உலகத்தை எனக்குக் க்காட்டியவள்
என்னருகில் வந்து - தினம்
　　கவிதைகள் பல எழுதச் சொன்னவள்
துன்ப வேளையில் எனக்கு
　　இன்ப வழி காட்டி நின்றவள்
கன்னித் தமிழிளம் குமரியாகவும் - என்
　　கருத்தினில் நிறைந்து நின்றவள்

மண்ணைக் காட்டியே எனை
　　மண்ணிலே தவழ விட்டவள்
விண்ணைக் காட்டியே எனை
　　விண்ணிலே பறக்க வைத்தவள்
வண்ணங்கள் பல காட்டி - என்
　　வாழ்வில் கலந்து நின்றவள்
கண்ணைக் காக்கும் இமையாகவும்
　　எனைக் காத்தருள் புரிந்தவள்

அந்த நாள் அழகுக் கோலத்தை - அவள்
　　காட்டிய அமுதிலும் இனிய கோலத்தை
இந்த நாளில் நினைக்கையிலே
　　நெஞ்சமெலாம் தேனாய் இனிக்குதே!
விந்தை பல காட்டி விளையாடும்
　　பைந்தமிழே! என்பாவையே! - உனைப்
பார்த்துப் பார்த்துக் கண்கள்
　　பூத்திருக்குதே நீ வருவாயென!

- எம். சுயர்சன் -
கோண்டாவில்.

# தகுந்த விலை பேண வேண்டும்

அரிசியதைப் பெற்றெடுக்கும் நெல்லம்மா - அதன்
　　அதிவிலையைக் குறைக்கச் சொல்லம்மா
பெரிதுயரும் விலையதனால் நெல்லம்மா - நாம்
　　பெருந்துன்பம் அடைகின்றோம் பாரம்மா!

அடுக்கினிலே வைத்திருந்தால் நெல்லம்மா - அந்த
　　அரிசிவிலை உயர்ந்திடுமா சொல்லம்மா
கெடுக்கவென வந்துதித்தோர் நெல்லம்மா - நிதம்
　　கேளாமல் உயர்ந்திடுவார் விலையம்மா!

கல்லும்மணலும் கலந்திடுவார் நெல்லம்மா -அன்றிக்
　　காற்படியைக் குறைத்திடுவார் நெல்லம்மா
சொல்லும்செயலும் வேறாவர் நெல்லம்மா - அவர்
　　சுகமாய் வாழலாமோ சொல்லம்மா!

நலன்புரிய வேண்டுமென நெல்லம்மா - அவர்
　　நற்பணி புரிவமெனச் சொல்வரம்மா
நலன்புரிவர் தமக்கேதான் நெல்லம்மா - அவர்
　　நானிலத்தில் இருப்பதேனோ சொல்லம்மா!

பொதுப்பணிக்கு வந்திட்டால் நெல்லம்மா - என்றும்
　　பொதுப்பணியே எண்ண வேண்டுமம்மா
பொதுப்பணியை விட்டின்று நெல்லம்மா - அவர்
　　புதுப்பணிகள் செய்கின்றார் நெல்லம்மா!

அரிசியினால் அடைதுயரம் நெல்லம்மா - அதை
　　அளந்திடக் கருவியில்லை நெல்லம்மா
அரிசிவிலை குறைந்திடவே நெல்லம்மா - என்றும்
　　ஆக்கப்பணி செய்திடவே வேண்டுமம்மா!

அரைவயிறும் கால்வயிறும் நெல்லம்மா - நாம்
　　அருந்தியுயிர் வாழலாமோ சொல்லம்மா
கரையில்லா விலையேற்றம் நெல்லம்மா - எப்போ
　　காணாமற் போகுமோ சொல்லம்மா!

கல்லொடு மண்கலந்து நெல்லம்மா - அவர்
　　காற்படி வெட்டுவார் பாரம்மா
நல்லநிலை அரிசியினை நெல்லம்மா - நாம்
　　நானிலத்திற் காண்போமோ சொல்லம்மா!

அரிசிக்கும் உண்டோ தடையம்மா - நீ
　　அநியாய விலையுயர்வு குறையம்மா
தரிசிப்போம் உன்றனையே நாமம்மா - என்றும்
　　தகுந்த விலை பேண வேண்டுமம்மா.

- செ.சுதாகரன் -
மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிலத்தில் உரப்பையின்மேல் அடுக்கப்பட்டிருந்த கீரைப்பிடிகளை மனநிறைவோடு பார்த்துக் கொண்டேன். குடத்துத்தண்ணீரிலே நன்றாகத் தோய்த்துக் கழுவியதால் மண்ணெல்லாம் அகற்றப்பட்டுப் 'புசுபுசு'வென்று செழித்து மதர்த்துக்கிடந்தன.

சும்மா சொல்லக்கூடாது! இராசையா அண்ணை மனம்வைத்துத்தான் தோட்டம் செய்கிறார். தோட்ட வரும்படியிலே சீவிக்கவேண்டிய அவசியம் இல்லாததாலோ என்னவோ, செலவைப்பற்றியெல்லாம் அவர் கவலைப்படுவதில்லை.

இன்று அதிகாலை முள்ளிய வளையிலுள்ள அவருடைய தோட்டம் வரை சைக்கிள் வலித்ததில் நாரிசந்தெல்லாம் விண்விண்ணென்று தெறித்தது. கமலநாதனின் கறள் பிடித்த சைக்கிளை ஜெய்ப்பூர்க்காலுடன் உழக்குவதென்பது மிகக் கடினமான காரியம். இடம்பெயர்வுக்கு முன்னர் அளவெட்டிப்பகுதியில் வீடுபார்க்கப் போனசமயம் என்னுடைய வலக்காலை முழங்காலுக்குக் கீழே பறிகொடுத்திருந்தேன். அன்றிலிருந்து இதுதான் என்னைக் காவித்திரிகின்றது. இந்த இழப்பு ஆரம்பத்தில் என்னை வெகுவாகப் பாதித்தாலும், போகப்போகச் சமாளித்துக்கொள்ளப் பழகிக்கொண்டேன்.

இடம்பெயர்ந்து கச்சாயில் ஆறு மாதம்தங்கி, அதன்பின்னர் மாங்குளத்துக்கு மாறி, அங்கிருந்து எல்லா இடமும் ஓடித்திரிந்து இறுதியாக இங்கு வந்து விழுந்திருக்கிறோம். இவ்வளவு மரண ஓட்டத்தின் பின்னர் எனக்கென்று சொத்துக்களாக எஞ்சியிருப்பவர்கள் என்மனைவியும், மூன்றுபிள்ளைகளும் தான். மூத்தவனுக்குப் பதினைந்து வயது. அடுத்தவளுக்குப் பத்துவயது. கடைசிப் பெண்ணுக்கு வயது ஆறு.

இந்தக் காட்டுக்குள்ளே புல்லால் வேயப்பட்ட கொட்டிலில் எம்முடைய சீவியம் ஒருவாறு கழிந்துகொண்டிருக்கிறது. நாங்களும் மனிதப்பிறவிகள் என்பதை நிரூபிப்பதற்கு இதைத்தவிர எமக்கு வேறுவழிகள் இருப்பதாகத் தெரியவில்லை. எதைப்பற்றியும் கவலைப்படாத மனநிலையானது, துயரங்கள் மிதமிஞ்சி அனுபவித்தவர்களிடம் வந்துசேரும் என்பது உண்மை தானோ?

மளமளவென்று கீரைப்பிடிகளை எடுத்து அடுக்கத் தொடங்கினேன்.

"தேத்தண்ணியைக் குடியுங்கோ. நான் அடுக்கிறன்" என்றவாறு என் மனைவி தேநீரை நீட்டினாள்.

"பொறுமப்பா. அடுக்கிமுடியுது. பிந்திப் போனால் விக்கவும் ஏலாது." திரும்பாமல் கூறினேன்.

விரைவாக அடுக்கிமுடித்துவிட்டு, பையின்வாயைக் குறுக்குமறுக்காகத் தைத்துக் கட்டினேன்.

"பிள்ளைகள் எழும்பிவிட்டினமோ?" தேநீரை வாங்கியபடி கேட்டேன்.

நேற்றிரவு, அரைஇறாத்தல் பாணை மூன்றாக வெட்டிப் பிள்ளைகளுக்குக் கொடுத்தவிட்டு இருவரும் சேர்ந்து பட்டினி கிடந்தது நினைவுக்குவந்தது. இவ்வளவுகாலமும் அரசாங்கம் கிள்ளி வீசிய நிவாரணத்தை வைத்துச் சமாளித்துப் பழகிய எமக்கு, தற்போது அது இல்லாதது பெரிய பாதிப்பாக இருந்தது.

தேர்தல்கள் நெருங்கும் சமயத்தில் வாக்குகளை வளைத்துப்போடுவதற்காகப் புதியபுதிய அறிவிப்புக்களை விடுக்கும் சிலகட்சிகள், வன்னிப்பெருநிலப்பரப்பில் அன்றாடச் சீவியத்தை நடத்தவே பெரிதும் சிரமப்படும் 'இந்நாட்டு' மக்களைப்பற்றி அணுவளவேனும் சிந்திப்பதேயில்லை.

என்னுடைய ஜெய்ப்பூர்க்காலையே பார்த்துக்கொண்டிருந்தவள்மேல் மறுபடியும் கேள்வியை வீசி அவளை இப்பக்கம் திரும்பவைத்தேன்.

"ஏன் ராணி! அதுகள் எழும்பி விட்டுதுகளோ?"

"ம்....? மூத்தவன் பல்லைத்தீட்டிக் கொண்டு பனைவட்டைப்பார்த்து முறைக்கிறான். மற்றதுகள் எழும்பாமப் படுத்துக்கிடக்குதுகள்" புறங்கழுத்திலே கொடூரமாகக்குத்திய காட்டு நுளம்பைப் படீரென்று அடித்து விட்டுக் கூறினாள் என் மனைவி.

"ஏனப்பா? கொஞ்சநாளா அவன்ர போக்கு ஒரு மாதிரிக்கிடக்கு! என்னோட அவ்வளவு கதையும் இல்லை. என்ன ஏதெண்டு கேட்டனீரே?" கோப்பையைக் கொடுத்தபடி கேட்டேன்.

"எனக்கென்ன தெரியும்? நான் இஞ்சபடுகிறபாட்டுக்க உதை எங்க கவனிக்கிறது?" உரப்பையைத் தூக்கிக் கட்டுவதற்கு வாகாகச் சைக்கிளைத் திருப்பிப்பிடித்தாள் அவள். அவளுடைய குரலிலிருந்த சலிப்பை உணர்ந்துகொண்டேன்.

"சரியப்பா நான் ஏன் கேட்டனான் எண்டா.... பிரச்சனையான நேரம். அவனவன் அங்க பாயிறான். அதுதான்....! சரி நீ பெடியனை மறக்காமப் பள்ளிக்கூடம் அனுப்பிவிடும். அதோட கொஞ்ச நேரம் பொறுத்து ரெண்டாவதைச் சந்தைப்பக்கம் அனுப்பும். நான் பாத்து ஏதன் வாங்கிக் குடுத்துவிடுறன். வாறனப்பா."

சைக்கிளை உழக்கத் தொடங்கினேன்.

வரிசையாக நின்ற பாலைமரங்கள் என்னை வெகுவிரைவாகக் கடந்து போயின.

* * *

நன்கு கிளைவிட்டுச் சடைத்த மரங்களுக்கிடையே தெரிந்த விகாரையின் முடிப்பகுதியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான் பெரேரா. அவனுடைய கையிலிருந்த கடிதம் சுழன்றடித்து வீசும் காற்றுடன் ஓடிப்போக முயற்சித்துக் கொண்டிருந்தது.

மிகநீண்ட ஓடுபாதையின் வழியாக நடந்துவந்த திஸநாயக்கா இவனைக் கண்டுவிட்டு ஒருகணம் தயங்கி நின்றான். பின்னர் ஏதோ யோசித்து விட்டுத் துரிதமாக அருகில்வந்தான்.

திஸநாயக்காவைக் கண்டதும் பெரேராவின் முகத்தில் முறுவல் தலைகாட்டியது.

"பெரேரா!உன் மனைவியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதா? நிறைந்த சந்தோசத்துடன் இருக்கிறாய்!"

'ஆம்' என்பதுபோலத் தலையசைத்தான் பெரேரா. ஒளிவீசிய அவனுடைய விழிகள் கடிதத்தின் அடிப்பகுதியை மீண்டும் ஒருமுறை மேய்ந்தன.

"பிள்ளைகள் இருவரும் சுகமாக இருக்கிறார்களா?" ஆதரவோடு கேட்டான் திஸநாயக்கா.

"ஆம் திஸா! மூத்தவள் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கிவிட்டாள். பாரேன் இந்தக் கடிதத்தின் முடிவிலே அப்பா என்று தன்னுடைய சின்னக் கையால் எழுதியிருப்பதை...! அதைப் பார்த்தவுடன்...."

"......மனம் குளிர்ந்து போனாயாக்கும்? நீ கொடுத்துவைத்தவன் பெரேரா...! அன்பான மனைவி அருமையான பிள்ளைகள்."

"அப்படிச் சொல்லாதே திஸா. எல்லாம் இருந்து என்ன பிரயோசனம்? இல்வாழ்க்கையின் ஒவ்வொரு கணங்களும் அவசியமானவை. இழக்கக் கூடாதவை. பிரிவினால் ஏற்படும் துன்பம்போல எதுவுமில்லை. நீ தனிநபர் திஸா. உனக்கு இவை விளங்காது. கடந்த எட்டுமாதங்களாக நான் வத்தேகமவுக்குப் போகவில்லை என்றால் பாரேன்! என்பிள்ளைகளின் மழலைக் குரல்களைக் கேளாமல், மனைவியின் அன்பான வார்த்தைகளில் மூழ்காமல் என்னால் எப்படி இருக்கமுடிந்ததென்று வியப்பாக உள்ளது திஸா!"

பெரேராவின் குரலை ஏக்க உணர்வு கப்பென்று கௌவிக்கொண்டது. கையிலிருந்த கடிதத்தை மறுபடியும் பார்த்தான். எழுத்துக்கள் அவனுடைய கண்களைவிட்டு மறைந்தன.

"ஏன் பெரேரா! இம்முறையும் உனக்கு லீவு கிடைக்கவில்லையா?"

"அதை ஏன் கேட்கிறாய்? இந்த வேலையை நிரந்தரமாக விட்டுவிட வேண்டும் என்று எத்தனையோ தடவை விண்ணப்பித்துப் பார்த்துவிட்டேன். தருகிறார்களில்லை. என்னைப் போன்ற திறமைசாலிகளை இழக்க விரும்புகிறார்களில்லையாம். அத்துடன் என்னுடைய உதவி அடிக்கடி தேவைப்படுவதால் லீவுகூடத் தரமுடியாதாம்!.... அப்பாவிகளை அழிப்பதைத்தான் இவர்கள் திறமை என்று கருதுகிறார்கள் போலிருக்கிறது!"

வார்த்தைகளில் வெறுமை [illegible] வினான் பெரேரா. [illegible] வெளிக்காட்ட வழியில்லாமல் நகத்தைக் கடித்துத் துப்பினான்.

அவனைச் சற்றுநேரம் மௌனமாக நோக்கிய திஸநாயக்கா அலட்சியமாகக் கூறினான்,

"நீ இன்னமும் நவாலிச் சம்பவத்தை மறக்கவில்லைப் போலிருக்கிறது! போரென்றால் இவ்வாறெல்லாம் இலக்குகள் தவறுவது சகஜம். இதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது."

"திஸா நீ வெகு இலகுவாகச் சொல்லிவிட்டாய். அது தற்செயலானது அல்ல. அந்தச்சம்பவம் நடந்ததிலிருந்து நான் படும் வேதனை எவருக்குத் தெரியும்? என்னுடைய அறையின் சுவர்களைக் கேட்டுப்பார். தனிமையில் கழியும் இரவுகளில் என்மன உணர்வுகளை அவை உள்வாங்கி வைத்திருக்கலாம்!"

முகத்தை அழுந்தத் துடைத்தான் பெரேரா.

"வருத்தப்படாதே பெரேரா"

"என்றாலும்... அவர்கள் ஏன் ஒன்றும் செய்யவில்லை?" விடை வராது எனத் தெரிந்திருந்தும் வினாவை வீசினான் பெரேரா.

"என்னைக் கேட்டால்....?

"ஒருவேளை... அப்படிச் செய்திருந்தாலும்..."

அவ்விடத்தை நோக்கி ஓடி வந்தவனைப் பார்த்ததும் பெரேரா பேச்சை நிறுத்தினான். வந்தவன் பெரேராவின் முன் விறைப்பாக நின்றான்.

"உங்களுக்கு அவசர அழைப்பு!" இவ்வாறு அவன் கூறியதைக் கேட்டதும் பெரேரா கடிதத்தை மடித்துப் பையினுள் வைத்தபடி விரைவாக எழுந்தான். இலேசான புன்சிரிப்புடன் நின்ற திஸநாயக்காவிடம் விடைபெற்றுக்கொண்டு அந்தக் கட்டடத்தை நோக்கி ஓடத்தொடங்கினான்.

* * *

நேரம் ஒன்பது மணியைத் தாண்டிவிட்டது. சூரியன் ஒவ்வொரு மரக் கொப்பாகத் தாவித்தாவி மேலேறிக் கொண்டிருந்தான்.

எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. தேங்கிக்கிடந்து வாடத்தொடங்கியிருந்த கீரைப்பிடிகள் என்வீட்டு அடுப்பை அணைக்கும் நீர்த்துளிகள் போலத் தென்பட்டன. இவ்வளவு நேரமாகத் தொண்டை கிழியக்கத்தியும் ஏழு பிடிகளுக்குமேல் என்னால் விற்க முடியவில்லை. ஐம்பது பிடிகளையும் விற்றால்தான் இராசையா அண்ணையின் இருநூறு ரூபாவைக் கொடுத்துவிட்டு எனக்கான இலாபமான ஐம்பது ரூபாவைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

காட்டுக்கீரையையும், முருங்கையிலையையும் தின்றுபழகிய எங்கள் சனத்துக்கு, காசுகொடுத்துக் கீரை வாங்கவேண்டிய அவசியம் பெரியளவில் இராதுதான். என்றாலும், சற்றுத் தள்ளிக் கீரைவிற்கும் வள்ளிப்பிள்ளைக் கிழவியின் வாய்வல்லமை எனக்கில்லை என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சனம் என்னமாதிரிப் புழுத்துப்போய்க் கிடக்கிறது! நான் என்னுடைய ஜெய்ப்பூர்க் காலை நீட்டிக்காட்டி அனுதாபஅலையைப் பெற்றா கீரை விற்கமுடியும்?

நேற்றிலிருந்து சாப்பிடாதது என் வயிற்றைப் பிசைந்தது. சற்றுத் தூரத்தில் முருகையாவின் தேநீர்க் கடையிலிருந்தெழும் வாசனை என்னைத் திணறவைத்தபடியால், 'இருக்கும் சில்லறையைக் கொண்டுபோய்ச் சாப்பிடுவோமா?' என எண்ணினேன். மறுகணம், அந்த நினைப்பும் என்னை விட்டுத் தொலைந்துபோனது. கடைப் பக்கம் திரும்பிப் பார்ப்பதைத் தவிர்த்தேன்.

"தம்பி. கீரை என்ன விலை?"

சற்று ஆடம்பரமாக உடையணிந்த ஒருவர் கேட்டார். ஒருபிடியை எடுத்து அவர் உலுப்பிய உலுப்புதலில் இரண்டொரு இலைகள் ஒடிந்து வீழ்ந்தன.

"அஞ்சுரூபா ஐயா." என்றேன்.

"அஞ்சு ரூபாவோ? மூண்டுபிடி எடுக்கிறன். ரெண்டுரூபாப்படி தாறன்." என்றவர் கீரைப்பிடிகளைக் கிண்டித் துளாவத் தொடங்கினார்.

"இல்லை ஐயா. கட்டாது. நாலு ரூபாவுக்குத்தான் வாங்கினனான்"

"ஏன்ராப்பா இப்பிடிக் கொள்ளையடிக்கிறியள்? அறாவிலைக்கு விக்கிறது குடிச்சுக் கூத்தாடத்தானே!"

கீரைப்பிடியைப் போட்டுவிட்டு வள்ளிப்பிள்ளையிடம் நடந்து போனார். அவர் போவதை வெறுப்புடன் பார்த்துவிட்டு மனம் சலித்துப் போய் அமர்ந்து கொண்டேன்.

உடுவில் அரவிந்தன்

"அப்பா!"

பின்புறம் அழைத்த குரல் கேட்டுத் திரும்பினேன். என்னுடைய சின்ன மகள் கழுத்தை இறுகக்கட்டிக் கொண்டாள். மூத்தவள் ஒன்றும் பேசாமல் அங்குமிங்கும் வேடிக்கை பார்த்தாள்.

'வீட்டில் மனைவி காத்திருப்பாளே! பணம் சேரட்டும்.' என எண்ணிக் கொண்டேன்.

"அப்பா! பசிக்குதப்பா!"

என்னுடைய தோளின் மேலால் முருகையாவின் கடையைப் பார்த்துக் கொண்டிருந்த சின்னவள் சிணுங்கினாள்.

எனக்குத் திக்கென்றது.

குழந்தைகள் 'பசி' என்று அழுவதைப்போலக் கொடுமை உலகத்தில் எதுவுமில்லை. அதைப்பார்க்கும் சந்தர்ப்பம் எந்தப் பெற்றோருக்கும் கிட்டவேகூடாது.

பொக்கற்றினுள்ளே கைவிட்டு இரண்டு ஐந்து ரூபா நாணயங்களை எடுத்து மூத்தவளிடம் கொடுத்து பணிஸ் வாங்கி வருமாறு அனுப்பினேன். அவள் வந்ததும் ஆளுக்கொன்றாகக் கொடுத்தேன்.

"அண்ணாக்கு....?" என்றாள் சின்னவள்.

"அண்ணா பள்ளிக்குடம் போட்டான் எல்லோ? வந்த உடனை நான் வாங்கிக் குடுப்பனாம் நீ சாப்பிடம்மா."

அவள் பணிஸை மெல்லக் கடிப்பதை மனநிறைவுடன் பாாத்துக் கொண்டிருந்தேன். கீரைப்பிடிகள் தூங்கிவழியத் தொடங்கின.

* * *

"பிளைற் லெப்ரினன்ற் பெரேரா! குறிப்பிட்ட இலக்கு தெளிவாகத் தெரிகிறதா? ஓவர்"

மெல்லிய இரைச்சல் பெரேராவின் காதுகளுக்குள் மோதியது.

"இல்லை சேர். இப்போது என்னுடைய வேகம் மணிக்கு முன்னூற்று முப்பது கிலோமீற்றர் அத்துடன் காட்டுமரங்களும் மறைக்கின்றன. ஓவர்!"

தன்னுடைய முகத்தை மூடியிருந்த கண்ணாடிக் கவசத்தினுள்ளே முணுமுணுத்தான் பெரேரா. அவனுடைய விழிகள் முன்னிருந்த வரைபடத்தில் மொய்த்தன.

'கடலிலிருந்து சரியாக எட்டு மைல்கள் தொலைவில் அந்தச் சிவப்புப் புள்ளி உள்ளது. எங்கென்று அதைத் தேடுவது? இம்முறை என்னுடைய் இலக்குத் தவறக்கூடாது. முந்தைய தவறு மறுபடியும் நிகழ ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்!'

மீண்டும் ஒருமுறை கிழக்கு மேற்காகப் பாய்ந்தான். இம்முறை தனது இலக்கைச் சரியாக அடையாளம் கண்டுவிட்ட திருப்தி பெரேராவின் முகத்திலே பரவியது. இருப்பினும், ஏதோ ஒருவித தடுமாற்றத்துடனேயே கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டான்.

"சேர். அந்த இடத்தைவிட்டு சுமார் ஐம்பது மீற்றர் தள்ளி அதிகளவில் சனம் நிற்கிறதே!"

"பெரேரா! நீ எதற்காக யோசிக்கிறாய்?...... ஒன்றை நினைவில் வைத்துக்கொள்! எல்லோருமே அவர்கள் தான்!"

"இருந்தாலும்......"

"முட்டாள்! சொன்னதைச் செய்!"

* * *

ஊவென்று உயிரை உலுப்பிய இரைச்சல் என்னை நிமிரவைத்தது. வெகுவாகப் பழகிவிட்ட அந்த ஒலி சந்தையில் நின்றவர்களை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. இப்படி எத்தனை தடவைகள் அனுபவப்பட்டிருப்போம்!

வானப்பரப்பையே மலிவுவிலைக்கு வாங்கிவிட்டது போன்ற எண்ணத்தில் சுழன்றடித்தது அது.

"குத்துறான்! குத்துறான்!" என்று யாரோ உரத்த குரலிலே கத்தினார்கள். நான் பிள்ளைகளை அணைத்துக்கொண்டு தரையோடு தரையாகச் சரியமுயற்சித்தவேளை, தகரக்கொட்டகைகளும் மரங்களும் என்மீது பொலுபொலுவென விழுந்தன. ஏதோ ஒரு விசை என்னையும், என்பிள்ளைகளையும் ஆளுக்கொரு திக்காகப் பிரித்தெறிந்தது. பொங்கியெழுந்த புழுதிப் படலத்தினூடாக அவலக்குரல்கள் ஓங்கி ஒலித்தன.

என்னுடைய இடதுவிலாப்புறம் பிசுபிசுப்பதை உணர்ந்து அதைப் பொத்துவதற்கு வலக்கையைத் தூக்க முயன்ற போது, அது அங்கில்லாததைக் கண்டேன். ஓவென்று ஓலமிடவே என்னால் முடிந்தது. சிரமப்பட்டு ஒருவாறு தலையை நிமிர்த்திப் பார்வையை அங்குமிங்கும் படரவிட்டேன்.

சிதறிப்போன கீரைப்பிடிகளின் நடுவே என் இளையவள் கிடந்தாள். தூசு படிந்த தலையின் பக்கப்புறம் முழுமையாகச் சிதைந்திருந்தது. அரைகுறையாகக் கடிக்கப்பட்ட பணிஸை அவளுடைய பிஞ்சுவிரல்கள் இறுகப் பற்றியிருந்தன.

சற்றுத்தள்ளி என்னுடைய மூத்த மகளின் தலைமட்டும் கிடந்தது. அதற்கும் அப்பால் வள்ளிப்பிள்ளை உட்பட பலரின் உயிரற்ற உடல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பரவியிருந்தன.

குழறியழக்கூட என்னால் இயலவில்லை. தலையை நிலத்துடன் மோதி மோதிப் புலம்பினேன். முதுகுப்புறம் இரத்தம் சளசளத்தது.

கொஞ்சம் கொஞ்சமாக அகல ஆரம்பித்திருந்த என் நினைவில், எந்நேரமும் ஏதோ ஒன்றை வெறித்தபடியிருக்கும் எனது மகன்மட்டும் கலங்கலாகத் தோன்றி மறைந்தான்.

மெல்ல மெல்ல என்னுடைய பார்வை மங்கத் தொடங்கியது.

(யாவும் கற்பனை)

## குறள் வெள்ளம்

நாலுபேர் மதிக்க வாழும் உயர்ந்த நிலைமை - அதாவது மேன்மை - எனப்படுவது யாது?

படிப்பல்ல; பட்டம் பதவியுமல்ல; தமது கருமங்களை நிறைவேற்றச் சுற்றிச் சுழலும் மனிதர்கள் புகழும் பொய்யான பாராட்டுமல்ல - மேன்மை.

பகட்டான வாழ்வல்ல; சொத்து சுகமல்ல; சொகுசான சீவியமுமல்ல - இந்த மேன்மை.

நீ வாழும் வகைகண்டு உலகோர் மதித்து நிற்பதே மேன்மை.

என்றும் சறுக்காமல் - காலங்காலமாக ஆசாரம் தவறாமல் - மனதாலும் உடலாலும் வழுவாமல் - வாழும் வாழ்வை உலகம் மதிப்பதே மேன்மை.

ஒழுக்கம் தருகின்ற பரிசுதான் இந்த மேன்மையே தவிர வேறில்லை.

ஒழுக்கத்திலே குறைவு கண்டால் உலகம் சும்மா இருக்காது. பழி சொல்லத் தொடங்கிவிடும். வேறெந்தத் தகுதியும் வந்து ஒழுக்கத்தைக் காத்துவிடமாட்டாது.

உலகம் பழிக்க வாழும் வாழ்வில் கூட நாலுபேர் மதிக்கிற மாதிரி இருக்கும். ஆனால் அவர்கள் கூட தமது கருமத்தை முடித்துக் கொண்டு, அப்பால் சென்று பழிப்பார்கள்.

**'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.'** - 0137 -

அம்பிகைபாகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிப் பணத்தை அள்ளிக்

கடற்பறவைகளைப் பற்றி ஏற்கனவே விவரித்திருந்தோம். இவை பொதுவாக குஆனோ (GUANO) பறவைகள் எனவும் அழைக்கப்படும். குஆனோ என்பது இப்பறவைகளின் எச்சத்தைக் குறிக்கும். குஆனோ உற்பத்தியில் மிகச் சிறந்தவை நீர்க்காகங்களும் (CORMORANTS) பூபீசும் (BOOBIES) ஆகும். இவை பெரிய பறவைகள். இருபது அல்லது அதிலும் அதிக அங்குலங்கள் உயரமுடையவை. இவற்றின் எச்சம் அதிக அளவிலிருக்கும்.

குஆனோ பறவைகள் பல நாடுகளிலும் காணப்பட்டாலும் பெரு நாட்டிலேயே மிக அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.



கூட்டில் இரு குஞ்சுகள், இரு பருவ நிலைகளில். இந்நிலைகள் உப்பு, மிளகு (SALT AND PEPPER) நிலைகள் எனப்படும் வெள்ளை - உப்புநிலை, கறுப்பு - மிளகு நிலை. உலர்ந்த குஆனோவினால் கூடு செய்யப்பட்டு, இறகுகளினால் மெத்தை செய்யப்படும்.

பெருநாடு தென்அமெரிக்காவின் மேற்குக்கரைக்குரியது. இக்குவடோருக்கும் (ECUADOR) சிலிக்கும் (CHILE) இடைப்பட்ட நாடு. தென் அமெரிக்காவின் மேற்குக்கரைக்குரிய அன்டிஸ் மலைத்தொடர் (ANDES) இந்நாட்டிற்கூடாகவும் செல்லும். குஆனோ பறவைகள் குளிரான சூழலை விரும்புபவை. பெரு நாடு இவற்றிற்கு ஏற்ற சூழலாய் அமைகின்றது. மேற்படி பறவைகள் பெரு நிலப்பரப்பிலும், அண்டிய தீவுகளிலும் வாழ்கின்றன, கூடுதலாகத் தீவுகளில். அவை தீவுகளை விரும்புவதற்குக் காரணம் அங்கு எதிரிகள் இல்லாதிருத்தலே ஆகும். பெரு நிலப்பரப்பில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் இப்பறவைகள் தரித்து இரவைக் கழிப்பதைக்

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

கண்ட ஆட்சியாளர் 1946இல் எட்டடி உயரமான நெடிய மதிற்சுவரை அமைத்து காவலாளிகளையும் நியமித்திருந்தார்கள். பறவைகளின் எதிரிகளை (மனிதன் உட்பட) விரட்டுவதற்கு. இம்முயற்சி பெரும் வெற்றியளித்துள்ளது. இன்று இப்பிரதேசத்திலும் குஆனோ பறவைகள் லட்சக்கணக்கில் வாழ்ந்து, 'பெற்றுப்' பெருகுகின்றன. பெரு நாட்டில் லட்சக்கணக்கில் இப்பறவைகள் வாழ்கின்றன. முக்கியமான தீவாகிய ஆசியாதீவில்(ASIA ISLAND) முப்பது லட்சம் வரை வாழ்வதாகக் கணிப்பீடுகள் குறிப்பிடுகின்றன. இப்பறவைகளுக்கு வேண்டிய தகுந்த பாதுகாப்பை அரசு வழங்குகின்றது. (இங்கு மனிதருக்கு இல்லாத பாதுகாப்பு அங்கு பறவைகளுக்குக் கிடைக்கின்றது) பெரு நாட்டைப் பொறுத்தவரை பொன்னைக் காட்டிலும் கூடிய பெறுமதிவாய்ந்தவையாக இப்பறவைகள் கருதப்படுகின்றன.

குஆனோ பறவைகள் நிமிர்ந்த தோற்றமுடையவை, கறுப்பு உடலும் வெள்ளை மார்புமுடையவை, அதனால் இவை கூட்டமாக நிற்கும்போது ஏதோ உடைபவனிக்குத் தயார் நிலையிலிருப்பதுபோலத் தெரியும். (தூரப் பார்வைக்கு இவை அசப்பில் பெங்குயின்களை ஒத்தவை போலத் தெரியும், ஆயினும் இவை பறக்கும் இயல்பை இழக்கவில்லை)

மனிதன் பயிர் செய்ய ஆரம்பித்த காலத்திலேயே சேதனவுறுப்பிற்குரிய கழிவுகளையும் பசளையாகப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான். அதனால் பசளைப் பாவனையையும் விவசாயத்தின் வயதுக்கு ஈடாதானதாகக் கொள்ளலாம். ஆதிமனிதன் தனது விவசாய நிலங்களுக்கு உரமிடுவதற்கு மீன், கடற்சாதாளைகள், சாம்பல், தூய்மையாக்கப்படாத இரசாயன உப்புக்கள் போன்றவற்றையெல்லாம்

## பொன்னைவிடப் பெறுமதிவாய்ந்த

பயன்படுத்தியிருக்கின்றான். குப்பையைக் காட்டிலும் சாணம் சிறந்தது. சாணத்தைக் காட்டிலும் ஆட்டெரு சிறந்தது. ஆட்டெருவைக் காட்



இன்கா கடற்பட்சிகள் (INCATERNS). சிலி நாட்டவர்கள் இப்பறவையை மொன்ஜாஸ் (MONJAS) என்று அழைப்பார்கள். அவர்கள் மொழியில் இதன் கருத்து கன்னியாஸ்திரி (NUN). இவையும் குஆனோ பறவைகளே.

டிலும் மனிதக்கழிவு சிறந்தது. மனிதக்கழிவைக் காட்டிலும் கோழிக்கழிவு சிறந்தது என்பது யாவரும் அறிந்ததே. இவையனைத்தையும்விட மீனுண்ணும் பறவைகளின் எச்சம் மிகச்சிறந்ததாகும். மேலும் செயற்கை உரம் சேர்ப்பதாயிருந்தாலும் மண்ணில் இயற்கை உரம் இருப்பது மிகஅவசியம். இயற்கை உரங்களிலேயே சிறந்தது குஆனோ. இதைத் தெரிந்து கொண்டதனாற் போலும் இன்கா அரசர்களின் காலத்திலேயே குஆனோ பறவைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இப்பறவைகளைக் கொல்வது பாரதூரமான குற்றமாகக் கருதப்பட்டது. இன்றும் சிறந்த



கதாநாயகன் வீடு திரும்புகின்றார் (கதாநாயகியாகவுமிருக்கலாம்). லட்சத்தில் ஒருவரா இவர்?

பாதுகாப்பு வழங்குகின்றார்கள். பறவைகளும் தமது எச்சம் வாயிலாக லட்சக்கணக்கில் (மில்லியன் மில்லியன்) "டொலராக" பணம் சம்பாதித்துக் கொடுக்கின்றன. பறவை மலத்துக்கு இவ்வளவு விலையா? ஆச்சரியமாக இருக்கின்றதா??

குஆனோ தோன்றுவதற்கு சில நிபந்தனைகள் இருப்பது அவசியம். குளிரான இடமாக இருக்க வேண்டும். மழை பெய்யக்கூடாது. இத்தகைய சூழலைக் கொண்டதே பெரு நாடு. அங்கு மழை பெய்வது மிக அருமை. 10 வருடங்கள், 20 வருடங்கள் என்று தொடர்ந்து

மழை பெய்யாதிருக்கும்.
மேலும் தென்துருவத்திலி
டம் நாட்டைத் தழுவிச்செ
களின் பலனாக பறை
குஆனோ தோன்றும். இ
மலையாக வளரும். சில
கள் வரை உயரமுள்ளை
வரை வயதுள்ளவை.

### குகல

குஆனோ வியாபாரப்பெ
சந்தையில் புகுத்தப்பட்டது
120 வருடங்களுக்கு முன்
தில் குஆனோ வெட்டியெ
யாகப் பொதிசெய்யப்பட்டு
பட்டது. இப்பொழுது ஆ

பட்டு பொதிசெய்யப்பட்டு
அதனால் மிகச்சிறந்த சே
உரமாகப் பயன்படுகின்ற
மிகமுக்கியமான ஏற்றுமதி
அந்நாட்டின் பொருளாதாரபே
யுள்ளது.

குஆனோ பறவைகளை
நகரங்களே (GUANO C
IES) தோன்றியுள்ளன.
பெயர் அருவருப்பைத்தரும்
பதனால் அந்நகரங்கை
பறவை நகரங்கள்' (BIRD C
IES) என்றழைக்கின்றார்
இங்கு குஆனோ ஆய்வுகூ
கள், ஆலைகள், வைத்தி
லைகள், பாதுகாப்பு நிறுவ
கள், இங்கெல்லாம் கடமை
றும் மக்கள், இவர்களு
வேண்டிய வாழ்விடங்கள் பே
றவை உண்டு. மக்கள் வாழ்
னால் அவர்களின் பிள்ளை
ளுக்கு வேண்டிய கல்விக்கூ
கள், சகலருக்கும் வேண்
விளையாட்டரங்குகள், போ
வரத்துச் சாதனங்கள், களி
டக்கூடங்கள், ஹொட்டல்
வைத்தியசாலைகள், பொ
நிலையங்கள், கந்தோர்கள்,
மன்றங்கள் போன்ற இன்
ரன்ன பலவசதிகளும் தேவை
படுமல்லவா? பறவை எச்சத்
அடித்தளமாகக்கொண்டு பெ
நகரங்களே இயங்குகின்ற
நாடே இங்ஙனம் இயங்கும்போ
நகரங்கள் இயங்குவதில் ஆ
என்ன இருக்கின்றது?




குஆனோ பறவைகள் மீன் வேட்டையில் ஈடுபட்டிருக்கின்றன.



பறவைகளின் பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்ட சுவர். சீனப்பெருஞ்சுவரை நினைவூட்டுகின்றது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...க் கொடுக்கும் குஆனோக்கள்!



சிவப்பு அலை (RED TIDE) நீலக்கடலுக்கும் சிவப்பு அலைக்கும் வேறுபாடு தெரிகின்றதா? எவ்வளவு பரந்த அலைப்பரப்பில் சிவப்பு அலை தெரிகின்றது!

...ருக்கும். குளிரான இடம். ...த்திலிருந்து குளிர் நீரோட் ...விச்செல்லும். இந்நிலைமை ... பறவையெச்சம் இறுகி ...ம். இது கல்லாக இறுகி ... சில மலைகள் 150 அடி ...ள்ளவை. 2500 வருடங்கள் ...வ.

## ...நகன்

...ாரப்பொருளாக சர்வதேசச் ...பட்டது அண்மையில்தான். ...5 முன்பாக, ஆரம்பகாலத் ...ட்டியெடுக்கப்பட்டு, நேரடி ...ப்பட்டு, ஏற்றுமதி செய்யப் ...வு ஆலைகளில் பதனிடப்

## ...தவை!


...பட்டு அனுப்பப்படுகின்றது. ...ந்த சேதனவுறுப்பிற்குரிய ...கின்றது. பெரு நாட்டின் ...றுமதிப்பொருள் இதுதான். ...தாரமே இதில்தான் தங்கி

...வகளை நம்பி குஆனோ ...NO CIT- ...ளன. இப் ...ந்தரும் என் ...ங்களைப் ...IRD CIT- ...ன்றார்கள். ...ய்வுகூடங் ...வத்தியசா ... நிறுவனங் ...டமையாற் ...ர்களுக்கு ...கள் போன் ...ர் வாழ்வத ...பிள்ளைக ...விக்கூடங் ... வேண்டிய ..., போக்கு ... களியாட் ...ட்டல்கள், ... பொலீஸ் ...ர்கள், நீதி ... இன்னோ ... தேவைப் ...எச்சத்தை ...டு பெரிய ...கின்றன. ...தம்போது, ...ில் ஆச்சரியப்படுவதற்கு



குஆனோ பறவைகள் தமது கூடுகளில், கொத்தும் தூரம் (PECKING DISTANCE) என்பார்களே அதைவிடக்குறைவான தூரத்தில் நெருக்கமாக இருக்கின்றன. அப்பப்பா எவ்வளவு நெருக்கம்? மனிதனால் இவ்வளவு நெருக்கமாக இருந்து கொண்டு சண்டை பிடியாமல் இருக்க முடியுமா?

அதிகாலையில் இப்பறவைகள் கூட்டமாகச் சென்று நீராடும். பின் உணவு கொள்வதில் ஈடுபடும். பொதுவாக நீர்க்காகங்கள், நமது நாட்டில் உள்ளவற்றைப்போன்று, சுழியோடியே



கறுப்புக்கோட்டும், வெள்ளை வெஸ்ற்றும் அணிந்து குஆனோ பறவைகள் வரிசையில் உடை பவனிக்குத் தயார் நிலையில் நிற்கின்றன.

மீன் பிடிக்கும். ஆனால் குஆனோ நீர்க்காகங்கள், ஏனையகுஆனோ பறவைகளைப் போன்று, கடலின் மேற்பரப்பில் பறந்துகொண்டிருக்கும். மீன்கள் தென்பட்டதும் கடலில் பாய்ந்து அவற்றைப் பிடித்துக்கொள்ளும். இப்பறவைகள் எல்லாம் கூட்டமாகவே இரைதேடும். அவற்றிடையே ஒற்றுமை நிலவும். வெறித்தன்மையான போர் நிகழ்வதில்லை. மீன்பிடிப்பதில் பூபிசுக்கு நிகர் வேறொன்றுமில்லை. சகல பறவைகளும் இரவு நேரத்தை நிலத்தில் கழிக்கும். எள்போட்டால் எள் விழாது என்பார்களே அவ்வண்ணம் மிகநெருக்கமாக இருந்து இவை ஓய்வெடுக்கும்.

அவ்வண்ணமே கூடு கட்டி, முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். அலகுத் தூரத்திலும் குறைவான தூரமே பறவைகளுக்கிடையே இருக்கும். இத்தகைய நெருக்கமான சூழலில் எங்ஙனம் பெற்றோர்கள் தங்கள் குஞ்சுகளை இனங்கண்டு உணவூட்டுகின்றன என்பது அதிசயத்திலும் அதிசயம்.


மேற்படி பறவைகளின் வாழ்க்கைக்காலம் (LIFE SPAN) மிகக்குறுகியது என்று ஆய்வுகளின் மூலம் கண்டறிந்துள்ளார்கள். ஏனைய நீர்க்காகங்கள் பறவையகங்களில் 20 ஆண்டுகள் அல்லது மேலாக வாழ்ந்திருக்கின்றன. ஆயினும் குஆனோ நீர்க்காகங்கள் பொதுவாக மூன்று ஆண்டுகளுக்குள் மரித்துவிடும்.

பெரு நாட்டின் கரையில்தெற்கிலிருந்து குளிர் நீரோட்டம் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். சில சமயங்களில் வடக்கிலிருந்து (பூமத்தியரேகைப் பகுதியிலிருந்து) வெப்ப நீரோட்டமும் வருவதுண்டு. இக்காலங்களில் சாதாரண அல்கா மலர்ச்சி ஏற்படுவதுண்டு. இது அங்கிகளுக்குச் சாதகமான விளைவு. சில சமயங்களில் "சிவப்பு அலை" (RED TIDE) என்ற நிகழ்ச்சியும் ஏற்படுவதுண்டு. இதற்குக் காரணம் டைனோபிளஜிலேற்றுக்கள் (DINOFLAGELLATES) எனப்படும் தனிக் கல அங்கிகள். இவை மிக அதிக எண்ணிக்கையில் பெருக்கமடைந்து பிராணவாயுப் பற்றாக் குறையை ஏற்படுத்துவதுடன் நச்சுத்தன்மையையும் ஏற்படுத்தும். அதனால் சிவப்பு அலையைக் கண்டதும் மீனினம் பறந்தோடிவிடும், அல்லது மடியவேண்டி நேரிடும். குஆனோ பறவைகள் பெரும்பாலும் உணவின்றி மடிய நேரிடும். அதனால் சிவப்பு அலை தென்பட்டதும் இப்பறவைகள் விசர்பிடித்தவை போலத் திசைகெட்டுத் தெறித்தோடும். பலபறவைகள் தகாத சூழல்களுக்குச் சென்று பெரும் எண்ணிக்கையில் மரிப்பதுண்டு. சிவப்பு அலை உணவுக்கும் உண்பவைக்கும் சோதனைக்காலம்; மனிதனுக்கும்தான். பொருளாதார முக்கியத்துவம்வாய்ந்த பறவைகளைப் பாதிப்பது மாத்திரமல்ல, அவனுக்கும் போதிய மீன் கிடைக்காமற்போகும். இயற்கை அன்னை யாரைத்தான் சோதிக்காமல் விடுகின்றாள்?


*



குஆனோ மலை, வெட்டப்படுகின்றது. பெரு, சிலி போன்ற நாடுகள் எவ்வளவு பலனுள்ள நாடுகள். எச்சத்தைக்கொண்டே லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கின்றார்களே. இப்படியொரு வளம் தெற்காசிய நாடு ஒன்றுக்குக் கிட்டாதா?



...ன்றதா?



எள்போட்டால் எள் விழுமா? வெள்ளைக் கம்பளம் விரித்தாற் போலல்லவா தெரிகின்றது. எங்காவது நிலம் தெரிகின்றதா பாருங்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்வியதிகாரி மாற்றப்பட்டார்

(12) மொத்த வியாபாரியான பெரும முதலாளி,சில்லறைக் கடைக்காரரிடம் சாமான் வாங்க நேர்வதில்லையா?

நட்சத்திர அந்தஸ்துள்ள ஹோட்டலின் உரிமையாளர், எங்காவது ஓர் ஊரில் சந்துக்குள் உள்ள சாப்பாட்டுக் கடையில் காசு கொடுத்துச் சாப்பிட நேர்வதில்லையா?

மோட்டார்க் கார்க் கம்பெனி உரிமையாளர், எப்போதாவது வாடகை ஓட்டோவில் பயணிக்க நேர்வதில்லையா?

பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களின் மாற்றங்களுக்குப் பொறுப்பான-மாற்றங்களைத் தீர்மானித்து நெறிப்படுத்திய - கல்வியதிகாரி, மாற்றத்தில் போக நேர்ந்தது.

- யாழிலிருந்து கண்டிக்கு.

இந்த மாற்றம் எதிர்பாராததாயினும் அவர் எவ்வித மனச்சஞ்சலமும் அடையவில்லை. - இது அவரது தனித்துவமான பண்பு!

நானும் எனது சொந்த நன்மை ஒன்று கருதி, பாடசாலை போவதற்கு விரும்பினேன்.

## தேவை ஒரு வருவாய்

வட்டாரக்கல்வி அதிகாரியின் உதவியாளராக இருந்து, மீண்டும் நான் பாடசாலை போக விரும்பியதற்கான முக்கிய காரணம் ஒன்று இருந்தது.

நான், தனியார் கல்வி நிறுவனங்கள் (TUITORY) மூலம் மேலதிக மாத வருமானம் பெறுதற்கான வாய்ப்பு வந்து கதவு தட்டியது.

மீண்டும் நான் பாடசாலை சென்றதும் இரு 'ரியூட்டரி'களில் வேலை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. மாதாந்த வருவாயில் கணிசமான ஓர் அதிகரிப்பும் ஏற்பட்டது. அந்த மேலதிக வருமானம் அப்போது எனக்கு அவசிய தேவையான ஒன்றாகவும் இருந்தது.

## கந்தையா நாலும்...!

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பல்வேறு பாடசாலை, பல்வேறு தரம், பல்வேறு சூழலிருந்து மாணவர்கள் வருவார்கள். பாடங்களில் சந்தேகங்கள் கேட்கும்போது, அம் மாணவர்களின் தனியான வல்லபம், ஆற்றல், தனித்துவம் வெளிப்படுவதைப் பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர் பலரும் கண்டுள்ளோம்.

நினைவிலுள்ளவற்றுள் உதாரணத்துக்கு ஒன்று:-

ரியூட்டரியில் சமூகக்கல்வி தவிர, சில வகுப்புகளுக்கு தமிழும் கற்பித்தது உண்டு.

அன்று, தமிழ் இலக்கணப் பகுதியில் 'குற்றியலுகரம்' ஆரம்பிக்க வேண்டியிருந்தது. கலகலப்பாக ஆரம்பிப்பதற்கு ஏற்ற துணுக்கு ஒன்று ஞாபகத்துக்கு வரவே, மாணவன் ஒருவனை என் சுட்டு விரல் சைகையில் எழுந்து நிற்கச் செய்து திடீரென, "குற்றியலுகரத்துக்கு ஓர் உதாரணச் சொல் சொல்லும்!" என்றேன். அவன் எதுவும் புரியாமல் விழித்தான்.

"வேறுயார் விரும்பினாலும் சொல்லலாம்!" என்றேன். எவரும் எழவுமில்லை; சொல்லவுமில்லை. நிற்கின்ற மாணவனிடம், "நீர் எப்படியும் சொல்லித்தான் ஆக வேண்டும்!" என்று வற்புறுத்தலாய் மீண்டும் சொன்னேன்.

"தெரியாது!... ஸேர்!" என்றான் பரிதாபமாக.

எல்லாரும் அவனைப் பார்த்தனர்.

"பார்த்தீர்களா...! தனக்குத் தெரியாமலே சரியான விடையைச்சொல்லி விட்டார்!" என்றேன். அவன் தனக்குத் தெரியாதென்று சொல்ல... அவன் சரியான விடை சொல்லிவிட்டதாக நான் சொல்ல...! எல்லாரும் 'திருதிரு' என்று குழப்பமாய்ப் பார்த்தனர்.

"அவர், 'தெரியாது!' என்றாரல்லவா? 'தெரியாது', என்பது ஒரு குற்றியலுகரச் சொல்தான்" என்றேன்.

"தெரியாது என்பதில் உள்ள 'து' வின் இறுதியில் வரும் 'உ' சத்தம் குறைந்து போகிறதே - தெரியாது என்று சொல்லிப் பாருங்கள்! - 'உ' ஓசை மிகக் குறுகிப்போகிறதே...! இப்படி, சொல்லின் இறுதியில் வரும் 'உ' சத்தம் குறுகிப் போவதைத்தான் குற்றியலுகரம் என்கிறார்கள்...!" என்றேன்.

அவர்களுக்குக் குற்றியலுகரத்தை அறிவதற்கான ஆவல் ஏற்பட்டதைப் புரிந்துகொண்டேன். ஆவல் ஏற்பட்டு விட்டால் பிறகென்ன? பாடம் நன்றாகவே போகும். அன்று பாடம் நன்கு புரியும்படி கற்பிக்கப்பட்டதாகவே நினைத்துக்கொண்டேன்.

மறுநாள் அதே வகுப்பில் -

குற்றியலுகர வகைகள் பற்றிக் கற்பிக்க எண்ணினேன். அதற்கு முன், மாணவன் ஒருவன் எழுந்து,

"உகரத்தின் ஓசை குறைவதற்கு 'குற்றியலுகரம்' என்று இலக்கணம் இருப்பது போல, சொற்களில் சில எழுத்துக்கள் வெவ்வேறு ஓசையில் வித்தியாசப்பட்டு ஒலிக்கின்றனவே அவற்றுக்கும் இலக்கணம் இருக்கிறதா ஸேர்?" என்றான்.

"என்ன கேட்கிறீர் என்பது விளங்கவில்லை!" என்றேன்.

உதாரணங்களை அடுக்கத் தொடங்கினான்!

"வெங்காயம், வெந்தயம் இரண்டிலும் 'வெ' உச்சரிப்பு வேறுபடுகிறதே...! இதே போல, வெட்டு, வெண்டி, வெறுமை போன்றவற்றுக்கும், வெந்நீர், வெற்றிலை, வெசாக் போன்ற சொற்களுக்கும் இடையே 'வெ'யின் ஓசை வேறுபடுகிறதே...!"

துல்லியமாக, வித்தியாசம் தெரிய சொற்களை உச்சரித்தான்.

"இதேபோல, வேம்பு, வேகம், வேறு, வேங்கை போன்றவற்றுக்கும் வேந்தன், வேதம், வேலை, வேய்தல் போன்றவற்றுக்கும் இடையே 'வே' ஓசை வேறுபடுகிறதே!

இதேபோல, மேகம், மேளம், மேடு போன்வற்றுக்கும் மேசை, மேன்மை, மேய்தல் போன்றவற்றுக்கும் இடையே 'மே'யின் ஓசை வித்தியாசமாயிருக்கிறதே!

இதேபோல - வீடு, வீணை போன்றவற்றுக்கும் வீதம், வீசு போன்றவற்றுக்கும் 'வீ' ஓசையில் வேறுபாடு இருக்கிறதே...!

'தீண்டல்'க்கும், 'தீங்கு'க்கும் இடையே 'தீ'யின் ஓசை, 'தின்றான்'க்கும், 'திங்கள்'க்கும் இடையே உள்ள 'தி'யின் ஒலி வேறுபடுகின்றனவே!

தவிரவும் - காகம்,வளாகம் போன்றவற்றை காஹம், வளாஹம் என்றும், வெற்றி, கற்றார், புற்று போன்றவற்றை வெற்ரி, கற்ரார், புற்ரு என்று உச்சரிக்கிறோமே...! இவை போல இன்னும், முட்டையே, தங்கையே என்பவற்றின் 'டை', 'தை' என்பவற்றின் 'ஐ' முழுமையாக உச்சரிக்கப்படாமல், முட்டயே, தங்கயே என்பதுபோல உச்சரிக்கப்படுகின்றனவே!

"இவற்றுக்கெல்லாம் இலக்கணம் இருக்கிறதா... ஸேர்!"

'இவற்றுக்கு இலக்கணம் இல்லை' என்று சொன்னால் " 'உ'கரத்துக்கு வந்த இலக்கணம் இவற்றுக்கு ஏன் இல்லாமல் போச்சு?" என்று கேட்பானோ...! இவனுக்கு முதல்நாள் குற்றியலுகரம் அதிகம் புரியும்படி படிப்பித்ததால் ஏற்பட்ட கோளாறோ? என்று பலவாறு யோசித்தேன்.

'தை'யின் உச்சரிப்புப் பேதம் புரியவைப்பதற்கு -

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு'

'கந்தையா நாலும் கசக்கிக் கட்டு' - என்று, அவன் கூறிய உதாரணம் இன்றும் என் நினைவில் நிற்கிறது.

தமிழை, 'பழகு தமிழ்' என்றும் சொல்வது உண்டு. உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகள் தமிழ் நாட்டிலும், வேறு வெளிநாட்டிலும் நடைபெற்றபோது, வேற்று மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட, பிற நாட்டுத் தமிழ்அறிஞர்கள் தங்கள் கட்டுரைகளை வாசிக்கும்போது, சொற்களின் ஒலி வேற்றுமைகளை நிறையவே, வானொலியில் கவனித்துக் கேட்டிருந்தேன். அவர்கள் தமிழை அறிந்தவர்கள்; ஆனால் தமிழோடு பழகாதவர்கள். அவர்கள் உச்சரித்த தமிழ்ச் சொற்களைப் 'பிழை' என்று சொல்ல முடியாது. ஆனால் அவற்றை விளங்கிக் கொள்வதில் சிரமமும் தாமதமும் இருந்தன. தமிழோடு பழகாததால் உச்சரிப்பு மரபை அவர்களால் கைக்கொள்ள முடியவில்லை என்பது வெளிப்படையான உண்மை.

நான் அந்த மாணவனுக்கு தமிழோடு பழகியவர்கள், சொற்களை ஒலிமரபு வழுவாது உச்சரிப்பார்கள் என்பதை, அவனால் புரிந்துகொள்ளும் திறன் எல்லைக்குள், புலப்படுத்திவிட்டதாகவே நினைக்கிறேன்.

## அது விளங்காமல்... நீங்கள்

ஒருநாள், ரியூட்டரிக்கு நான் புறப்பட ஆயத்தமாகும்போது, என் நான்காவது மகன் கண்ணில் தென்பட்டான். அன்று நான் கற்பிக்க வேண்டியிருந்த சமவுயரக்கோடு சம்பந்தமான பகுதியில் அவனுக்கு மிகுந்த தேர்ச்சி உண்டு என்பதை நான் நன்கு அறிவேன். எனவே, மகனிடம் சும்மா ஒரு பேச்சுக்கு ஆரம்பித்தேன்.

"எனக்காக இன்று நீ போகிறாயா?... நீ திறமாகச் செய்வாய்!"

"நான் போறதில எனக்குப் பிரச்சினை இல்லைத்தான்...! எண்டாலும் நீங்கள்தான் போங்கோ...!"

"ஒரு நாள் போனால்... அடிக்கடி நான் 'கட்'பண்ணி உன்னை அனுப்பப் பார்ப்பேன் எண்ட பயமோ...?"

"அப்பிடியில்லை... நீங்கள் போறது தான் நல்லது...! உங்கடை நன்மைக்குத்தான் சொல்லுறன்...!"

"அப்பிடி எனக்கென்ன நன்மை...?"

"இண்டைக்கு நான் போனால், நாளையிலையிருந்து பொடியள் உங்களை வேண்டாமெண்டு சொல்லிப் போடுங்கள்...! என்னை எப்ப நீங்கள் அனுப்பினாலும், மற்றநாள் உங்களுக்கு அங்கை வேலைபோயிடும்...! அதுதான் நீங்கள் போங்கோ எண்டு சொல்லுறன்! அது விளங்காமல்... நீங்கள்...!"

வாரிவிட்டானே என் காலை...எனது மகன்...! "ஓ ஹோ ஹ் ஹோ... ம்ம்... அப்பிடியும் ஒரு சங்கதி இருக்குத் தான்! நானே போறேன்...!"

என் தோல்வியை, நான் தயங்காமல் ஒப்புக்கொள்வதன் மூலம், 'எங்கள் அப்பா மிக நாகரிகமான ஒரு தந்தை' என்று அவனை நினைக்க வைக்கிறேன் என்பதுதான் என் நினைப்பு! அப்படி நினைக்க வைப்பதிலாவது வென்றேனா... தோற்றேனா... என்பது இன்று வரை எனக்குத் தெரியாது!

## 'நானென்றாலும்...!'

மற்றுமொரு நாள், நான் பாடசாலை புறப்பட ஆயத்தமாகும்போது, அவனும் - நானாகவது மகன் - பாடசாலைக்கு அவசரப்பட்டான். அவன், '.'.போர் 'ஏ'யும், பொறியியலுமான கனவில் மிதப்பது எனக்குத் தெரியும்.

அவனோடு, ஓர் 'உராய்வுக்கு' எனக்கு மனம் தூண்டியது.

"நீயும் என்னைப்போல் ஓர் ஆசிரியராக வாறதுதான் எனக்கு விருப்பம்!" என்றேன் நான்.

"நானெண்டாலும் ஒரு 'நல்ல' ஆசிரியராக வருவமெண்டு பாத்தால், அப்பா விடமாட்டார் போல இருக்கு!" என்று என் காதில் விழும்படி தாயிடம் முறையிட்டான் அவன்.

இப்படியாக, என் காலை வாருவதற்குத்தான், என் ஆசிரியத் தொழில், அவனுக்கு மிகுந்த வாய்ப்பைக் கொடுத்தது.

## பறப்பு முயற்சியில்...!

1977இல் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்துக்குப் பின் இளைஞர் யுவதிகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் சிங்கப்பூருக்குமாக பல்வேறு தொழில்களுக்குப், படித்தவர்களும் படிப்பறிவு குறைந்தவர்களும் [illegible] செல்ல ஆரம்பித்தார்கள். தனியார் நிறுவனங்களில் வேலைசெய்த படித்த இளைஞர்களும் தங்கள் கல்விசார் தொழில்கள் கிடைத்தபோது பறந்து போனார்கள். அரச ஊழியர்கள் சிலரும் சம்பளமற்ற லீவு பெற்றுச் சென்றனர்.

அவர்கள் நாடு திரும்பும்போது மிகுந்த பகட்டும் பளபளப்புமாகவே தெரிந்தார்கள். அந்தப் படாடோபம் பலரையும் கவர்ந்தது.

வாய்ப்புக் கிடைத்தால் போய்வருவது புத்திசாலித்தனமானது என்ற கருத்து என்னிடத்தும் வலுப்பெறத் தொடங்கியது.

ஐந்து வருடச் சம்பளமற்ற லீவு பெற்றாலும், திரும்பி வந்து வேலை செய்து மொத்தத்தில் 30வருட ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்ய முடியும் என்பதை உறுதிசெய்து கொண்டேன். நான் தொடர்புகொண்ட முகவர் நிலையம் களஞ்சியப்பொருள் சமன் செய்து சரிபார்த்துக் கொள்வதான (TALLY CLERK) எழுதுநர் வேலைக்கு அனுப்பலாம் என வாக்குப்பண்ணியதன் பேரில், திணைக்களத்தினூடாக அமைச்சுக்கு விண்ணப்பித்து 3 வருட சம்பளமற்ற லீவு பெற்றேன்.


வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களுக்கு அப்போது நாட்டின் பல பாகங்களிலும் தரகர்களும் இருந்தனர். வேலை பெற்றவர்களைவிட, இந்தத் தரகர்களால் அவஸ்தைகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்தவர்களே அனேகர். போலி முகவர், போலித் தரகர்களிடம் அகப்பட்டு ஏமாந்தவர்களும் அனேகர்.

எனது பயணமும் கருக்கட்டல் நிகழ்ந்து, வைத்திய பரிசோதனையும் முடிந்து, பின்னர் அது கருச்சிதைவடைந்த சந்தர்ப்பங்கள் பல உள. முகவர்களும் லஞ்ச லாவண்யங்களுக்கு உடபட்டிருந்தார்கள் என்பது மிகக் காலங்கடந்தே தெரியவந்தது. அதாவது, முகவர்களை ரகசியமாகக் 'கவனிக்கிற மாதிரிக் கவனித்து' நல்ல வேலகளைச் சிலர் தமக்காக்கிச் சென்றிருந்தனர்.

## கேட்டாரே கடன்...!

ஒரு முறை, 'ஏஜென்ஸி' தரகர் ஒருவர் எங்கள் வைத்திய பரிசோதனையை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் ஏற்பாடு செய்திருந்ததால் அங்கு சென்றிருந்தோம்.

மருத்துவமனையில், நடுத்தர வயதுடைய ஒருவர், சற்று மிடுக்கான தோற்றமுடைய வாலிபர் ஒருவரையே சுற்றிக் கொண்டிருந்தார். வாலிபர் உட்கார்ந்தால் இவரும் அருகே உட்கார்வார். அவர் எழுந்து உலாவினால் இவரும் பின் தொடர்வார். கடைசியாக சிரிப்பொன்றை உதிர்த்துக்கொண்டே வாலிபரிடம் பேச்சுக் கொடுத்தார்.



"தம்பி! இங்கை பரிசோதனை எல்லாம் வலு இறுக்கம் எண்டு கேள்வி...! பாவம் பிழைச்சுப் போகட்டும் எண்டு கருணை காட்டிறதெல்லாம் நடவாதாம்!" என்றது நடுத்தரம்.

"அதுக்கென்ன... விருப்பம் போல செய்யட்டுமே!" இது அந்த மிடுக்குப் பதில்.

"அதுக்கில்லைத் தம்பி... " என்று தொடங்கியவர் காற்சட்டையைச் சுருக்கி முழங்காலுக்குக் கீழ் இருந்த சிறு புண்ணைக் காட்டினார்.

"இதெல்லாம் பெரிய விஷயமில்லை! பொருட்படுத்தமாட்டார்கள்...!" என்று சொல்லும்போதே, அந்த வாலிபர் தமது பெயர் கூப்பிடக்கேட்டு உள்ளே போய்விட்டார்.

நடுத்தரம், இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த என்னைத் தொற்றிக் கொண்டது.

"இல்லைப் பாருங்கோ இந்தச் சின்னப்புண், எத்தனையோ முறை 'ட்ரெஸ்ஸிங்' செய்வித்தும் மாதக்கணக்காய் மாறாமலிருக்கு... 'யூரினிலை சுகர்' (சலரோகம்) இருக்குமோ எண்டுதான் பயமாயிருக்கு...!" என்றார்.

"சுகர் இருந்தால் அறிந்தால்தானே நல்லது! பயப்பிடாதையுங்கோ!" நான் ஆறுதல் சொன்னேன்.

"நீங்கள் ஒரு சின்ன உதவி செய்தால் சலப் பரிசோதனையும் சரியாயிடும்" என்றார்.

எனக்குப் பெரும் வியப்பாய் இருந்தது. எனக்கு இங்கு எந்த வைத்தியரிடமும் எவ்வித 'செல்வாக்கும்' கிடையாதே! நான் யோசித்தேன்! அவரே தொடர்ந்தார்.

"சிறுநீர் எடுப்பதற்காக அவர்கள் தரும் சீசாவுடன் நீங்கள் யூறினலுக்குள் போகும்போது, இந்தச் சின்னப் போத்தலுக்குள் உங்கள் சிறுநீர் கொஞ்சம் எடுத்து வைத்துவிட்டு வந்தால்... பிறகு, நான் போகும்போது அந்தச் சிறுநீரையே எனக்குத் தரும் சீசாவில் ஊற்றிக் கொண்டுவந்து கொடுக்கலாம்" என்று சொல்லி, முன் யோசனையுடன் தயாராகக் கொண்டு வந்திருந்த சிறிய போத்தலை என்னிடம் நீட்டினார்.

கா.அருளானந்தம்
(கீழ்க்கருணையூர்)

நான் சிறிதும் தயங்காமல் அதை வாங்கிக் கொண்டேன்.

அவருக்கு உதவுவதற்காக என் பெயர் கூப்பிடப்படுவதை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனால், அடுத்துக் கூப்பிடப்பட்ட பெயர் அவரது பெயராக இருக்கவே, பரிதாபமாக ஒரு முறை என்னைப் பார்த்துவிட்டு உள்ளே சென்றார்.

வெளிநாட்டுப் பயணத்துக்காக பணமாக, நகைநட்டாக, ஏதாவது கடன் கேட்பார்கள். ஆனால், இந்த மனிதரோ 'சிறுநீர்' கொஞ்சம் கடனாகக் கேட்டாரே...! இது எனக்கு வியப்பான சோகமாக இருந்தது.

விவசாயிகளுக்கான 'வாட்டர்பம்ப்' கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த வங்கி முகாமையாளர், விண்ணப்பதாரி ஒருவரை அழைத்து, "ஒரு குளி நிலங்கூட இல்லாமல் வாட்டர் பம்ப் கடனுக்கு விண்ணப்பித்திருக்கிறாயே" என்று கேட்டாராம். அதற்கு அவர், "ஐயா என்னிடம் நிலம் இல்லாவிட்டாலும் பசுமாடு இருக்கிறது. நான் பால் வியாபாரம் செய்கிறேன்" என்றாராம். இந்தக் கடன் கோரிக்கை வேறு வகை.

## ஓமான் போகாமலே சீமான்

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக நான் திவிரமாக ஈடுபட்டிருந்த நேரம் அது, என்னுடன் பயண முயற்சிகளில் தீவிரமாக இருந்த இளைஞர் சிலருக்கு, பயண முயற்சியை இடையில் கைவிடவேண்டியநிலை ஏற்பட்டது.

இலங்கையிலேயே அரசாங்க வேலை கிடைத்துவிட்டதால், நிரந்தர மாதச் சம்பளம், சீதனச் சந்தையில் விலையேற்றம், ஓய்வூதிய உரிமை போன்ற கவர்ச்சிகளால் பயண முயற்சியைக் கைவிட்டவர் உள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதி போன்ற உயர்கல்வி வாய்ப்புக் கிடைத்ததால் பயண முயற்சியைக் கவைிட்டவர் உள்ளனர்.

மோட்டார் சைக்கிள் விபத்து, நோய் ஆகிய காரணங்களால் பயண எண்ணத்தைக் கைவிடும் நிலைக்கு ஆளானவர்கள் உள்ளனர்.

வயது முதிர்ந்த பெற்றோர், அல்லது இளம் மனைவி என்போரின் மறுப்பு, வற்புறுத்தலால் கைவிட்டவர்களும் உள்ளனர்.

எனக்கு அறிமுகமான வாலிபர் ஒருவர், பயண முயற்சியைக் கைவிட வேண்டியநிலை, முகவர் நிலையத் தரகராலேயே ஏற்பட்டது.

அந்த வாலிபர் I.C.M.A. (இப்போது C.I.M.A. ஆகியுள்ளது) பரீட்சையிலும் 3 பகுதிகள் சித்தியடைந்திருந்தார். தனியார்நிறுவனம் ஒன்றில் சுமாராக நல்ல சம்பளமுள்ள வேலையிலும் இருந்தார். இவை தவிர, நல்ல கவர்ச்சியான நிறம், தோற்றமும் அவருக்கு இருந்தன.

அவருக்கு எதிர்பாராத விதமாக, குறுகியகாலத்துள் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, முகூர்த்தநாளும் குறிக்கப்பட்டுவிட்டது. எனவே, பயண முயற்சி கைவிடப்பட்டது.

இந்தத் திருமண நிச்சயதார்த்தத் திருப்பணியை மறைமுகமாகச் செய்து வைத்தவர், அந்த முகவர் நிலையத் தரகரே என்பது பின்னர்தான் தெரியவந்தது.

முகவர் நிலைய விண்ணப்பப் படிவத் தகவல்களிலிருந்து, வாலிபர் பற்றிய விவரங்களையும் புகைப்படம் ஒன்றையும், கலியாணத்தரகர் ஒருவர் பெற்று, மணமகள் பகுதியினருக்கு

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**23 - 10 - 1999 இலிருந்து 29 -10 - 1999 வரை**

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| சந். | வி சனி. | | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| கே | | | வெ |
| செவ். | | புத. சூ | |

*மாற்றம்:-* உத்திரட்டாதி - மீனம் இராசியில் சந்திரன் நிற்கும்.

வெள்ளம் - திடீர் சுழல்காற்று அமுக்கத்தால் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அழிவுகள் ஏற்படும். அரசியலும் - யுத்தமும் கலந்துவிட்ட நிலை. அரசியலுக்காக யுத்தம் நடக்கின்றதா என அமைதி விரும்பும் மக்கள் கேட்பார்கள். ஐ.நா.சபை மெல்ல மெல்ல எமது நாட்டில் கரிசனை கொள்ளும் நிலை ஏற்பட்டபடி இருக்கும். இந்தியா உன்னிப்பாகக் கவனித்தபடி இருக்கும். எஜமான் - வேலைக்காரனைத் தூண்டிவிட்டு எஜமானிக்குத் தொல்லை கொடுக்கும் நிலைபோன்று அரசியல் நிலை இருக்கும். வடக்கிலிருந்து இந்தியாவுக்கு எதிர்ப்புக்கள் வர இடமுண்டு. பதற்றநிலை சகஜமாகும். எதிரிகளின் ஊடுருவல் சகஜமாகும். மேற்கு உலகின் சாணக்கிய அரசியல் - மத்திய கிழக்கிலும், கிழக்குநாடுகளிலும் விட்டு விட்டு நன்மை, தீமைகளைச் செயற்படுத்தும். இயற்கை இடைக்கிடைதன் சீற்றத்தைக் காட்டியபடி இருக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

இவ்வுலகில் நடந்ததை நினைத்து வருத்தப்படுவதைவிட இருப்பதைக் கொண்டு அதன் பலனைக் கண்டு திருப்தி அடைவதே மேலானது. உங்கள் தொழில் ஸ்தானத்தில் தரமறிந்து செயற்பட முயலுங்கள். போராடிப் போராடிப் பொருள் சேர்ப்பீர்கள். விரோதங்கள் வரத்தான் செய்யும். மரியாதையீனப்பட நேரிடும். அந்தஸ்து, அதிகாரத்தைப்பற்றி குடும்பத்தவர் யோசிப்பார்கள். உங்கள் பிடிவாதம் சஞ்சலம் தரும். விஷக்காய்ச்சல், அஜீரணம், காயங்கள், பலவீனம் என்பன வர இட முண்டு. வாகனத்தால் செலவுகள் ஏற்படும். எதிர்ப்பாலாரால் எதிர்ப்புக்கள் ஏற்படலாம். கடல்தொழில், வியாபாரம், கலைத் தொடர்பானவர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். அடிக்கடி கோவிலுக்கும், நண்பர்கள் தெரிந்தவர்களின் இடங்களுக்கும் சென்று வாருங்கள். மன ஆறுதல் ஏற்படும். தெய்வவழிபாடு செய்வதனால சனீஸ்வரனின் தாக்கம் கெட்ட பலங்களைக் குறைத்துத்தர இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

மனிதர்கள் செய்யும் பாவகாரியங்களால் சிலசமயம் இயற்கையே பொய்த்து அவர்கள் நற்பலன் அடைய விடாமல் தடுக்கின்றது. இதையெல்லாம் எல்லோரும் அறியமாட்டார்கள். அறிந்தவர்களும் எதுவும் செய்ய முடியாது. தொழில் ஸ்தானத்தில் ஏற்படும் போட்டிகளால் மனஅமைதி இராது. மறைமுகப் பகை வரும். தடுமாற்றம், தடக்கி விழுந்து காயப்படலாம். அமைதி, சஞ்சலம் மாறி மாறி ஏற்படும். நெஞ்சுநோ, சலவருத்தம், உடல்நோ என்பன ஏற்படலாம். கட்டுமீறிய செலவுகள் அதிகரிக்கும். ஆசையால் மோசம் போகாதீர்கள். வாய்வு வருத்தம் மோசம்செய்யும். சட்டத்துறை, மருந்துத்துறை, மின்சாரத்துறை, நிர்வாகத்துறை தொடர்பானவர்களுக்கு அதிக மாற்றங்கள் ஏற்படும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.*

### மிதுனம்

மக்கள் காசுக்காக பல விண்ணப்பங்களைப் போட்டபடிதான் இருக்கிறார்கள். ஆனால் காசுதான் அங்கொன்றும் - இங்கொன்றுமாக கொடுத்துச் சமாளிக்கிறார்கள். இதனால் பலர் சலிப்படைவதை நீங்கள் பார்த்து களைத்திருப்பீர்கள். அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். நீங்கள் தொழில் ஸ்தானத்தில காசுக்காகச் சலிப்படையாமல் விடாமுயற்சி செய்து பணம் தேடச் சில சந்தர்ப்பங்கள் ஏற்படும். புதிய நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் ஏற்படும் கருத்து வேற்றுமைகளை புத்திசாதுரியத்தால் சமாளிப்பீர்கள். எதிர்ப்பாலாரிடமிருந்து ஆதரவுகள் கிடைக்கும். மலச்சிக்கல், வாய்வு, வாதநோய்கள், தலையிடி என்பன ஏற்படலாம். வியாபாரத்துறை, ரீ.வி., செய்தி, பத்திரிகை தொடர்பானவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும். அரச அதிகாரிகள் உதவி செய்வார்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.*

### கடகம்

சில மனிதர்களின் குறைகளைக் கண்டும் வார்த்தைகளைச் சிலர் அளந்து பேசுவார்கள். ஆனால் நீங்களோ பொரிந்து தள்ளிவிடுவீர்கள். இதனால் தொழில் ஸ்தானத்தில் சிலர் பகைமை வளர வட்டமிட்டபடி - உங்களைக் குறைகூறியபடி - இருப்பார்கள். உங்கள் உடல் வருத்தத்தால் அடிக்கடி கோபம் வந்தபடி இருக்கும். நல்லவர்களைப் பகைத்துக்கொள்ளாதீர்கள். களைப்பு, சலிப்பு, நெஞ்சுப் படபடப்பு, வாய்வுத்தொல்லை என்பன வருத்தும். அன்புக்குரிய ஜீவனொன்றின் பிரிவு அல்லது இழப்பு பயத்தையோ - மனக்கவலையையோ அடிக்கடிக் கொடுக்கும். பிணிகாரகனான இராகு உதயத்தில் இருப்பதனால் அடிக்கடி பயம் ஏற்படலாம். கடல்தொழில், பத்திரிகைத்துறை, மருந்துத்துறை, குருத்துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். தூரதேசச் செய்தி வரலாம். ஆனால் பிரயாணங்களைத் தவிர்த்தால் நன்று.

*அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.*

### சிங்கம்

பாராட்டுக்களுக்கு மயங்காத மனிதர்கள் இருக்கமுடியாது. ஆனால் உங்கள் சேவைகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. எல்லோரையும் தொழில் ஸ்தானத்தில் உற்சாகப்படுத்தியபடி இருப்பீர்கள். உங்கள் சேவை அல்லது சொல்லுக்காக பலர் காத்திருப்பார்கள். பலரின் பொறாமைக் கண்களும் வட்டமிட்டபடி இருப்பதை மறவாதீர்கள். அரச அதிகாரிகள், எதிர்ப்பாலார்கள், நண்பர்கள் போன்றோர்கள் உதவிகள் செய்வார்கள். ஓய்வு முக்கியம். நெஞ்சுநோ, வாய்வுத் தொல்லை, மூல்ச்சூடு, கைகால் பிடிப்பு, விறைப்பு, உஷ்ணபீடைகள் வருத்தலாம். கடல் தொழில், சட்டத்துறை, குருத்துறை, நிர்வாகத்துறையினருக்கு நற்பலன்கள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அயலவர்களுடன் நிதானமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.*

### கன்னி

உறுதிகளுக்கு ஒட்டும் முத்திரைக் காசுகளுடன் ஓடும் ஒரு சில சட்டத்தரணிகளின் செயற்பாடுகளால் மக்களிடம் பதிபடாத உறுதிகள் இருக்கின்றன. இதனால் காணி பூமிப் பிரச்சினைகள் நம்நாட்டில் விஷ்வரூபமாகப் போகின்றன என்பது நீங்கள் அறியாததல்ல. இதற்குயார் நடவடிக்கை எடுக்கப் போகின்றார்கள் என மக்கள் கேட்பார்கள். நீங்கள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் முன்னர் செய்த குற்றங்களுக்கு பதில் சொல்லவேண்டி நேரிடலாம். சிலருக்கு பொருள் வரவுகள் பழைய பாக்கிகள் வரச் சந்தர்ப்பங்கள் ஏற்பட இடம்உண்டு. கண்வலி, நாரிநோ, வாய்வு வருத்தங்கள், பொருள் ஏமாற்றத்தால் மனவேதனை, வயிற்று வலி, காயங்கள் என்பன ஏற்படலாம். குருத்தொழில், பத்திரிகைத்துறை, செய்தித்துறை, கடல்துறை, பிரயாணத்துறை தொடர்பானவர்கள் நன்மைகள், இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், வெள்ளி.*

### துலாம்

சொந்தக்காரன் வெளிநாட்டில், நான் அவன் சொத்தில் பல தில்லுமுல்லுகளைச் செய்யலாம் என எண்ணுவது எவ்வளவு நீதியற்ற செயல் என்பதை அறிவீர்கள். ஆனால் நீங்கள் தொழில் ஸ்தானத்தில் நடக்கும் தில்லுமுல்லுகளை நாலுபேருக்குச் சொல்லி வெளிக்கொண்டுவராது [illegible]கள். அறிவுக்குரிய சூரியனும், பு[illegible]குரிய புதனும் சேர்ந்திருப்[illegible] புதிய திட்டங்களால் பலரின் நல்அபிப்பிராயங்களைப் பெறுவீர்கள். புகழும், பணமும் எப்பொழுதும் வராது. எனவே நன்மைசெய்து, உண்மைபேசி மக்களை வாழவையுங்கள். அவர்கள் நீங்கள் வாழ வழிவகுப்பார்கள். வயிற்றுப்பொருமல், தலைவலி, வாய்வுவருத்தம், சலஉபாதைகள் என்பவை வருத்தலாம். வியாபாரம், விவசாயம், கடல் துறையினர், ரீ.வித்துறையினர், கலைத்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

## சோதிட சஞ்சீவி

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### விருச்சிகம்

சுயநலம் கொண்டு சிலர் தங்களின் குறைகளை மறைப்பதற்காக மற்றவர்களின் மீது பல பழிகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இதை உணருவீர்கள். அதற்காக தொழில் ஸ்தானத்தில் உங்கள் கடமைகளைச் செய்யாது விடமாட்டீர்கள். பக்கத்திலிருந்து பகைமை வரும். பொறுமையாய் இருந்து வாருங்கள். லாபங்கள் தேடிவரும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். நாரிப்பிடிப்பு, வாய்வுத் தொல்லை, சலவருத்தங்கள், நெஞ்சுநோ, சமியாக்குணம் என்பன தொல்லை தரலாம். வைத்தியத்தால் சுகம் தரும். அரசியல்துறை, கோவில் துறை, தொழில்நுட்பம், இரும்புத்துறை, ரீ.வித்துறை, வியாபாரத்துறை, செய்தித்துறை போன்றவற்றில் தொடர்பானவர்கள் நற்பலன் அடைவார்கள். தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### தனுசு

எதையும் வெளிப்படையாக - படபடவென - வெளிப்படுத்தியபடி இருப்பதனால் உண்மைகள் வெளிவந்த வண்ணம் இருக்கும். ஆனால் உங்களைப் பற்றி பலவிதமாகப் பேசியபடி சிலர் இருந்து கொண்டிருக்கும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் பலவிதமான மாற்றங்கள் ஏற்படும். வரவுக்குமேல் செலவுகள்,இடாம்பீகப் பொருள்களால் செலவுகள் கட்டுமீறும். நண்பர்களும், அயலவர்களும் உதவிகள் செய்வார்கள். பட்டெனவரும் கோபத்தால் பலதிட்டங்களும் பணமும் காலியாகும். பிடிவாதம் பிடிக்காதீர்கள். கைகால் விறைப்பு, வாத, வாய்வுக் குழப்படிகள், வயிற்றுக்குழப்பங்கள் என்பன ஏற்படும். செய்தித்துறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை, விவசாயத்துறை, வங்கி, நிதித்துறையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

சிலர் தங்கள் கைகால் உளைவுகளைக் கராட்டி மூலம் காட்டுகிறார்கள்; சிலர் பொல்லுத்தடிகளுடன் கோவில்வாசலிலேயே பக்தர்களையும், வயது போனவர்களையும் தாக்கும் செயல்களால் வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் நீங்கள் எதைக் கண்டாலும் அமைதியாக இருக்கின்றீர்கள் போல் இருக்கின்றது. தொழில் ஸ்தானத்திலும், வீட்டிலும் கொஞ்சம் சலசலப்புக்கள் ஏற்படும். கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு மனக்குழப்பங்களை அடிக்கடி கொடுக்கும். புதிய பொறுப்புக்களால் நற்பலன்கள் ஏற்பட்டபடி இருக்கும். வீடு, வாகனங்களால் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். யாத்திரைகள், இடமாற்றங்கள் சகஜமாகும். கூலித்துறை, கமிஷன் வேலை, பிரயாணத்துறை, வியாபாரத்துறை, இரும்புத்துறை, குருத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு பலவித மாற்றங்கள் ஏற்பட்டு இலாபம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### கும்பம்

பக்தியைப் பகல் வேசம் போட்டு மக்கள் நம்பிக்கையை வீணடிக்க வேண்டாம் என யார் சொல்வது எனக் கேட்காதீர்கள். தொழில் ஸ்தானத்தில் [illegible] பணம், லாபங்கள் கிடைத்தபடி இருக்கும். உங்கள் செயற்பாடுகள், சந்தர்ப்பங்களைப் பொறுத்து மாறிக்கொண்டிருக்கும். காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளுங்கள். வாய்வுத்தொல்லை, கால்கை வலிகள், நெஞ்சு அழுத்தம், வரட்சித்தன்மை என்பன ஏற்படும். விஷங்களால் மயக்கம், கிருமித்தாக்கம் என்பன ஏற்பட இடமுண்டு. அரசியல்துறை, விவசாயத்துறை, சட்டத்துறை, சமயத்துறை சம்பந்தப்பட்டவர்கள் நன்மை அடைவார்கள். தூரதேசச் செய்திகளால் மகிழ்ச்சிகள், மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### மீனம்

அவரவர் நம்பிக்கை, உறுதியான செயற்பாடுகளால்தான் உயர்வுகள், நன்மைகள் ஏற்படுகின்றன. ஆனால் நீங்களோ சமாதானத்திற்காக சண்டை செய்கிறேன் என்பீர்கள். சமாதானத்திற்கு - சண்டை தேவைதானா என்ற சாணக்கியத்தைச் சிந்திக்க வேண்டும் என நான் சொல்லமுடியமா? எல்லாம் அவரவர் மனோபாவத்தை, சிந்தனையைப் பொறுத்ததாகும். தொழில் ஸ்தானத்தில் மாறுபட்ட திட்டங்கள், காசு தேட வழிவகைகளை ஆராய்வீர்கள். சளி, விறைப்பு, வாய்வு, சலவருத்தம், இருமல், காய்ச்சல் என ஆஸ்பத்திரிக்குப்போய் மருந்து எடுப்பீர்கள். கடல் தொழில், குருத்துறை, வாகனத்துறை, செய்தித்துறைகளில் தொடர்பானவர்கள் நல்ல மாற்றங்கள் அடைவார்கள். பிரயாணங்களால் நன்மைகள், பணவரவுகள் கொடுக்கும் நிலை ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

---

## தேன்கூடு

# அறத் திறம் வேண்டா அருங்குணத்தார்

காந்தியடிகள் உலகம் கண்ட மகாபுருடர். அவர் சத்தியம், அகிம்சை என்னும் இரண்டையும் தம் இரு கண்களாகக் கொண்டவர். மகாகவி பாரதியார் அவரை 'வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம் பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தை வாழ்விக்க வந்தீர்' என்று வாழுத்துவர்.

காந்தியடிகள் ஒருமுறை ஜப்பான் நாடு சென்று மீண்ட காலை, மூன்று சிறு பொம்மைகளைக் கொண்டு வந்தனராம். இம்மூன்றினுள் ஒன்று கண்ணை மூடியபடியும், மற்றது செவியைப் பொத்தியபடியும், ஏனையது வாயை மூடியபடியும் அமைந்திருந்தனவாம். அப்பொம்மைகள் துறவரத்தாருக்கன்றி இல்லறத்தார்களுக்கும் பொறியடக்கம் அவசியம் என்பதனை நினைவூட்டுவனவாக இருந்தன.

நம்மிடம் ஐம்பொறிகள் உண்டு. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவாகும். புலன்களும் ஐந்துண்டு. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன அவை. 'ஐந்தவித்தா' என்று கூறக் கேட்கின்றோம். அதாவது புலன்களில் செல்கின்ற ஐந்து அவாக்களையும் அடக்கியாளும் திறம் அது.

எவரும் பொறிகளாகிய ஐந்து யானைகளையும், தத்தம் புலன்கள்மேல் செல்லாமல், திண்மை என்னும் அங்குசத்தால் அடக்கிக் காக்க வேண்டும் என்பது மேலோர் ஆணை. இது வாழ்வியலுக்கு மிக மிக இன்றியமையாததாம்.

பொறிவழிபட்டார், 'இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணமாம், அந்தரத்தே - மேலுலகுக்கு - சென்று பின் அருநாகில் வீழ்வர்' என்று மணிவாசக பெருமான் குறிப்பிடுவர். ஐம்புலக்கதவை அடைக்கும் உபாயம் கூட இறையருளால் எய்தற்பாலதாம். பண்டையோர் புலனடக்கத்தைப் பிரமசாரிய நிலை முதற்கொண்டு, ஏனைய கிருகப்பிரத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் முதலிய நிலைகளிலும் அவற்றை நன்கு பேணினர். அதனால் ஆரா இன்பம் துய்த்தனர்.

இனி நாலடியாருக்கு வருவோம். ஒருவன் தகது இன்னது, தகாதது இன்னது என நல்லொழுக்க வகையை உணர்தல் வேண்டும். அயலாரது இரகசியங்களைக் கேட்குமிடத்து அவன் செவிடனாய் இருத்தல் வேண்டும். அயலான் மனைவியைக் காணும் வழி குருடனாய் இருத்தல் வேண்டும். ஒருவரைக் காணாவிடத்து தீயசொற்களைச்சொல்லுதலில் ஊமையாய் இருத்தல் வேண்டும். அஃதாவது செவிடனாய்ச் செவி அடக்கியும், குருடனாய்க் கட்புலனை அடக்கியும், ஊமையாய் வாயை அடக்கியும் வாழுதல்வேண்டும். அப்படி வாழும் ஒருவருக்கு வேறு அறங்கள் வேண்டா. அவையே போதும். மூன்று பொறிகளை விதந்து கூறினரேனும் நாம் ஐந்து பொறிகளையும் கொள்ளுதல் வேண்டும்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

ஆசைகளை முதற்கண் மட்டுப்படுத்தி அவற்றைப் படிப்படியாக அகற்றிவிட வேண்டும். மேலோர் 'ஆசை அறுமின் ஆசை அறுமின்' என்று இறைவன் மாட்டுக்கூட ஆசையை அகற்ற வேண்டுமென்று மொழிவர்.

தாயுமானார் அடிகள் ஆசைக்கு அளவில்லை என்றும், குபேரனை ஒத்த பெருஞ் செல்வர் கூட மேலும் செல்வத்தை ஈட்டவேண்டும் என ஆசைப்படுவர் என்றும், அதனாலே இரசவாத வித்தை பெற்றிப் பணத்தைப் பெருக்க எண்ணுவர் என்றும் குறிப்பிடுவர்.

பொறி புலன்களை அடக்கி ஒழுகுவார்க்கு வேறு அறம் வேண்டுவதில்லை. திருவள்ளுவ தேவர் 'மனத்தின் கண் மாசிலனாதல் அறம்' என்றும், அறவோர் - அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நீக்கி ஒழுகுவர் என்றும் கூறுவனவெல்லாம் நினைவில் இருத்திக் கொளற் பாலனவாம்.

இனி நாலடியாரில் வரும் பாடலை நோக்குவோம்:-

பிறர்மறை யின்கட் செவிடாய்; திறனறிந்(து)
ஏதிலார் இற்கண் குருடனாய்த் தீய
புறங்கூறின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு

(மறை - வெளிப்பட்டால் குற்றம் வருமென்று அஞ்சி பிறர்க்கு மறைத்து ஒருவன் சொல்லும் சொல்; மூங்கை - ஊமை)

எனவே நாம், புன் செயலில் ஓடும் புலன் வழிச் செல்லாது, அதனை மட்டுப்படுத்தி, ஆசை எனும் விலங்கை அகற்றி, வாழ்ந்து அறநெறி பேணுவோமாக!

(தொடரும்)

-சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்

புதியநூற்றாண்டு உதயமாகும்போது
உதைபந்தாடி உற்சாகமாக வரவேற்போம் - மதிகெட்டு
சிறுபிள்ளைத்தனமாக தேசங்கள் ஒன்றையொன்று
நெறிகெட்டுப் பந்தாடினால் நீறுதான் எஞ்சும்.

- வி.பி.ஆர்.இராமச்சந்திரன் -
வல்லிபுரக்குறிச்சி.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்
விளைவு மாறிப் போவதாலும்
சினிமாத் தயாரிப்புக்கள்
திசைமாற வைப்பதாலும்
நாளைய உலகம்
அறியாச் சிறுவரின் கால்களில்
அகப்பட்டு அல்லலுறப் போகிறது!

- கு.விஜயகுமார் -
சாவகச்சேரி.

இது!
இன்ரநெற்றின்
நூற்றாண்டு...
மாறிடும்
நூற்றாண்டில்
உலகம்
இளையவர்க்கு
உதை பந்தாயும்
மாறலாம்...
அங்கே
உதைபடப் பேவது
மனித நேயம்தான்...!

-தியானேஸ்வரசர்மா-
நுணாவில் மத்தி.

இளைஞனே - நீ
எழுந்து நிற்பது
இருபத்தோராம் நூற்றாண்டின்
எதிர்வு கூறலுக்கா?
இல்லையேல,
உலகையே
உறுத்திக் கொண்டிருக்கும்
அணுகுண்டின்
ஆரம்ப கர்த்தா
அல்பிரட் நோபலின்
பிறந்த நாள்
ஒக்டோபர் இருபத்தொன்றின்
அறை கூவலுக்கா?

- நயினை இராகுலன் -

பின்னால் - ஒரு
புதிய நூற்றாண்டு
பிறக்கப்போகிறது - அதற்கு
முன்னால், - இந்த
பழைய பூமியை
பந்தாய் அடித்துத் தொலை
சின்னப் பையனே!!

- என்.தனுசுஜன் -
சண்டிலிப்பாய்.

உலகினை உதைபந்தாக்கி
உதைக்கச் செல்லும்
மிலேனியம் ஆண்டின்
மிடுக்கான சிறுவனே..
எதிர்வரும் தலைமுறையின்
தலைவனான நீயே
ஆக்கப்பாதையில் செல்லாமல் - இவ்வாறு
அழிவுப்பாதையில் செல்லலாமா?

- க.மைதிலி -
சாவகச்சேரி.

புதியதோர் வாழ்வு பெற
இளைஞர் நாம் உருவெடுத்தோம்
இதுவரை கண்ட துயர் இனி
இல்லையென்று ஆக
காலடிக்கு வருகின்ற புதிய
காலப்பாதையில் நடையிடுவோம்...
இருபத்தொன்றிலேனும்
இருக்கட்டும்...
மனிதர் நிம்மதியாய்!

- ஆர்.அனுஷா -
கட்டைப்பிராய்.

விளையாட்டாய் எண்ணிவிட்டாய்
விபரீத நிகழ்வாய் எண்ண மறந்துவிட்டாய்
விளையாட்டுப் பையன் நீ என்பதால்
விளங்காமல் பூமிப்பந்தை மோதுகிறாய்!

- பகீன் -
கொழும்புத்துறை.

இளைய எனக்கு – ஓர்
இருபத்தொன்று எதற்கு?
இருக்குமிந்தப்பாரில் – என்
உணர்வுகள், உரிமைகள்
மதிக்கப்பட்டால்ச்சரி!

- பராங்கதன் -

கால்ப்பந்து ஆடிக்களிக்கும் சிறுவனே,
புறப்படு புதிய யுகம் பிறக்கும்வேளை,
பந்தினும் மேலாய் உன்
பந்துக்கள் படும் துயர் துடைக்க.

- திருமதி அ.விஜயகுமார் -
வடலியடைப்பு.

தம்பி...!!
உலகத்தை உருட்டி
வெருட்டி அடக்கி
ஒடுக்கி பந்தாடும்
அளவுக்குத் துணிந்துவிட்ட
நீ...! என்ன?
'கிளின்ரன்' மகனா...?
இல்லை! 'ஹிட்லரின்'
பேரனா...?

- சி.என்.ஜெயின்ஸ் -
நவாலி வடக்கு.

பறக்கும் கணனி யுகம்சிறக்க
பிறக்கும் இருபத்தோராம் நூற்றாண்டே
தொடரும் யுத்தம் உடன் நிறுத்தி
இடரும் தத்தம் கடனும் அற்று
வளரும் இளைஞர் கல்விகற்று
தளரும் பண்புகள் தக்கவைக்க
மகிழும் பெற்றோர் குருபோற்ற
புகழும் சுற்றமும் பெருகிவர
தமிழும் கற்றோர் அரசோச்ச
நிகழும் மாற்றம் அருள்வாயே!

- மதுரை பண்ணாகம் -

கோல போடும் பாலகா
கால் கவனம்!
கல், முள், கண்ணிகள்
காணாமல் இருக்கும்...
புன்னகை இழந்த
பூமிப்பந்தைப் புரட்டு!
மின்னி வரும் –
மிலேனிய யுகத்தை
மின்ரச் செய்!

- மானிப்பூர் ரட்ணேஸ் -

பூமியை பந்து என்று
சொன்னதால் தான்
அது எல்லோருடைய கால்களாலும்
அடிபடுகிறது!

- கரவெட்டி செ.ரமேஷ் -

செந்தணலில் வேதாகமங்கள்
வெந்து போக, –
வெற்றிக் களிப்பில்
வெட்கம் கெட்டவர்கள்
மலிந்து போக, –
மனிதம் மரணித்துவிட்ட
தரணிப் பந்தை
தட்டிச் செல்லும் தம்பி
தசாவதாரமோ??

- ப.அகிலநாயகி -
மீசாலை மேற்கு.

இலட்சியத்துக்காக போராடி - உன்
இலக்கை அடைந்தாய்!
உரிமைக்காக போராடி
பார் போற்றும் பூமியை சொந்தமாக்கினாய் - இனி
நீ எதற்காக போராட வேண்டும்?

- பா.விஜிதபாரதி -
மட்டுவில்.

உன்னால் முடியும்.
மனிதன் நீ!
இருபத்தோராம் நூற்றாண்டின்
மகத்தான மனிதன் நீ!
உலகை
உதை பந்தாய் என்ன
எரிபந்தமாய் எரிக்கவும்
உன்னால் முடியும்.

- மயூறணி -
வன்னி.

உதை கொடுக்க
வதைகள் தீர்க்க...
சிதைகளைச் சீராக்க
புதைகுழிகள் பூரிப்படைய...
விதைகளாக விருட்சமழிக்க...
சதைகளாக சரித்திரம் படைக்க...
கதைகளையும் காவியத்தையும்...
காக்கும் காலம் விரைவில்...
கண்மணிகளாக
மின்னல்களாக
காக்கும் காலம் கைகளில்...

- டிமெல் -
துறையூர்.

விஞ்ஞானத்தில் வளர்ந்த நண்பா!
காற்றுப் பந்தெல்லாம் ஆடிக் களைத்தோம் - இனி
கனமான பந்தெடுத்து ஆடுவோம் வருவாய்!

- முத்துமாரி -


இருபத்தோராம்
நூற்றாண்டில்
உலகைப்
பந்தாட
இப்போதிருந்தே
'ஒத்திகை'யா?

- சாவையூர் சுகந்தி -

புத்தாயிரமாம் ஆண்டில்
புதுயுகம் படைத்திட
புறப்படும் சிறுவா!
புதுமைகள் செய்திட
புறமுதுகுறா வண்ணம்
புவியதுதனில்
புகழது பெற்றிட
புத்துணர்வு பெற்றிடு!

- நாக.மகேந்திரலிங்கம் -

## மௌனமொழி - 57



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.
இதனை வரைந்தவர் உடுவில் வி.ப.சசிவர்ணன்.

சிறுவனே...!
உலகினையே பந்தாக்கி
உருட்ட நினைக்கும் -
மன வலிமை,
உன்...!
எதிர்கால வாழ்வின்
எழுச்சியை,
இந்த உலகிற்கு
எடுத்துக் காட்டுகின்றதே...!

- சரோ தம்பித்துரை -

மலரும் மிலேனியத்தில்
பூமிப் பந்து
மனிதனுக்கடிமையோ?!
அதனசைவு என்பதும்
அவனின் ஆணையோ?!!

-இணுவை ஜெரட்றிக்-

பந்தென நினைத்து
'பார்' ஐ உதைக்கும்
தம்பியே – நாளை
தானை திரட்டி
நல்லுலகை வென்று
நாடாள நல்வாழ்த்துக்கள்!

- பிரதீபி -
பூநகரி.

இருபதாம் நூற்றாண்டின்
இறுதிவரை மனிதன்...
பூமியில் பந்தாடினான்.
இருபத்தோராம் நூற்றாண்டில்
மனிதன்...
பூமியையே பந்தாடுவான்...!!

- பொலிகையூர் சு.க.சிந்துதாசன் -

புயலின் குமுறல்கள்
பூகம்ப அதிர்வுகள்
புதைகுழிக்கொடுமைகள்
புதுரக ஆயுதங்கள்
சகிதம்
பூமாதேவியின்
புதிய நூற்றாண்டுக்கான
புதுமனை புகுவிழா
இதோ ஆரம்பம்!

- வதிரி வாசன் -

ஓ... இளையவனே!
உனக்கு வெற்றி
நிச்சயமானது.
உன் காலடியில் தானே
நித்தியமற்ற உலகு...
தயக்கமேன்...
தட்டிச் செல்
உன் இலக்குவரை!

- செ.சுதர்சன் -
உடுப்பிட்டி.

அனந்தனவன் ஓரடியில்
அளந்திட்ட அகிலத்தை
இன்று
பாதத்தால்
உருட்டிவிடும் வல்லமை
உன்னிடத்தில் உதித்தது பார்!

திருமதி.இ.ஞானகுரு.
பண்ணாகம்.

இருபத்தியோராம்
நூற்றாண்டில்
பூமியைத் தனது காலடியில்
கொண்டுவரும் திறமை
யாருக்கு உள்ளது?
வல்லரசிற்கா?
சமாதனத்திற்கா?

எஸ்.சிவமலர்.
இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கொலர்சிப்

காலை ஒன்பது மணியாகியும் எழும்புவதற்கு ஏதோ மனதுக்குச் சங்கடமாக இருந்தது. மகாலிங்கம் புரண்டு படுத்துக்கொண்டான்.

நேற்றுத்தான் மகன் நர்மதனின் ஐந்தாம் ஆண்டு ஸ்கொலர்சிப் றிசல்ட் வெளியாகி இருந்தது. அவன் நர்மதன் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு - தினமும் ஒன்பது மைல்கள்,மழை,வெயில்,பனி, குளிர் என்று பாராது 'ரவுணில்' இருக்கும் அந்தப் பாடசாலைக்கு.. அவனை ஏற்றி இறக்கி அலைந்த அளவுக்கு- 'றிசல்ட்' ஏமாற்றத்தைக் ·கொடுத்திருந்தது. வீட்டுக்குவந்த கையோடு மகன் மீது அடியாக் குறையாக அவன் சீறிப்பாய்ந்தான். மனைவி கமலா இன்னொரு பக்கத்தால் கொதித்துவிழ, நர்மதன் செய்வதறி



யாது தேம்பியழ. வீடே ஒரு சில மணித்தியாலங்கள் அல்லோலகல்லோலப்பட்டு ஓய்ந்தது.

நேற்றைய சம்பவம் அவன் மனதை அடிக்கடி குழப்பிக்கொண்டிருந்தது.

"பிள்ளை..... கமலா"

அடுத்த வீட்டுச் சறோ அக்காவின் குரல் ஒரு கணம் அவன் குழப்பத்தைத் திசைதிருப்பியது. காதுகளைக் கூர்மைப்படுத்திக்கொண்டான்.

"பேப்பர் பாத்தனியே பிள்ளை.... எங்கடை சண்முகத்தாற்றை மகன் தானாம் நல்லாப் பாஸ்பண்ணி இருக்கிறான். யாழ்ப்பாணத்திலேயே முதலாவதாக வந்திருக்கிறானாம்.... ஏதோ.... கஷ்டப்பட்டதுகள்.... கடவுள் கண்ணைத் திறந்திட்டார்...."

ஐந்தாம் ஆண்டு ஸ்கொலர்சிப் பாஸ்பண்ணியதே ஏதோ அந்தக் குடும்பத்துக்கு ஒரு விடிவைக் கொடுத்துவிடும் என்பதுபோல சறோ அக்கா வாயைப்பிளந்தாள்.

ஐந்தாம்ஆண்டு ஸ்கொலர்சிப் பரீட்சை மாணவர்களுக்கு இடையில் என்று இல்லாமல் குடும்பங்களுக்கிடையிலான ஒரு போட்டியாக - ஒரு கௌரவப்பிரச்சினையாக - உருவெடுத்துள்ள யாழ்ப்பாணத்துச் சூழலில் சறோஅக்கா இப்படிக் கூறியதில் வியப்பேதும் இல்லை. சறோ அக்காவின் வருகை நேற்று அடங்கிப்போன பிரச்சினையை மீண்டும் கிளறப்படுவதைப் போன்ற ஓர் உணர்வை மகாலிங்கத்துக்கு ஏற்படுத்தியது.

"மற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் செய்தது போலை நாங்களும் எங்கடை பிள்ளையை அந்த ரவுணிலை உள்ள பாடசாலையிலைதான் சேர்க்கவேணும்..." மனைவி கமலாவின் உந்துதலும் ஊரில் உள்ள இரண்டொருவரின் ஆலோசனைகளும் அவனை நாயாக அலைய வைத்தன. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம் என்று தலைவர், செயலாளர் வீட்டுப் படிகளெல்லாம் ஏறி, பல்லுக்காட்டி, இறுதியில் பத்தாயிரம் ரூபா 'டொனேசனும்' கட்டி, மகனை அந்தப் பாடசாலையில் சேர்த்துவைத்த நிகழ்வை அவன் ஒரு தடவை நினைத்துப் பார்த்துக்கொண்டான்.

மகனைப் பல போட்டிகளுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் அந்த ஆரம்பப் பாடசாலையில் சேர்த்துவிட்ட பெருமிதத்தில் ஓர் இனம்புரியாத கர்வம் மகாலிங்கத்திலும் இரண்டொரு மாதங்கள் தென்பட்டது உண்மைதான்.

"என்னதான்... கஷ்டப்பட்டாலும்.... கமலா! எங்கடை பிள்ளையும் டொக்டர், எஞ்சினியர்களின்ரை பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடத்திலை படிக்கிறதை நினைக்க... ஒரு பெருமையாத்தான்...இருக்கு" அவன் மனைவி கமலாவிடம் அடிக்கடி கூறிக்கொள்ளும் வார்த்தைகள்.

ஆனால் 'டொனேசன்' தொகைக்காக கடன்பட்ட அந்தப் பத்தாயிரம் வட்டியும் முதலுமாக பெருகிக் கொண்டிருந்தது.

பிரபல பாடசாலை ஆயிற்றே. மற்றவர்களின் பிள்ளைகளுக்கு இழக்கமாக தன்பிள்ளை இருக்கக்கூடாது என்பதற்காக அவ்வப்போது உடுபுடைவைகள் முதல்வாங்கிய பொருள்களின் கடன்கணக்கு, பக்கத்து இராசையா கடைக்கொப்பியின் வரிகளை மிகவேகமாக நிரப்பிக்கொண்டிருந்தன.

பரிசளிப்புவிழா, தமிழ்த்தினவிழா, ஆங்கிலதினவிழா, பெற்றோர்தின விழா என்று அவ்வப்போது நடக்கும் நிகழ்வுகளுக்கெல்லாம் வசதிபடைத்தவர்கள் தத்தம் பிள்ளைகளுக்கு எவற்றையெல்லாம் வாங்கிக்கொடுத்தார்களோ அவற்றையெல்லாம் செயற்படுத்தவேண்டியநிலையில் ஏற்பட்ட செலவுகள் இன்னொரு பக்கம் கடன் சுமையை பெருக்கிக்கொண்டிருந்தன.

"இவையெல்லாம் ஊருக்கு விளங்குமோ...பிள்ளையை ரவுணிலை படிப்பிக்கிறனெண்ட பெருமையைத்தவிர வேறை என்னத்தைக்கண்டுகிடக்கு...? எங்களைப்போல எத்தனை குடும்பங்கள் போலிக் கௌரவத்திலை தத்தளித்துக்கொண்டிருக்கும்...." இரண்டு மூன்றுமாதங்களுக்குள்ளாகவே மகாலிங்கத்தின் மனம் சலித்துவிட்டது.

அருண் - சக்தி
(குரும்பசிட்டி)

"உங்கடை பிள்ளை எத்தினையாவது....? பெரிய பள்ளிக்கூடத்திலை விட்டுப் படிப்பிச்சனிங்களெல்லே" சறோஅக்கா கமலாவைக் கேட்டுக்கொண்டது மகாலிங்கத்தின் காதிலும் விழுந்தது.

"பெரிய பள்ளிக்கூடமெல்லே! எத்தினை பிள்ளையள்? டொக்டரின்ரை, எஞ்சினியற்றை.... இதுகளோடை போட்டிபோடிறதெண்டால்.... முடிஞ்ச அலுவலே....." பரீட்சை முறைகளைப் பற்றி பரிச்சயமில்லாத சறோ அக்காவுக்கு ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி சமாளித்துக் கொண்ட மனைவி கமலாவின் சாதுரியத்தை நினைத்து மகாலிங்கம் தனக்குள் மகிழ்ச்சியற்ற ஒரு சிரிப்பை உதிர்த்துக்கொண்டான்.

கமலா,சறோ அக்காவுடன் இந்த விடயம் தொடர்பாக மேலும் கதைப்பதை அனுமதிப்பதற்கு அவன் மனம் ஏனோ மறுத்தது.

"கமலா" அவன் சிறிது உரத்த குரலில் கூப்பிட்டான்.

சறோ அக்காவை மெதுவாக சமாளித்து அனுப்பிய கையுடன் அறைக்குள் நுழைந்தாள் கமலா.

"என்ன கமலா... பிள்ளை பாஸ் பண்ணின திறத்திலை கதை அளக்கிறியே"

"இப்ப.... என்ன வந்திட்டுது...? ஏன் கத்திறியள்? என்ரை மகன் பாஸ் பண்ணினது, பண்ணாதது இவ என்ன.... அங்கைபோய் கேட்கப் போறாவே?" கமலா எதிர்த்துப் பேசினாள்.

"நீங்க... அவனை அந்த ரியூட்டரியிலை விட்டிருந்தா எத்தினை மாக்ஸ் எடுத்திருப்பான் தெரியுமே...! சொன்னேன் கேட்டியளே." பிரச்சினை திரும்ப உருவெடுத்தது. முற்றத்தில் நின்ற நர்மதன் நேற்றைய பிரச்சினைகளை நினைத்துக் கண்களைப் பிதுக்கினான்.

"உன்ரை சொல்லைக்கேட்டு இதுவரைக்கும் எவ்வளவு கடன் நிக்குதெண்டு யோசிச்சியே...அப்பிடித்தான் காசைப்பாக்காட்டியும்...உந்தத் தூரத்துக்கு பள்ளிக்கூடத்துக்கு அலைஞ்ச தோடை தண்ணி வென்னீர் இல்லாமல் ரியூட்டரிக்கும் விட்டிருந்தா இப்ப பிள்ளை நோய் நொடியிலைதான் படுத்திருக்கும்.... எதுக்கும்ஒரு அளவு வேணும் கமலா...." அவன் வெறுப்புடன் கூறிக்கொண்டான்.

கமலா பிரச்சினையை மீண்டும் வளர்க்க விரும்பாதவளாய் மெதுவாக அப்பால் நழுவினாள்.

மகாலிங்கத்தின் மனம் சிறிது உணர்ச்சிவசப்பட்டது. வாசிகசாலைப் பக்கம் போய்வந்தால் சிறிது ஆறுதலாக இருக்கும் என்ற எண்ணத்துடன் புறப்படத் தயாரானான்.

வழமையாக இரண்டு தினசரிப் பத்திரிகைகளைக் கொண்டு இயங்கும் அந்த நூல்நிலையத்தில் பத்திரிகை வாசிப்பதற்கு காலை பத்து மணிவரை ஒரே சனக்கூட்டம். பத்திரிகைகளும் பக்கம் பக்கமாக பிரிக்கப்பட்டு ஆளுக்கொருபக்கமாகி ஒரு செய்தியின் தொடர்ச்சியை வாசித்து முடிப்பதென்றால் அது ஒரு பெரும் பிரயத்தனமாக இருக்கும்.

மகாலிங்கம் சென்ற நேரம் சிறிது சனம் குறைந்திருந்தாலும் ஒரு பத்திரிகை முழுவதுமாக கந்தப்பு மாஸ்டரின் கைக்குள் அகப்பட்டிருந்தது. கந்தப்பு மாஸ்டரின் கையில் இருந்து பத்திரிகையைப் பெறுவதற்கு ஆகக் குறைந்தது இரண்டு மணித்தியாலம் என்றாலும் காத்திருந்தே ஆகவேண்டும். பொது நூல்நிலையங்களில் பக்கத்திலும் இரண்டு சனம் பத்திரிகைக்காக காத்திருக்குதே என்று சாட்டை செய்யாமல் இவ்வாறு பத்திரிகைகளை அக்குவேறு ஆணிவேறாக சிறுசிறு விளம்பரம் முதல் வெளிநாட்டுச்செய்திகள்வரை வாசித்துக்கொண்டே இருக்கும் ஜென்மங்களில் கந்தப்புமாஸ்டரும் ஒருவர். பத்திரிகைக்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவனுக்கு ஏதோ ஒரு மணித்தியாலம் போவது போல இருந்தது.

'மனுசன்...ஏதோ... பத்திரிகையை புறாவ் பாக்கவிட்ட மாதிரியல்லே வாசிச்சுக் கொண்டிருக்குது. இந்த உலகத்திலை எத்தினை விதமான பிறவிகள்' மனதுக்குள் சலித்துக் கொண்டான்.

இரண்டொரு இளைஞர்கள் கரும்பலகையொன்றை நூல்நிலைய முன்றலில் வைத்துவிட்டுச் சென்றனர். சிறிது நேரத்தில் கரும்பலகையை சுற்றி சனம் கூடியது.

"சண்முகத்தின்ரை மகன் பிரதீபனுக்கு பாராட்டுவிழா வைக்கினமாம்.."

"அவன் இந்த சின்னப் பள்ளிக்கூடத்திலை படிச்சு யாழ்ப்பாணத்திலேயே முதலாவதாக வந்திருக்கிறானெண்டால்..பாராட்டத்தானேவேணும்..."

"இனி எண்டாலும் எங்கடை ஊர் பள்ளிக்கூடத்துக்குநன்கொடைதிரட்டி கட்டடங்களைக் கட்ட உந்த வாசிகசாலைகள் முன்னுக்குவரவேணும்...."

"ஊர்ப் பள்ளிக்கூடத்திலை பழையமாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் எண்டு இருந்துகொண்டு தங்கடை பிள்ளையளுக்கு [illegible] எண்டு கட்டி ரவுணிலை படிப்பிக்கிற சீமான்கள் இதை உணரவேணும்..." கரும்பலகையை சுற்றி நின்ற கூட்டத்தினருள் ஒருவரின் வாயில் இருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் மகாலிங்கத்தின் மனதை மேலும் புண்படவைத்தன.

பக்கத்தில் நிற்பவர்களுடன் முகம் காட்டிக் கதைப்பதற்கு அவனுக்கு ஏதோ சங்கடமாக இருந்தது. மனக் குழப்பத்துடன் வீடு திரும்பினான்.

எதிரே வந்த திருநாவுக்கரசு மாஸ்டரின் முன் அவன் மண்டியிடுவது போலக் கூனிக்குறுகி நின்றான். ஏதோ குற்றமிழைத்தவன் போல அவனுடல் பணிந்து நின்றது. திருநாவுக்கரசு மாஸ்டரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது அப்போதைக்கு அவனுக்கொரு ஊன்றுகோல் கிடைப்பது போலத் தென்பட்டது.


மாஸ்டருக்கு எதுவும் விளங்கவில்லை. "மகாலிங்கம்... என்ன... புதினம் வாசிகசாலைப் பக்கம்?" மகாலிங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

"விசேடம் ஒன்றும் இல்லை... மாஸ்டர்..." அவனது பதில் மகாலிங்கத்தின் நிலையை மாஸ்டருக்குப் புலப்படவைத்தது.

"என்ன... குழம்பிப்போய் இருக்கிறாய்... நான் எத்தினை தடவை சொன்னனான்... வீணாக ரென்சனாகாதையெண்டு... நீயே இப்பிடியெண்டால்...."

"உண்மைதான் மாஸ்டர் பிறருக்கு எந்தப்பிரச்சினையளுக்கும் தீர்வு கூறுவதும் ஆலோசனை கூறுவதும் சுலபமாகத்தான் இருக்கும்... ஆனால் எங்களுக்கெண்டொரு பிரச்சினை வரேக்கைஅதை எங்களாலை எதிர்கொள்ளமுடியாமல் கிடக்கு..." மகாலிங்கம் பதிலளித்தான்.

"என்ன மகாலிங்கம்... ஏதோ தலைபோற விசயமே?



"இல்லை மாஸ்டர். நேற்றுத்தான் ஐந்தாம் ஆண்டு 'ஸ்கொலர்சிப்' றிசல்ட் வந்தது. உங்களுக்கு தெரியுந்தானே. என்ரை மகனை நான் எவ்வளவு கஸ்ரப்பட்டு கடன்பட்டு படிப்பிச்சனான்...வாய்க்கையில்லை... அந்த ஆத்திரத்திலை மகனுக்கும் அடிச்சுப்போட்டன்....மனிசிக்கும் எனக்கும் கூட இது பெரும்பிரச்சினையாய்ப்போச்சு..."

"மகாலிங்கம்... நீ தேவையில்லாமல் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறாய்... மகனைப் படிப்பிக்க பாடுபட்டது, செலவழிச்சது உண்மைதான். இது எல்லாம் ஆருக்குச் செலவழிச்சனி...? மகனுக்குத்தானே...!அதுபோக மகன் என்ன ஓ.எல்., ஏ.எல். பெயில் விட்டிட்டானே? ஐந்தாம் ஆண்டுதானே... இன்னும் எத்தனை படிகள் தாண்டவேண்டிக்கிடக்கு" மாஸ்டர் பக்குவமாகக் கூறிக்கொண்டார்.

"எனக்கென்னவோ ஒரு கிழமைக்கு வீட்டுக்குள்ளையே அடங்கிக் கிடந்தால்தான் ஆறுதல் கிடைக்கும் போலைகிடக்கு மாஸ்டர்..." மகாலிங்கத்தின் பதில் அவனின் மனநிலையை மாஸ்டருக்கு மேலும் தெளியவைத்தது.

"ஒரு கிழமையும் வீட்டுக்குள்ளை நீ ஆறுதலாக இருப்பியெண்டு நினைக்கிறியே. தேவையில்லாத யோசனைகளும் முடிவுகளும் உன்னைக் குழப்பிக்கொண்டுதான் இருக்கும்..."

"பிள்ளை பெயில்விட்ட உடனே நீயும் மனிசியுமா ஆளுக்கொருபக்கம் திட்டித் தீர்த்தால் பிள்ளை ஆரிட்டை ஆறுதல் தேடும்? நீங்கள் பிள்ளையைப் பிள்ளையாப் பாக்கேல்லை.... ஒரு சோதினை மறுமொழியா, படிப்பிச்ச செலவின்ரை மொத்தத் தொகையாகத்தான் பார்க்கிறியள். மற்றவை உங்களை ஏளனம் செய்வினம் எண்ட எண்ணம் வேறை..."

"இல்லை மாஸ்டர்..... அப்பிடியில்லை.."

"சும்மா... வெளிக்குச் சொல்லாதை.... உன்ரை மனசு எனக்குத் தெரியும்..."

"நீங்க பிள்ளைக்கு முன்னாலை வாக்குவாதப்படுகிறது பிள்ளையின்ரை மனத்திலை எந்தளவு தாக்கத்தைக் கொடுத்திருக்கும்...?ஒன்றை மட்டும் கவனிச்சுக்கொள். என்ரை மகன் படிக்கவேணும், நல்ல பள்ளிக்கூடத்திலை படிக்கவேணும், நாலு இங்கிலீசு கதைக்கவேணும் எண்டு எந்த ஒரு பெற்றோரும் ஆசைப்படுகிறதிலை தவறில்லை. அதுக்காகப் பாடுபட்டதை பிள்ளைக்கு முன்னாலை புரியவைக்கிற மாதிரிப் புரியவைக்கவேணும். அதைவிட்டிட்டு இந்த வழியிலைபோனா.... இதே பிள்ளை தன்ரை படிப்புக்கு முடிவு கட்டிற நிலைக்குத்தான் கொண்டு போய்விடும்... அவதானமாக நட..." மாஸ்டர் கொஞ்சம் இறுக்கமாகச் சொன்னார்.

"பேசாமல் பாராட்டு விழாவுக்கு வா... சோதினை பெயில் விட்டாப் போலை படிக்கமாட்டான் எண்ட முடிவுக்கு வாறதே...? அதுதான் சொல்லுறன். படிப்புப் படிப்பெண்டு பிள்ளையள் இயல்பாகொண்டுள்ள திறமைகளை வளர்க்கவிடாமல் மழுங்கடிக்கிற பழக்கதோசம் எங்கடை சமுகத்திலை பெரும்பிரச்சினை. நீ... கூட அவன் விளையாடப் போனா என்ன, படம் கீறிக்கொண்டிருந்தால்..... என்ன... அதுக்கு விடுகிறனியோ? அடிச்சு விரட்டி, படி படி எண்டு படிப்பிலையே கசப்புணர் வைத்தானே ஊட்டினனி.... படிக்கிற நேரம் படிக்க, விளையாடுற நேரம் விளை யாட, படம் கீறிற நேரம் படம் கீற விடவேணும். சில வேளை அவன் ஒரு ஓவிய னாக அல்லாட்டி விளை யாட்டு வீரனாகக் கூட ஏன் வரமுடியாது....?

பிள்ளையையும் கூட்டி வா... பாராட்டுப் பெறுகிற பிள்ளையளைப் பார்த்து அவனுக்கும் ஒரு வேகம் பிறக்கும்... இப்ப மகனைப் படிக்கவைக்கிற முடிவு உன்ரை நடவடிக்கையிலை தான் தங்கியிருக்கு...." மாஸ்டர் கூறிக்கொண்டே வாசிகசாலையை நோக்கி நடந்தார்.

மகாலிங்கத்தின் மனத்துள் இனம்புரியாத ஒரு குற்ற உணர்வு மெதுவாகப் பரவ ஆரம்பித்தது. அவன் வீட்டுப் படலையை திறந்த போது அவனது வருகையைக் கண்ட நர்மதன் வீட்டுக்கோடிப் புறத்துக்கு ஓடி மறைந்தான். வாக்குவாதம் திரும்ப ஆரம்பிக்கப் போகின்றதோ என்றொரு பயம்.

இப்போது நர்மதனின் மனத்தை வென்றெடுக்க மனைவி கமலாவின் துணை மகாலிங்கத்துக்குத் தேவைப்பட்டது. வீட்டுக் கோடிப் புறத்தில் நின்ற நர்மதன் பெற்றோரின் அரவணைப்புக்காக ஆறுதல் வார்த்தைகளைக் கேட்பதற்காகக் காதுகளைக் கூர்மைப்படுத்திக்கொண்டான்.

"ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலைகளும் தரமுள்ளவைகளாகப் பேணப்பட வேண்டும். அரசாங்கமும் இவைகளுக்கிடையில்போட்டிகளை நடத்தி சிறந்த ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கவேண்டும். இவற்றுக்கு மேலாக அதிபர்களின் பொறுப்புணர்வு, ஆசிரியர்களின் கடமையுணர்வு, பெற்றோரின் புரிந்துணர்வு, மாணவர்களின் கீழ்ப்படிவு இவைகளைக் கொண்டதுதான் ஒரு சிறந்த கல்விக்கூடமாகத் திகழமுடியும்..." பாராட்டு விழாவில் திருநாவுக்கரசு மாஸ்ரரின் பேச்சு ஒலிபெருக்கியூடாக மகாலிங்கத்தின் வீடு வரை கேட்டுக்கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளங்கையில் உங்களை அறியுங்கள்

மனிதர்களின் கைகளில் உள்ள ரேகைகள் எதுவுமே காரணமில்லாமல் அமைந்திருக்கவில்லை; விண்ணுக்கும் மண்ணிலுள்ள மனிதனின் தனித்தன்மைக்கும். உள்ள பிணைப்பையும் இணைப்பையும் நிதர்சனமாகக் காட்டுவனவாக அவை அமைகின்றன.

-அரிஸ்ரோட்டில்.

'வாழ்க்கை' என்னும் வார்த்தைப் பிரயோகமானது 'வாழுங்கை' என்னும் சொல்லிலிருந்தே பிறந்திருக்க வேண்டும் என்கிறார் கைரேகை சாஸ்திர நிபுணரான டாக்டர் துர்க்கா தாஸ் அவர்கள். இந்தியாவின் பிரபல சோதிடரான சத்தியா அவர்கள் 'தம் கையே தமக்குதவி' என்கிற பழமொழிக்கு மிகவும் நுட்பமான விளக்கம் ஒன்றை அழுத்திக் கூறுகின்றார்.

ஒவ்வொருவரதும் வாழ்க்கையானது எப்படி அமைந்தது? அமைகிறது? அமையப்போகிறது? என்பதை உள்ளவாறு தெள்ளத்தெளிய படம் பிடித்துக் காட்டவல்ல கமரா அவர்களுடைய உள்ளங்கைகளேயாம். இதனால்தான் எத்தனையோ ஆயிரம் ஆயிரம் வருடங்களுக்கு முன்பாகவே நம் முன்னோர்கள் 'உள்ளங் கை நெல்லிக்கனி போல' எனக் கூறியுள்ளாரோ எனவும் சிந்திக்க வேண்டியுள்ளது.


வாசக நெஞ்சங்களே! மனித உடலிலே உரோமம் வளராத உறுப்பு யாது எனில் அது உள்ளங்கைதான். உள்ளங்கை விரல்களில் காணப்படும் நகங்கள் மனித உடலில் ஓடுகின்ற இரத்தத்தின் தன்மையையும், இரத்த ஓட்டத்தின் சிறப்புக்களையும், குறைபாடுகளையும் அறிவிக்கின்றன. எமது கட்டை விரலின் அமைப்புக்கும் மூளையிலுள்ள கட்டை விரலின் கேந்திர பகுதிக்கும் நேரடியான இணைப்பும், பிணைப்பும் இருந்துவருகின்றது.

இவை மட்டுமா? இதயத்துக்கும் இதய ரேகைக்கும், விரல்களுக்கும் நரம்புகளுக்கும் நேரடியான ஸ்பரிசத்தாலேயே உணர்ச்சிகளைப் பெறும் அளவுக்குத் தொடர்புகள் துலங்குகின்றன. ஏன்? எதிர்காலத்திலே மனிதனின் உள்ளுறுப்புக்கள் எப்படி இயங்கப் போகின்றன? என்பதை எந்த 'எக்ஸ் - ரேயும்' அறிவித்து விடாத அளவுக்கு இவை அறிவித்து விடுகின்றனவாமே?

உலகின் மிகப் பெரிய வைத்தியர்களும், மனோதத்துவ மேதைகளும், விஞ்ஞானிகளும் கொக்கிப் போயுள்ளனர். துப்பறியும் நிபுணர்கள் கூட ஒருவரின் கைரேகையைப் போல இன்னொருவரது கைரேகை அமைவதில்லை என்பதை ஒப்புக்கொள்வர்.


நண்பர்களே நாம் இனி உலகப் புகழ்பூத்த மகான்கள், ஞானிகள், அறிஞர்கள், அரசியல்வாதிகள்... என இன்னோரன்ன பெரியார்களின் வாழ்க்கையை எங்ஙனம் கைரேகைகள் தீர்மானித்தன எனப் பார்ப்போமா?

## மகாத்மாவின் மகத்தான உள்ளங்கை




இந்த மகாபுருஷர் இந்தியாவின் ராஜீயத் துறவி. அகிம்சை போராட்டத்தின் தந்தை யாரென்று உங்களுக்குக் கூறாமலே புரியும். ஆம், இவர்தான் அண்ணல் காந்தியடிகள். இவரது இருதயரேகையைஅவதானியுங்கள். அதன் மூன்று கிளைகளும் குருமேட்டில் பிரிந்து அமைந்துள்ளன. அவைதான் அவரை உலகம் போற்றும் உத்தம புருஷர் ஆக்கியவை. அகிலம் புகழுங் கீர்த்தியை வழங்கியவை. புத்திரேகையானது உற்பத்தியிலே தனித்து அகன்றுவிட்டமையால் புத்தியே இவரின் பலமாயிற்று. புத்தி இருகிளைகளாய் பிரிந்து அருள் ரேகையை தொடுகின்றமையாற்தான் இகபர சாதனமுடையவராக மிளிந்தார். எனவேதான் சாத்வீக குணத்தவராக விளங்கினார். மகாத்மாவின் கைகளில் அருள் ரேகை நன்கமைந்து இருப்பதால்தான் அவர் காலத்தை அனுசரிப்பவராக நடந்தார். அண்ணல் அவர்கள் தமது ஆன்மீகப் போரட்டங்களை ஆற்றிவந்த காலகட்டங்களிலே அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு அளவற்ற ஜனங்கள் செல்வார்கள். மிகவும் நெருக்கடியான சூழல்களிலே மேடைக்கு வந்தவுடனே அவர் தமது வலது கையை மட்டுமே உயர்த்திக் காட்டுவார். என்ன ஆச்சரியம்? கூட்டம் கூட்டமாக குழப்பம் விளைவித்துக் கூச்சலிட்டோர் அனைவரது உள்ளங்களும் மௌனமாகிவிடும். உடல்களிலே மின்சாரம் பாய்ந்தது போன்ற உள்ளுணர்வு ஏற்படும். குண்டூசி நிலத்தில் விழுந்தாற்கூட சப்தம் கேட்கின்ற அளவுக்கு நிசப்தம் நிலவும். அவ்வேளையிலே அவர் பேசுகின்ற பேச்சுக்கள் மட்டும் தெளிவாகக் கேட்கும். அவை மக்கள் மனங்களிற் பதியும். இந்தத் திடீர் மாற்றதின் காரணந்தான் என்ன? அவருடைய ஆன்மீக பலந்தான் என்று ஒரு சாரார் கூறினாலுங்கூட மகாத்மா காந்தியின் வலக்கரத்தில் அமைந்த மகத்தான ரேகைகளே என்பது சோதிடர் கருத்து. நாம் உன்னிப்பாக கவனிப்போமாக இருந்தால் அவரின் சுக்கிரமேடு ஒடுங்கியுள்ளமை வாழ்வின் எல்லா விதமான கஷ்டங்களையும் சுட்டுகின்றது. செவ்வாய் மேட்டிலே முக்கோணம் பின்னப்பட்டிருக்கின்றமை எதிரிகளுடன் போராடுஞ் சாமர்த்தியம் இருந்தும் முடிவில் அதிருப்தி அடையவேண்டிய நிலையின் அடையாளம். மேலும் சனி விரலிலே காணப்படுகிற உபரேகையானது துப்பாக்கி அபாயத்தைத் தெரிவிக்கின்றது.

## கவிசிரேஸ்டரின் கைரேகை



இது யாருடைய கை என்று உங்களால் இனங்காண முடிகின்றதா? பிரம்மஞானி, கவிசிரேஸ்டர், உலகப் புகழ்பூத்த தீர்க்கதரிசி தாகூர், அவர்களின் கையே இது. இந்த மகானின் குருமேட்டிலே இருதய ரேகையின் இரு கிளைகள் முக்கோணத்துடன் கூடியதாகச் சந்திக்கின்ற ஞானரேகை பற்றிச் சிந்தித்துப்பாருங்கள். அது அகண்ட பரிபூரணஞானத்தை குறிக்கின்றது. இவருடைய சுக்கிரமேடு மக்களிடத்தில் மிகுந்த வாஞ்சையுடையவர் என்பதை உணர்த்துகின்றது. அருள் ரேகை, விதிரேகையோடு உற்பத்தியில் கலந்து புதன் மேடுவரை செல்கின்றமை அருள் வாக்கு, கவித்துவம், அளவறிந்த செல்வாக்கு ஆகியவற்றை தீர்மானித்துள்ளது. எனவேதான் இவர் 'கீழைத்தேயத் தத்துவஞானிகளின் தந்தை' என்று மேலைத்தேயத்தவர்களாலும் போற்றப்படுகிறார்.

## வீரத்துறவியும் சூலக் குறியும்




வீரத்துறவி விவேகானந்தர் என்னும் பெயர் உங்களுக்கு முன்பே அறிமுகமானது. இவருடைய கையின் அமைப்பைத் தத்துவக் கை என வழங்குவர். இவருடைய உள்ளங் கையை உன்னிப்பாக நோக்கும்போது குருமேட்டிலே சூலாயுதக் குறியைக் காணமுடிகிறது. உள்ளங்கையிலே சூலாயுதத்தைப் போன்று திரிசூலக் குறி காணப்பட்டால் அது அபூர்வமான ஒன்று. அப்படிக் காணப்பட்டால் அவர்கள் மிகவும் நன்மை பெறுவதோடு புத்திரேகை, விதிரேகை, இருதய ரேகை மூன்றுஞ் சிறப்புற அமைந்திருப்பின் அவர்கள் அட்டமாசித்துக்களை ஆற்றவல்லவர்களாகவும் விளங்குவர். இது வெற்றியின் அறிகுறி ஆகும். ரேகை அமைந்துள்ள மேடுகளிலே அவர்கள் பெரும்வெற்றி அடைவார்கள். இதனாலேயேதான் சுவாமிஜி அவர்களால் மனவொருமை தியானமகிமை ஆகியவற்றுக்கு உதாரண புருஷராகவும் நனிசிறந்த ஆன்மீகப் பேச்சாளராகவும் நரேந்திரர் ஆகவும் மிளிர முடிந்தது என்றால் மிகையில்லை.

## அண்ணாவும் ஆட்காட்டி விரலும்


குற்றவாளிகளைச் சுட்டிக்காட்டும் விரலே சுட்டும் விரல் எனப்படுகின்ற ஆட்காட்டி விரல் ஆகும். யாராயிருந்தாற் கூட சுட்டும் விரலை நீட்டிப் பேசியவுடன் மூக்குநுனியிலே கோபம் வருவதும் சர்வசாதாரணந்தானே? ஆனால் 'உன்னைத்தான் தம்பி' என்று சுட்டும் விரலாலே சுட்டிப் பேசி தமிழகத்தின் அரசியலிலும், தமிழ் கூறும் நல்லுலகத்திலும் நீங்காப்புகழ் பெற்ற ஒருவராக அறிஞர் அண்ணா அமைகின்றாரே? அதன் மர்மம் யாதோ? இதற்குக் காரணம் அவரின் ஆட்காட்டி விரலில் அமைந்த ரேகைதான் என்கிறார் டாக்டர் துர்க்காதாஸ்.

## வின்ஸ்ரன் சேர்ச்சிலின் வெற்றியின் இரகசியம்




ஆர்வலர்களே இதுவரை நேரமும் பாரசீகத்தின் மேன்மக்கள் சிலரை மையப்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்ட நாம் இனி உலக மேடைக்குள் ஒருகால் வருவோமா? இந்தக் கைரேகைக்கு உரியவர் வின்ஸ்ரன் சேர்ச்சில் அவர்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு சுவையான சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். ஆம் அது இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டம். அப்போது பிரிட்டிஷ் பிரதமராக விளங்கியவர்தான் வின்ஸ்ரன் சேர்ச்சில். உக்கிரமாகப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலே அவர் திடீரெனக் களத்திலே இறங்கித் தமது சுட்டுவிரலையும், நடுவிரலையும் உயர்த்தி ஏனைய விரல்களை மடித்து 'V' என்ற ஆங்கில எழுத்தின் வடிவத்தை "V For Victory" எனக் காட்டித் தமது படையினர்க்கு ஊக்கங் கொடுத்தார். அமோகவெற்றி இறுதியில் அவரை அலங்கரித்தது. காரணம் என்ன? அவரின் விதிவிரல், குருவிரல் ஆகியவற்றிலும் அமைந்து காணப்பட்ட ரேகைகளேயாம். வின்ஸ்ரன் சேர்ச்சில் அவர்களின் குருமேட்டிலே பெரிய 'கிராஸ்' அமைந்துள்ளது. உற்பத்தியில் ஆயுள்ரேகையும், புத்தி ரேகையும் வெவ்வேறானவை. விதி ரேகையைத் தொடர்ந்து சூரியரேகையும் நன்குபடைக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமா? புத்திரேகையின் இறுதியிற் திரிசூலம் துலங்குகின்றதே எனவேதான் வெற்றிதேவதை அவரைக் கட்டித்தழுவினாள். ஆகவேதான் இவர் ஏக சமயத்தில் மிகப்பெரிய ராஜதந்திரியாகவும், [illegible] ஆசிரியாராகவும், யுத்தவீரனாகவும் இறுதிவரை மிளிர்ந்தார்.

## ஐயன்ஸ்டீனின் மேன்மையும் ரேகையும்



பேராசிரியர் ஐயன்ஸ்டீன் ஜேர்மனியிலுள்ள யூதர் வகுப்பிலே பிறந்தவர். தமது இருபத்தாறாவது வயதிலேயே உலகப்பிரசித்தி எய்தினார். இரசாயன ஆராய்ச்சி சம்பந்தமாக பல ஆய்வுகளையும் இயற்றி அருமருந்தன்ன நூலொன்றை வெளியிட்டார். இவரது ஆராய்ச்சி நிதர்சனமாகி, ஆதர்ஷண சக்தி, ஒளியின் வேகம் பற்றிய ஆய்வுகள் பகிரங்கமானதும் நோபல்பரிசு பெற்றார். தத்துவ ஆராய்ச்சிகளிலும் புகழடைந்தார். இவரின் மேன்மைகள் யாவற்றுக்கும் சூரியமேட்டிலே அமைந்துள்ள மூன்று ரேகைகளுமே குறிப்பிடப்படுகின்றன. என்றாலுங்கூட மற்றைய ரேகை அமைப்புக்களையும் நாம் அவதானிக்க வேண்டும்.

## பேரறிஞரின் ரேகைகள்



பேரறிஞர் பேர்னாட்ஷாவின் கை இது. இது தத்துவக்கை என்று இயம்பப்படுகின்றது. இவரின் குட்டையான கையமைப்பே அன்னாரின் குறும்புத்தனமான பேச்சுக்கும் எழுத்துக்கும் முக்கிய காரணமாயிற்று. செவ்வாய் மேடு உயர்ந்திருக்கின்றமையாலும் புதன் விரல் நன்றாக உயர்ந்துள்ளமையும் சுக்கிரமேடு சிறப்பாக காணப்படுகின்றமையும் இவர் சிறந்த நவீனங்களையும் நாடகங்களையும் இயற்றினார் என்பதை செப்புகின்றன. இவர் மகா புத்திமானாகவும் பிரசித்தமான ஆசிரியராகவும் தலைசிறந்த எழுத்தாளராகவும் விளங்கியமைக்கும் இவையே காரணம் மேலும் இவரது கையிலே விதிரேகை சூரியமேட்டுக்குச் சென்றிருக்கிறமை இவரின் மேன்மைகளுக்கெல்லாம் அணி சேர்த்தது. ஆகவேதான் அளவற்ற கீர்த்தியும் பெற்றார்.

கைரேகைக்கலை ஓர் அபூர்வ வித்தை. சோதிடம், எண்சாஸ்திரம் ஆகியவற்றைக்காட்டிலும் துல்லியமானது. நமக்குள்ளேயே கூட நாம் மேற்கண்டவாறெல்லாம் நோக்கிய காந்தியடிகள்தொட்டு பேர்னாட்ஷா வரையாகப் பெரியவர்கள் கூட இருக்கக்கூடும். ஏன்? கின்னஸ் சாதனையாளர்கள் கூட இருக்கக்கூடும். என்வே உங்கள் ரேகைகளைக்கொண்டு உங்களை அறிவீர்களாக.

-தர்மா-

## பெண்

வெட்கத்தின் வதிவிடம்
சொர்க்கத்தில் தனியிடம்
ஆண்வர் க்கம் தன்னிடம்
ஆடவைக்கும் பெண்ணினம்.

தர்க்கத்தில் முதலிடம்
தரணியே அவளிடம்
கவிதையின் கருவிடம்
கன்னியெனும் பெண்ணினம்.

வர்க்கத்தில் வல்லினம்
வடிவத்தில் மெல்லினம்
அடக்கத்தில் இடையினம்
அன்புக்கொரு பெணணினம்.

- புஸ்பகுமார்.

## வேலியும் ஓணானும்

வேலியைப் பார்த்து ஓணான் சிரித்தது;

"சீ! இது என்ன வாழ்க்கை உன்னால் விரும்பிய ஓர் இடத்துக்குப் போக முடிகிறதா? இல்லை, பலபேர்களைக் கண்டு பேசத்தான் முடிகிறதா? நல்ல காட்சிகளைத்தானும் இரசிக்க முடிகிறதா? எப்போது பார்த்தாலும் ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கின்றாயே இதுவும் ஒரு வாழ்க்கையா? இந்த வாழ்க்கையில் உனக்குச் சலிப்பே ஏற்படுவதில்லையா?" என்று ஏளனம் செய்தது.

அதற்கு வேலி, "நான் எவ்வளவு ஒரு பெரும் பொறுப்பான நம்பிக்கைக்குரிய வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன் பார். வீட்டைக் காக்கிறேன். வீட்டிலுள்ள அழகிய பூச்செடி, பயிர்வகைகளை மற்றவர்கள் [illegible] இருக்கிறேன் [illegible] கைக் கொடுக்கிறேன். இப்படி ஏதாவது ஒன்றுகாணும் உன்னால் செய்ய முடிகிறதா? " என்று எதிர்வாதம் செய்தது.

உன்னுடைய அடிமை வாழ்வு சுதந்திரம் அற்றது. சும்மா விட்டுக் கொடாமல் நீ ஏதோதோ புலம்புகிறாய் என்று கூறிவிட்டு, மறுவேலிக்குத் தாவிக் கீாணாமற்போனது ஓணான்.

நாள்கள் உருண்டோடின. ஓணான் பழையபடி அந்த இடத்திற்கு வந்தது. முன்பு, அழகாய் காட்சியளித்த - வீராப்பாய்க் கதைபேசிய வேலியின் பெரும்பகுதி கறையானின் ஆக்கிரமிப்பில் கிடந்தது. இன்றோ நாளையோ என அதன் அழிவுக்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது.

"உனது பொறுப்பான பணியைச் செய்கின்ற இலட்சணம் இதுவா? உன் வீட்டின் பயிர்வகைகளை இந்த இலட்சணத்தில் எப்படிக் காப்பாற்றுவாய்? இந்த வீட்டிற்கு இப்போது அவலட்சணத்தையல்லவா கொடுத்துக் கொண்டிருக்கின்றாய்." என்று ஓணான், மறுபடி வேலியைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தது.

"இந்த உலகத்தில் தோன்றிய அனைத்தும் என்றோ அழிவது நிச்சயம். நாம் வாழ்ந்தோம் என்பது முக்கியமில்லை. வாழும் போது என்ன பணியைச் செய்தோம் என்பது [illegible]ானது. [illegible] வாழும் போது சேவை செய்தேன். இனி ஒன்றுக்கும் உதவாது இறக்கும் போதும் இதோ இந்தக் கறையான்களுக்காவது அடைக்கலமாய் இருக்கிறேன். இதைவிடவேறுஎன்ன பெருமை எனக்கு வேண்டும்" என்றவாறு வேலி நிமிர்ந்தது.

அங்கே ஓணானைக்காணவில்லை. வெட்கத்தில் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டதோ?

- செ.உமா -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

## சில குறிப்புகள்

24

ஆங்கிலத்தில்எழுதி உலகின் கவனத்தை ஈர்த்த இந்திய எழுத்தாளர்களுள் கமலாதாஸையும் கட்டாயம் குறிப்பிட வேண்டும். தம்முடைய கவிதைகள் மூலமும், 'என் கதை' என்ற நூல் மூலமும் பரவலாக அறியப்பட்டவர். 'என் கதை' நடைச் சித்திரங்களின் தொகுப்பு. பலத்த சர்ச்சைகளையும் பரபரப்புகளையும் - வெளியான வேளையில் - ஏற்படுத்திற்று. கமலாதாஸ் தமது தாய்மொழியான மலையாளத்தில் சிறுகதைகளையும் எழுதுகிறார். அவற்றை 'மாதவிக்குட்டி' என்ற தமது புனைபெயரில் அவர் எழுதுகிறார். அக்கதைகள் பலவும் ஆங்கிலத்திலும் பெயர்க்கப்பட்டு, 'சந்தன மரங்கள்' என்ற தொகுதியாக வெளியாகின. கலை நேர்த்திமிக்க பல கதைகள் இத்தொகுப்பில் உள்ளன. அவருடைய ஆங்கிலக் கவிதைகள், 'கல்கத்தாவில் ஒரு கோடை', 'வழிவந்தோர்,' மற்றும் 'தேர்ந்த கவிதைகள்' போன்ற தொகுதிகளாக வெளியாகின.

இலங்கையிலிருந்து ஆங்கிலத்தில் ஆக்க இலக்கியம் படைக்க முன்வந்தோரில், ஜே.விஜயதுங்க, அழகு சுப்பிரமணியம், ராஜா புறொக்டர், ஜேம்ஸ் குணவர்த்தன, பட்ரிக்.ஃ.பெர்னாண்டோ, லக்தாச விக்கிரமசிங்க போன்ற பலர் இருந்திருப்பினும்; மைக்கல் ஒண்டாஜ்ஜேயின் வருகையுடன் தான் இலங்கையின் ஆங்கிலப் படைப்புகள் உலகின் கவனத்தை முழுமையாக ஈர்த்துக்கொள்வது சாத்தியமாயிற்று. 1992ல், அவர் 'புக்கர்'பரிசினை வென்றார். ஆனால், குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதென்னவெனில், அவருக்கு இப்பரிசினை ஈட்டித்தந்த படைப்பு, எவ்விதத்திலும் இலங்கையின் வாழ்வையோ இலங்கையர் வாழ்வையோ தொடக்கூடவில்லை என்பதாகும். 'ஆங்கில நோயாளி' என்ற இந் நாவல் திரைப்படமாகவும் வெளியாகி 1997ல் 'ஒஸ்கார் விருது' பெற்றதன் மூலம் மீண்டும் உலகெங்கும் பேசப்பட்டது. எனினும், இதற்குமுன் வெளியான அவரது படைப்பான 'குடும்பத்தின் கதை', இக்குறையை அடியோடு நீக்கவல்லது. கொழும்புச் செட்டிகள் சமூகத்தில் தோன்றிய ஒண்டாஜ்ஜேயின் பின்னணிகளை சமூகவியல் பதிவாகவும் கலைப்படைப்பாகவும் நாம் காணமுடிகிறது. தமக்குக் கிடைத்த 'புக்கர்'பரிசுப் பணத்தின் மூலம், 'கிறேஷியின் விருது' என்ற ஒன்றினை ஒண்டாஜ்ஜே நிறுவினார். ஒவ்வோராண்டும் இலங்கையில் வெளியாகும் சிறந்த ஆங்கிலப் படைப்பிலக்கியத்திற்கு இது வழங்கப்படுகிறது. ஒண்டாஜ்ஜே தற்போது கனடாவில் வசிக்கிறார்.

ரொமேஷ் குணசேகர எழுதிய 'கடற்பாறை' இங்கிலாந்தில் குடியேறியிருக்கும் ஒருவரின் நினைவோட்டத்தில் இலங்கையின் அண்மைக்கால அரசியல் சமூகநிகழ்வுகளை சித்திரிக்க முயல்வது ஆங்கில வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றிருப்பினும், இலங்கைத் தமிழனான ஒரு வாசகனுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாக அமையுமா என்பது சந்தேகமே. ரொமேஷின் 'மணற்குடுவை' என்ற நாவலும் கடந்த ஆண்டு வெளியாகியுள்ளது.

ஷ்யாம் செல்வதுரை, கொழும்புத் தமிழர். அவருடைய 'விசித்திரமான பையன்', இலங்கைத் தமிழர் பிரச்சினையை கூறுவதாக வெளியுலகில் பெரிதாகப் பேசப்பட்டபோதும், அப்படி அங்கு ஒன்றுமில்லை என்பது எம்மவர் படித்தால் புரியும். இனக்கலவரம் (83) வருகிறது. அதில் பாதிக்கப்படுகிற மேல் தட்டுக் கொழும்புத் தமிழ்க் குடும்பம் ஒன்று வருகிறது. இவற்றினிடையே, ஒரு பாலுறவு கொள்கிறவனான கதையின் முக்கிய பாத்திரம் வேறு. அவன்தான் கதை சொல்பவனுங் கூட. இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஆங்கிலத்தில் ஆக்க இலக்கியமாக உருவாக்க வேறெவரும் இல்லாமல்போன ஒரு காரணத்தைவிட, இந்த நாவலும் இதன் ஆசிரியரும் இவ்வளவு பேசப்படுவதற்கு, வேறெந்தக் காரணமுமிருப்பதாகப் படவில்லை. செல்வதுரையின் அடுத்த படைப்பான 'கறுவாக்காடு'வும் வெளியாகிவிட்டதாகத் தெரிகிறது.

### சாந்தன்

இதேபோல, தமிழர் பிரச்சினையைக் கூறுவதாகச் சொல்லப்படும் இன்னொரு நாவல், 'நினைவு சாகையில்?'. யாழ்ப்பாணத் தமிழராகப் பிறந்த அம்பலவாணர் சிவானந்தனும் பல்லாண்டுகட்கு முன்பே கொழும்புவாசியாகி, 1958 கலவரத்துடன் இங்கிலாந்தில் குடியேறியவர். இடதுசாரியும் தொழிற்சங்கவாதியுமான சிவானந்தனின் இந்த நாவல், மூன்று தலைமுறைகளின் கதையையும் அதன் மூலம் 'இலங்கையின் சமகால சரித்திரத்தையும் வெளிப்படுத்தமுயலும் நீண்ட நாவல். எனினும், முதலிரு தலைமுறைகளூடு இலங்கையின் அரசியல் - தொழிற்சங்க இயக்கங்களின் வரலாறு, வளர்ச்சி - பற்றிய பகுதிகளில் உணரமுடிகிற உண்மையையும் உணர்வையும்; மூன்றாவது தலைமுறையின் கதையில் - இன விடுதலைக்கான ஆயுதப்போர் பற்றிய பகுதியில் - காணவே முடியவில்லை என்பது ஒன்றும் அதிசயமானதல்ல. இந்த மண்ணினின்றும் எப்போதோ அந்நியப்பட்டுப்போய், வெறும் செய்திகளை வைத்து 'இலக்கியம் தயாரிக்கும்' வேளைகளில் இப்படியான ஆபத்துக்கள் நிகழ்வது தவிர்க்கமுடியாதது. ஆனால், அவலமென்னவெனில், இவற்றையே தமிழரது வாழ்நிலையினதும், போராட்டத்தினதும், படப்பிடிப்பாக வெளியுலகு ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதுதான். புலம்பெயர்ந்தோரின் தமிழ் எழுத்துக்கள் ஏற்படுத்தும் பாதிப்பிலும் ஆங்கில எழுத்துக்கள் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு பலமடங்கு அதிகம்.

காள் முல்லர், இலங்கையின் பறங்கியர் சமூகத்தைச் சார்ந்தவர். 'ஜாம் மரம்' என்ற நாவலுடன் அறிமுகமான முல்லர் அதன் மூலம் பரவலான வரவேற்பும் பெற்றார். கீழ் மத்தியதர பறங்கிக் குடும்பமொன்றின் கதையை - அச் சமூகத்தின் குறியீடாகவும் - இந்நாவலில் முல்லர் பதியவைத்தார். அவருடைய இன்னொரு தனித்துவமான அம்சம், கலைக்கு ஊறு செய்யாமல் இழைத்தோடும் நகைச்சுவை. 'ஜாம் மர'த்தைத் தொடர்ந்து. 'கொழும்பு', 'சிங்கராஜாவின் பிள்ளைகள்' போன்ற படைப்புகளும் வெளியாகின.

இந்த இடத்தில் றெஜி சிரிவர்த்தனவின் 'எனது நினைவுப் பொருள்களிடையே' என்ற நாவல் பற்றிக் குறிப்பிடவேண்டும். புத்திஜீவியாகவும், நாடகாசிரியராகவும், எல்லாவற்றிலும் மேலாக விமர்சகராகவும் அடையாளம் பெற்றிருந்த சிரிவர்த்தனவின் இரண்டாவது படைப்பு இது. முதலாவதான, 'தொலைந்த லெனோர்' அவ்வளவு குறிப்பிடக்கூடியதன்று. 'நினைவுப் பொருள்களும்' ஒரு விதத்தில் சிவானந்தனின் நாவலை ஒத்தது. முப்பதுகளிலிருந்து - நனவோடை மூலம் - நகர்கிற கதை. எனினும், உண்மை - அநுபவங்களின் பிறப்பாக இப் படைப்பு அமைவதால் சிவானந்தனின் படைப்பிலும் சிறப்பானதாகவே படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினை பற்றிய சிறந்த இலக்கியங்களை உருவாக்க வேண்டுமென்ற நன்னோக்கு சிங்கள - ஆங்கிலமொழி எழுத்தாளர்கள் பலரிடையே இருந்தாலும் பிரச்சினை பற்றிய பூரணமான புரிந்துணர்வின்மையும், சரியான கண்ணோட்டம் மற்றும் அவசியமான அநுபவங்கள், உணர்வுகள் என்பன மட்டுப்படுத்தப்பட்டமையும் காரணமாக, அவர்களின் படைப்புகள் ஒன்றில் திரிபு கொண்டவையாகவோ அன்றி உயிரற்று எதுவுமேயில்லாதவையாகவோ போய்விடுகின்றன. ஒருவிதத்தில் பார்த்தால், தமிழிலேயே கூட இந்த வெற்றிடமும், இயலாமையும் இன்னுந் தொடர்கையில் பிற மொழிகளில் சரியான ஆக்கங்கள் வெளிவரவில்லை என எண்ணுவதுங் கூட சற்று அதிகப்படியானதாகவே படுகிறது. எப்படியோ, எம் மண்ணினதும் மக்களினதும் சமகால வரலாறானது எம் மொழியிலென்றாலும் - சரியான இலக்கியங்களாகப் பரிணமித்து, உலக இலக்கியப் பரப்பில் பொருந்திக் கொள்ளவேண்டிய தேவையும், அதற்கான வெற்றிடமும் இன்னமும் இருக்கவே செய்கின்றன. இந்த வாழ்வின் வெளிப்பாடான இலக்கியங்கள், இந்த நூற்றாண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த நூற்றாண்டிலாவது உருவாகி, உலக இலக்கிய வரிசையில் இடம் பிடிக்கும் என்பது எவ்விதத்திலும் யதார்த்தத்திற்கும் முரணான எதிர்பார்ப்பன்று. (தொடரும்)

# ஜனாதிபதித் தேர்தல் தமிழர்......

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையைச் சொல்லப்போனால், சந்திரிகா பதவிக்கு வந்த ஆரம்பத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பார் என்றே தமிழ் மக்கள் நம்பினார்கள். அவருக்கு வாக்குமளித்தார்கள். 62சதவீத வாக்குகளைப் பெற்ற அவருக்கு இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அரசியல் துணிச்சல் வரும் என்று எண்ணினார்கள். ஆனால் அந்த நம்பிக்கைகள் எல்லாம் தவிடுபொடியான நிலையில் இப்போது மனம் சோர்ந்து போயுள்ளனர். நம்பிக் கெடுவதற்கு இனியும் இடமளிப்பதா என்ற கேள்வியே ஒவ்வொரு தமிழன் மனதிலும் எழுந்து நிற்கிறது.

சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்போவதாக இனிப்பாகப் பேசிய சந்திரிகா, ஒரு கட்டத்தல் போரினூடாகச் சமாதானத்தை அடையப்போவதாகக் கூறி தமது வழியை மாற்றிக் கொண்டார். தமது அரசியல் தீர்வுப் பொதியை நிறைவேற்ற முடியாமல் ஐக்கியதேசியக் கட்சியும் தமிழீழ விடுதலைப்புலிகளுமே முட்டுக்கட்டை போடுவதாக ஜனாதிபதி கூறினாலும் அவர் போரின் பக்கம் சாய்ந்தாடியதே முட்டுக்கட்டைக்கு மூலகாரணம் என்பதனை மறைக்க முயல்கிறார்.

நாட்டின் முந்திய தலைவர்களைப் போலவே, தமிழர் பிரச்சினையைத் தமக்கு வாக்குத் தேடும் கருவியாக்க இவர் மீண்டும் முனைந்திருக்கிறார் என்றே தமிழர்கள் கருதுகிறார்கள்.

ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கா வெற்றியீட்டினும் கூட, ஜே.ஆர்., பிரேமதாசா, விஜேதுங்கா வழிகளைவிட புதிய வழி செல்வார் என்று எவ்வாறு நம்புவது? தெற்கின் தலைவர்கள் எவரும் தமிழர் விவகாரத்தில் சொன்னபடி நடக்கவில்லை. அதிகாரக் கதிரையில் ஏறிய பின்னர் தங்கள் நடவடிக்கைகளையும் இயல்புகளையும் மாற்றிக் கொள்வதே அவர்களது வழக்கம் எப்படியோ ஒரு வழியில் சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் ஆட்கொள்ளப்பட்டு விடுகிறார்கள். பிறகு அவர்களால் தமிழர்களுக்கு உதவ முடிவதில்லை.

சிங்களத் தலைவர்களின் பின்னால் நிற்காமல் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தினால் அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட முடியும் என்ற கருத்து ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தல் வந்த பின்னர் நிலவியது. தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக வெற்றிபெறுவது இயலாத காரியம். எனினும் தமிழர்களின் வாக்குகளே சிங்களத் தலைவர்களின் வெற்றியை நிர்ணயிக்கும் என்பதனைத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் நிரூபித்துக் காட்டலாம் என்ற கருத்தும் கொழும்பில் தமிழ் அரசியல் வட்டாரங்களில் நிலவியது. தமிழ்க் கட்சிகள் சேர்ந்து பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் அதனால் பயன்தரு விளைவுகள் ஏற்படுமா என்பது குறித்தும் ஆராயப்பட்டது. விடுதலைப்புலிகளின் அனுசரணையுடன் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தலாம் என்றும் சில வட்டாரங்களில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. எனினும் எதுவித ஏற்பாடு மிச்சமாகும் என்று சொல்வதற்கு காலம் இன்னும் தேவை.

வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் திகதி நவம்பர் 11ஆக இருக்கும் என ஊகிக்கப்படுவதால் அரசியல் நிலைப்பாடுகள் அதனை அண்டியே தெரியவரும்.

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் 1994 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் முழுஅளவில் வாக்களிக்கவில்லை. தீவுப் பகுதியில் மட்டும் கணிசமான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டனர். ஏனைய பகுதிகளில் பெயருக்குத் தேர்தல் நடைபெற்றது.

1988 டிசம்பர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே வாக்களிப்பு குடாநாட்டில் இடம்பெற்றது. அப்போது இந்திய அமைதிப் படை இங்கு நிலைகொண்டிருந்தது.

1982ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி(ஜே.ஆர்.)பதவிக்காலத்தை நீடிக்கும் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்றபோதே குடாநாட்டில் முழுஅளவில் தேர்தல் இடம்பெற்றது.

இப்போது அரசாங்க நிர்வாகம் இங்கு முழுஅளவில் நடைபெறுவதால் 1982 நிலைமை மீண்டும் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் மக்கள் ஆர்வத்தோடு வாக்களிப்பர் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிடும் பட்சத்தில் இங்கு அரசியல் நிலைமையில் மாற்றம் ஏற்படவும் கூடும்.

# 35 ஆண்டுகள்.......

(Xஆம் பக்கத் தொடர்ச்சி)


புகைப்படத்துடன் முழுவிவரம் கொடுக்க, குடும்பப்பின்னணி ஆராய்வு, பொருத்தம்பார்த்தல், சீதனம், 'டொனேஷன்', பெண்பார்த்தல் எல்லாம் முடிந்து அழைப்பிதழும் அடிக்கப்பட்டுவிட்டது.

ஓமான் போய்ச் சீமானாக விரும்பியவர், மணமகனாகி குடும்பஸ்தனாகத் தயாராக்கப்பட்டார். வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டிய ஏஜென்ஸி தரகர் மணவறைக்கு அனுப்பிவைத்தார். கலியாணத்தரகர் ஒருவர் இந்த ஏஜென்ஸி தரகரை அடிக்கடி சந்திக்க வரும் தகவல் எங்களில் சிலருக்கு வெளியாகியது.

இந்தத் தரகர்களின் சந்திப்பால் ஏற்படக்கூடிய 'மங்கள விபத்து' எங்களுக்கு ஏற்பட்டிருக்க நியாயமில்லை. ஏனெனில், நாங்கள் ஏற்கனவே இந்த விபத்தில் சிக்கிவிட்டவர்களாகவும், தந்தையரும் ஆகிவிட்டிருந்தோம். இல்லாதுவிட்டாலும் கூட, எங்களைப் 'புகைப்படம்' ஒன்றே எங்களைப் பாதுகாத்திருக்கும். (தொடரும்)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.125




### சொற்சிலம்பம் இல. 125

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................................

விலாசம்: ..........................................................................

..........................................................................

..........................இங்கே வெட்டுக..................................

முடிவுத் திகதி:- 29-10-1999

### இடமிருந்து வலம்

1. கால் கழுவுதல். 5. சத்த. 7. பிணை. 8. இடையன். 10. ஒரு திசை. 11. தகுதியில்லாத நிலை. 12. திருக்கூட்டத் தலைவன். 14. குழந்தை. 17. ஒன்று. 18. கட்டுப்பாடற்றவன். 19. ஒரு வள்ளல். 20. அருகே. 21. மனைவி, தொடவேண்டாம் என்றது இவரை.

### மேலிருந்து கீழ்

1. பதினெண் புராணங்களுள் ஒன்று. 2. தாம்பாளம். 3. துப்பாக்கியை இயக்குவதற்கான உத்தரவு. 4. ஈகையாளன். 5. பேச்சுவன்மை 6. இயல்பு 9. தாபமடை. 11. நிறைகோல். 13. சிம்பு. 15. அஞ்சாமை. 16. கருணாநிதிக்கு அடைமொழி இது. 17. இரண்டொரு. 18. பொருத்தமான. 19. அரைவாசி. 20. பன்மையைக் குறிப்பது.

### சொற்சிலம்பம் 123 இன் விடைகள

### இடமிருந்து வலம்

1. அவமரியாதை. 7. கண்ணி. 8. சலங்கை. 9. வடு. 10. நுகம். 11. சகம். 12. கூன். 13. பாவலர். 15. ஆம். 16. குரோதம். 17. பதி. 19. சிக்கல். 20. ஏகம். 21. சுகம். 22. தழும்பு.

### மேலிருந்து கீழ்

1. அகவற்பா. 2. வண்டு. 3. மணி. 4. யாசகம். 5. தைலம். 6. பகைவன். 10. நுகர்தல். 11. சலரோகம். 12. கூம்பகம். 14. வகுக்க. 18. திம்பு. 19. சிசு. 20. ஏழு.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

| | |
|---|---|
| **முதலாம் பரிசு:-** | க.பிரசாந்தி,<br>இல 288, பிரதான வீதி,<br>யாழ்ப்பாணம். |
| **இரண்டாம் பரிசு:-** | திருமதி மு.சுலோச்சனா,<br>பிராந்திய ஆணையாளர் அலுவலகம்,<br>யாழ்ப்பாணம். |
| **மூன்றாம் பரிசு:-** | சி.பானுருபன்,<br>பொன்னம்பல வித்தியாலயம்,<br>கரணவாய், கரவெட்டி. |

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 124 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு:- நம்பி

# பசி வந்தால்...

கோதார் என்ற நாட்டை ராஜராஜன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அதிகவரி விதித்து மக்களைக் கொடுமைப்படுத்தினான். எதித்துக் கேட்பவர்களைச் சிறையில் அடைத்தான்.



இதனால் மக்கள் மிகவும் வருத்தினர். இந்நிலையில் நாட்டில் பருவமழையும் பெய்யாது போகவே, பஞ்சம் ஏற்பட்டது. அரசனோ இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் அரண்மனையில் சொகுசாக வாழ்ந்தான்.

ஒருநாள் அரசன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். அடர்ந்த காட்டில் நண்பகல் வேளையில் பசியும் தாகமும் அவனை வாட்டின. உணவுக்காகப் பழங்களைத் தேடினான். மரங்களெல்லாம் வெயிலில் வாடிக் கிடந்தன. தாகம் தீர்க்கும் நீரோடைகளும் வறண்டிருந்தன.

தொலைவில் ஓர் ஆச்சிரமம் தெரிய, நம்பிக்கையுடன் அரசன் அங்கே சென்று உணவும் நீரும் கேட்டான்.

ஆச்சிரமத்தின் தலைவரான முனிவரும், 'மன்னா! உனக்கு உணவும் நீரும் தருகிறேன். பதிலுக்கு நீ ஒரு வருடத்திற்கு உன்ஆட்சி உரிமையை எனக்குத் தரவேண்டும்' என்று நிபந்தனையோடு அவனுக்கு உதவ முன்வந்தார்.

பசியாலும் தாகத்தாலும் அரைமயக்க நிலைக்கு வந்துவிட்ட அரசன், இனியும் தாமதித்தால் உயிரே போய்விடும் என்று பயந்து, முனிவர் கேட்டதைத்தர ஒப்புக் கொண்டான்.

அதன்பின்னர் உணவும் பழமும் நீரும் வழங்கினார் முனிவர். அரசன் பசிதீர உண்டான். போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது அவனுக்கு.

உணவு உண்டு முடித்த அரசன், அரசாளும் உரிமையை ஓராண்டுக்கு முனிவருக்கு எழுதிக்கொடுத்தான். அதனைப் பெற்றுக்கொண்ட முனிவர், "பார்த்தாயா மன்னா! உன் ஆட்சி, அதிகாரம், செல்வம், செல்வாக்கு அத்தனையும் பசி, தாகத்தின் முன் பயனின்றிப் போய் விட்டதை? மக்கள் இப்பசிக் கொடுமையைத்தானே தினமும் அனுபவிக்கிறார்கள்; பசியால் வாடுகிறார்கள். மக்களின் பாதுகாவலான நீ அவர்களின் குறையைத் தீர்க்க அக்கறை கொள்ளாமல் இருக்கிறாயே?' என்று மக்கள்படும் துயரை அரசனுக்குப் புரியவைத்தார்.

முனிவரின் அறிவுரையால் மனம் தெளிந்த மன்னனும் 'முனிவர் பெருமானே! பசியின் கொடுமையை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். இனி மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு நல்லாட்சி செய்வேன்' என்று முனிவரிடம் உறுதியளித்தான்.

முனிவரும், அரசன் தனக்கு எழுதித்தந்த அரசுரிமையை அவனுக்கே திருப்பி அளித்து அவனை வாழ்த்தி அனுப்பிவைத்தார்.

- இ.தீன். -

# ஏமாந்த புழுக்கள்!



நகரமொன்றின் ஒதுக்குப்புறத்தில் பெரிய குப்பைமேடு ஒன்று இருந்தது. அந்தக் குப்பை மேட்டிற்கு அருகே ஒரு குட்டிச்சுவரும் இருந்தது. அதன் அடிப்பாகத்தில் ஒரு சின்னக்குழி இருந்தது. அந்தக் குழி சுவருக்குக் கீழே பூமியில் நீண்டிருந்தது. அந்தக் குழிக்குள் ஒரு புழுக் குடும்பம் வாழ்ந்து வந்தது. அப்பாப்புழு, அம்மாப்புழுவுடன் எட்டுக் குட்டிப் புழுக்களும் இருந்தன.

'குழந்தைகளே! இந்தக் குழிக்குள் நீங்கள் தாராளமாக ஓடி விளையாடலாம். ஆபத்து எதுவும் வராது. ஆனால், மறந்துபோய்க் கூட குழிக்கு வெளியே போய் விடாதீர்கள்' என்று எச்சரித்தது அப்பாப்புழு.

'ஏன்? போனால் என்ன நடக்கும்? நாங்கள் எத்தனை நாள்களுக்குத்தான் இந்த இருட்டுக் குழிக்குள்ளேயே அடைபட்டுக்கொண்டு இருப்பது?'

'அண்ணன் கேட்பது சரிதானே? எதற்காக வெளியே போகக்கூடாது என்று கூறுகிறீர்கள்? வெளியுலகைப் பார்க்கவேண்டும் என்று எங்களுக்கு ஆசை இருக்காதா?' என்று குட்டிப் புழுக்கள் எல்லாம் அப்பாப் புழுவை மாறி மாறிக் காரணம் கேட்டன.

'சரி! காரணத்தைச் சொல்கிறேன். அங்கே கோழி என்று ஒரு பிரம்ம ராட்சச இனம் இருக்கிறது. அவை உங்களைக் கண்டால் கொத்தி விழுங்கிவிடும்' என்றது அம்மாப்புழு.

'நாங்கள் வெளியே சென்று ஆபத்தைத் தேடிக்கொள்ளமாட்டோம்' என்று உறுதி அளித்தன எல்லாக் குட்டிப் புழுக்களும்.

எனினும் அவற்றுக்கு வெளிஉலகைப் பார்க்கும் ஆசைவிட்டுப் போகவில்லை.

ஒருநாள் பெற்றோர்கள் கவனிக்காத நேரம் பார்த்து எல்லாக் குட்டிப் புழுக்களும் மெதுவாகக் குழியின் வாயிலுக்கு அருகே வந்து சேர்ந்தன.

'கொக்கரக்கோ!' என்று வெளியே சேவலின் குரல் கம்பீரமாகக் கேட்டது.

'எத்தனை அழகான, கம்பீரமான குரல்! இதுவரை நாம் இந்தக் குரலைக் கேட்டதே இல்லையே!' புழுக்கள் வாய்விட்டுத் தங்களது வியப்பை வெளிப்படுத்தின.

'கொக்கரக்கோ என்றது யார்?' என்று துணிவாகக் கேட்டது மூத்த புழு.

'நான்தான் கோழிகளின் ராஜா. நீங்களெல்லாம் யார்? எங்கேயிருந்து கதைக்கிறீர்கள்?' என்று கேட்டது சேவல்.

'நாங்களெல்லாம் புழுக்கள். இந்தக் குழிக்குள் இருக்கிறோம்.'

'நீங்கள் எத்தனைபேர்?' என்று ஆவலாகக் கேட்டது சேவல்.

'நாங்கள் அண்ணன் தம்பியாக மொத்தம் எட்டுப்பேர்' என்றன புழுக்கள்.

'அப்படியா? வெளியே வாருங்களேன்! என் தலையில் அழகான கொண்டை இருக்கிறது. நான் ஆடுவேன்; கூவுவேன்; உங்களுக்கு இந்த ஊரைச் சுற்றியும் காண்பிப்பேன்' என்று இனிமையான குரலில் ஆசைகாட்டி அழைத்தது சேவல்.

அம்மா, அப்பாவின் அறிவுரைகளைக்கேளாத எட்டுக்குட்டிப் புழுக்களும் சேவலின் ஆசை வார்த்தைகளில் மயங்கி ஒன்றன்பின் ஒன்றாக வெளியே வந்தன. எல்லாப் புழுக்களும் வெளியே வரும் வரை பொறுமையாகக் காத்திருந்த சேவல், தன் உறுதியான அலகினால் எல்லாப் புழுக்களையும் கொத்தித்தின்றது.

பெற்றோர் சொல்லைக் கேட்டு நடவாதவர்களுக்கு இந்தக்கதிதான் நேரும்.

- பூ. இனியவன் -

# எழுதம்பி!

சாய்ந்து சரிந்து அமராதே
சலுகை கேட்டுப் பழகாதே
ஒய்ந்து கிடக்க நினையாதே
உதவி கேட்டே குனியாதே!

முடியாதென்று முடங்காதே
முயற்சி செய்யத் தயங்காதே
கெட்டோம் என்று துடிக்காதே
கெடுத்தார் என்று வெடிக்காதே!

மலையும் வளையும் உழைப்பாலே
மனமே எல்லாம் மறக்காதே
அலைபோல் தொடர்ந்து சிந்திப்பாய்
அறிவே துணையாய் முந்திப் போ!

உன்னால் முடியும் எழுதம்பி!
உலகே இருக்கு உனை நம்பி!
மின்னல் கீற்றாய் நீ இல்லை
நீ மேலெழும் சூரிய ஒளிப்பிள்ளை!

- அ.தென்னகன் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org